263

Regd. No. M. 4162. மாத வெளியீடு

சக்தி

மலர் - 4 இதழ் - 3 விக்கிரம - பங்குனி அணா நான்கு

Tel. : "TALKOFILM."   Phone No. 53 & 53-A

விரைவில் வெளிவரும்

1941-ல் சிறந்த படம்

விபரங்களுக்கு :—

முருகன் டாக்கி பிலிம் கம்பெனி

8, சின்னக்கடைத் தெரு,

மதுரை

புதிய "எச். எம். வி." வெளியீடு

முன்னொரு தடவை சென்னை ரேடியோ
நிலையத்தின் மூலம் ஒலிப் பரவியது

எல்லா "எச். எம். வி." கிராமபோன் வியாபாரிகளிடமும் கிடைக்கும்

2 ரிகார்டுகள் :: 18110-11 :: செட் நெ. 293

While You are in Search of :—

Latest Models } In
Up-To-Date Designs } Gold & Silver Wares

JUST STEP IN !!

RADHA'S JEWELLERY SHOW ROOM



QUITE WORTH NOTING & REALLY GUARANTEED
IN ALL BOTH FOR QUALITY & DURABILITY

FOR GENTS :—Golden Rings, Wedding Rings, Enamel Rings, Neck Fancy Chains, Buttons-Stone Stead Etc., Etc.,

FOR LADIES :—Latest Necklaces, Gold Chains, Oddiyanams, Vanki, Bangles of Innumerable Variety- Enamelled in Attractive Designs and Patterns.

SILVER WARES :—Tumblers, Tea Sets, Toy Sets, Jugs, Fancy Designed, Pattaikolusu & Enamelled.

MADE TO ORDER OR READY

PLEASE CALL
PHONE NO. 37
Telegrams : "RADHA"

G. RADHAKRISHNA CHETTY
JEWELLER
BIG BAZAAR STREET, TRICHY

எல்லா விதமான

பழ தினுசுகள்

எங்களிடம் குறைந்த விலையில் கிடைக்கும்

தினந்தோறும் புதிய சரக்குகள்
வந்துகோண்டே யிருக்கின்றன

வெளியூர் ஆர்டர்களே

எமது முக்கிய வியாபாரம்

வெளியூர் ஆர்டர்கள் பொறுப்பான
மேற்பார்வையில் அனுப்பப் படுகின்றன.

விபரங்களுக்கு :

FANCY FRUIT STALL
5, CORPORATION FRUIT MARKET
ESPLANADE, MADRAS

எமது கண் டாக்டர்களால் இலவசமாய் கண்களை பரிசோதித்து
உயர்ந்த மூக்குக் கண்ணாடிகள் கொடுக்கப்படும்.
திருப்திக்கு உத்தரவாதம்



விக்ஸன் அண்டு கோ., மூக்குக்கண்ணாடி வியாபாரிகள்,
173, பிராட்வே, மதராஸ்.

THREE COLOUR
Process Blocks



M.C. APPASAWMY CHETTY & Co.
COLOUR HALFTONE & LINE
BLOCK MAKERS
14, Jone's St., Mannady,
MADRAS

வைத்திய சிம்ஹம், வைத்திய பூபதி,
வைத்திய ஆசிரியர் & R. I. M. P. என்ற பட்டங்களும்,
அநேக தங்க மெடல்களும், நற்சாக்ஷிப் பத்திரங்களும் பரிசுபெற்றவருமான
திருச்சி டாக்டர் T. C. சிங்காரம் அவர்களின்

"சித்தாமிர்தம்" (ரெஜிஸ்டர்டு)

(மிகுந்த பலத்திற்கும் வீரிய விருத்திக்கும் நிகரற்றது)

கைகால் அசதி, இடுப்பு வலி, பலஹீனம், நரம்புத் தளர்ச்சி, ஆயாசம், சோகை, பாண்டு, நித்திரையின்மை, சோம்பல் முதலியவைகளை நீக்கி இரத்த விருத்தியையும் அபார தாது விருத்தியையும் உண்டாக்கும். ஆண், பெண், சிறுவர், வயோதிகர் யாவரும் சாப்பிடலாம். பத்தியமில்லை. பெரிய சைஸ் விலை : ரூ. 4—8—0. ஒரு சேர் விலை : ரூ. 2—8—0. அரை சேர் விலை : ரூ. 1—6—0.

சூதக சஞ்சீவி எண்ணெய்

(ஸ்திரீகளுக்கு ஏற்றதோர் அபூர்வ சஞ்சீவி)

ஆயிரக்கணக்கான ஸ்திரிகள் சூதக சிக்கல் வியாதியினின்று விடுபட்டு ஷை மருந்தால் நற்சுகம் அடைந்திருக்கிறார்கள். சூதகம் காலந்தவறி வெளியாதல், அதுசமயம் ஏற்படும் பொறுக்கமுடியாத வயிற்றுவலி, இடுப்பு வலி, கைகால் குடைச்சல், பெரும்பாடு, கெற்ப அழிவு முதலியவைகள் குணமாக கெற்ப உற்பத்தியு முண்டாகும்.

பாட்டில் 1-க்கு விலை ரூ. **2—0—0** பாக்கிங் தபால் செலவு பிரத்தியேகம்.

இவ்விடம் சகல வியாதிகளுக்கும் குணமுள்ள மருந்துகள் கிடைக்கும்
வெளியூர் ஆர்டர்களை கவனித்து அனுப்பப்படும்.

மகா சந்தனாதி தைலம்—கண்களுக்கும் மூளைக்கும் குளிர்ச்சியைக் கொடுக்கும் சிறந்த ஸ்நானத் தைலம். கண்ணாஸ்பத்திரி டாக்டர்களாலும் வக்கில்களாலும், ஆயிரக்கணக்கான பள்ளிக்கூட மாணவர்களாலும் புகழ்ந்து போற்றிவரும்படியானது. ஒரு முறை உபயோகித்துப் பார்த்தால் உண்மை விளங்கும். விலை : முழுடின் 24 அவுன்ஸ் ரூ 4-0-0 ; 12 அவுன்ஸ் ரூ. 2-2-0 ; 6 அவுன்ஸ் ரூ. 1-2-0.

டி. சி. சிங்காரம் அண்டு கோ.,
சித்தானந்த பார்மசி, தெப்பக்குளம் P. O., திருச்சி

17 JUL
MADRA

கவனியுங்கள் ! தக்க லாபம் !!

எங்களிடம் பலவிதமான கேடியாரங்கள்
குறைந்த விலைக்கு உத்திரவாதத்துடன் கிடைக்கும்

No. 1914

கேடியார ரிப்பேர்கள் தேர்ச்சி பெற்ற பேர்களைக்கொண்டு குறித்த காலத்தில் உத்திரவாதத்துடன் செய்து அனுப்பப்படும்.

No. 1914. சுபீரியர் ஸ்டேபிரைட் (Staybright Steel back) 15 ஜுவல்கள் உள்ளது. நீண்டகாலம் யாதொரு ரிப்பேர் அன்றி சரியான காலம் காட்டக்கூடியது. 2 வருஷம் உத்திரவாதம். லீவர் வாட்சு சதுர சையிஸ் உள்ளது. ரூ. **21-0-0**.

No. 101. 10 வருஷம் உத்திரவாதமுள்ள ரோல்டு கோல்டு இலிசா (Elisa Lever) லீவர் ரெக்டாங்குலர் ரிஸ்டு 15 ஜுவல்கள் உள்ளதும் $7\frac{3}{4}$ சையிஸ் 5 வருஷம் உத்திரவாதமுள்ளது. ரூ. **31-0-0**.



Elisa
No. 101

No. 102. ஷை மாதிரி எவர் பிரைட் ஸ்டீல் ரூ. **29-0-0**.
No. 103. ரோல்டுகோல்டு காப்டன் (Captain Lever)
$7\frac{3}{4}$ சையிஸ் ரெக்டாங்குலர் 16 ஜுவல்கள் உள்ளது.
(West End Pattern) 5 வருஷம் உத்திரவாதமுள்ளது. ரூ. **41-0-0**.

வரவழைத்து திருப்தி யில்லாவிடில் ஒரு வாரத்தில் பணம் வாபஸ் செய்யப்படும். ஆர்டர் செய்வோர்களுக்கு அழகிய கிருஷ்ணன் போட்டோ கியாலண்டர் இனாமாக அனுப்பப்படும்.

மானேஜர் : **நியூ அமெரிக்கன் வாட்சு கம்பெனி,**
201, பெரிய கடைவீதி, திருச்சிராப்பள்ளி.

ஆர்டர் அனுப்பும்பொழுது "சக்தி" யில் கண்டது என்று குறிப்பிடவும்.

ஓடியன்
புதிய வெளியீடு
திருச்சி தியாகராஜ் பிலிம்ஸ், லிமிடெட்
தயாரித்த
"திருநீலகண்டர்"
டாக்கி பாட்டுகள்
M.K.தியாகராஜ பாகவதர்
C.A.1375 { பவளமால் / மறைவாய்
செருகளத்தூர் சாமா
C.A.1376 { நானோர் பரதேசி / உணவு தரும்
G.H.RAO
SARASWATHI STORES, MADRAS.

கேட்போர் உள்ளம் பரவசமடையச் செய்யும் செவிக்கினிய கானம்!

எம். எஸ். சுப்புலக்ஷ்மி நடிக்கும்

சகுந்தலை

கண்ணைக் கவரும் அழகிய காட்சிகள்!

[வாரத்துக்கு வாரம் திரளான ஜனங்கள்
பார்த்துச் செல்லும் இவ்வரிய படத்தை
நீங்கள் பார்த்தாயிற்று?]

இல்லையானால்

சென்னை

பிரபாத்தில்

உடனே பார்த்து மகிழுங்கள்

★

7 வது வாரம்

29-3-41 சனி முதல்

தினசரி 3 காக்ஷிகள்

விரைவில் வெளி வருகிறது!

திருவள்ளுவர்

செருகளத்தூர் சாமா	M. லக்ஷ்மணன்
காளி N. ரத்னம்	T. R. ராமச்சந்திரன்
திருநெல்வேலி பாப்பா	M. லக்ஷ்மி

T. V. A. பூரணி முதலியோர் நடித்தது

DISTRIBUTORS:

FAMOUS TALKIE DISTRIBUTORS, MADRAS.

ஒரிஜினல் தியாகராஜா மெடல் ஜுவல்லரி ஒர்க்ஸ்

183, சைனு பஜார் ரோட் (மைசூர் கேப் Meals Section பில்டிங் பக்கத்தில்)

சவரன் பொன்னுக்கு சமானமானதும் 3 வருஷம் நீடித்து உழைக்கக்கூடியதுமான



எமது கம்பெனியின் நகைகள் நிறத்திலும் உழைப்பிலும் கொஞ்சமேனும் மாருது, 10 வருஷ காலமாக பிரக்யாதி பெற்று விளங்கும் எமது ஒரிஜினல் தியாகராஜா மெடல் நகைகளை வாங்கி அணியுங்கள். எப்போதும் ஷை போர்டை கவனித்தோ அல்லது ஆர்டர் மூலமோ தருவித்துக் கொள்ளுங்கள். இந்த பேப்பரைக் குறித்து எழுதுபவருக்கு ரூபாய்க்கு ஒரு அணு வீதம் கமிஷன் கழித்து அனுப்பப்படும். (கேட்லாக்கு இனும்).

இனிமேல்

வெப்ப காலமே இல்லை!

*

கீழ்க்கண்ட விலாஸத்திற்கு எழுதவும்

NATIONAL ELECTRIC CO.

256, China Bazaar Road
MADRAS.

ஸினிமா நட்சத்திரங்கள்

பாடியுள்ள எல்லா

டாக்கி ரிகார்டுகளை

இன்றே கேட்டு ஆனந்த மடையுங்கள்

மாடர்ன் மியூஸிகல் மார்ட்

289, சைனு பஜார் ரோட், மதராஸ்.

(கார்பொரேஷன் புரூட்மார்க்கட் எதிரில்)

Phone : 2002. Telegram : NATHELLA.

நாதெள்ள சம்பத்து செட்டி & ஸன்

177, சைனு பஜார் ரோட், மதராஸ்.

எங்களிடம் உத்திரவாதமான

பொன் நகைகளும், வெள்ளி சாமான்கள் 'தற்கால நாகரீகத்துக் கேற்றபடி கிடைக்கும் யந்திரத்தினல் செய்யப்பட்ட வெள்ளி சாமான்கள் மொத்தமாகவும் சில்லரையாகவும் கிடைக்கும்.

For everything Electrical please go to:—**DECCAN ELECTRIC EMPORIUM**
289, ESPLANADE, MADRAS.

சந்தா விகிதம்

உள் நாடு

வருடச் சந்தா	... ரூ.	3 0 0
6 மாதம்	... „	2 0 0
தனிப்பிரதி	... „	0 4 0

	பர்மா	மலேயா
வருடச் சந்தா	ரூ. 4 0 0	ரூ. 5 0 0
6 மாதம்	„ 2 4 0	„ 2 12 0

சிலோன் 25 சதம்

மாதிரிப் பிரதி வேண்டுவோர் தபாற் செலவு சேர்த்து அனுப்புதல் வேண்டும்.

ஆசிரியர் அறிவிப்பு

'**சக்தி**'க்குக் கதை, கட்டுரை, கவிகள் அனுப்புவோர், காகிதத்தின் ஒரே பக்கத்தில் தெளிவாய் எழுதி யனுப்ப வேண்டுகிறோம்.

கதை, கட்டுரை, கவிகளைத் திருத்தவோ, கூட்டவோ, குறைக்கவோ, மாற்றவோ ஆசிரியருக்குப் பூரண உரிமையுண்டு.

பிரசுரிக்கப்படாத கதை, கட்டுரை, கவிகளைச் சாத்தியமான மட்டில்தான் திருப்பி அனுப்பப்படும். உறுதி கூற முடியாது. அப்படித் திருப்பிப் பெற விரும்புவோரும், தங்கள் விஷயத்தை அனுப்பும்போது கூடவே போதிய தபால் தலை வைத்து அனுப்பவேண்டும்.

ஆசிரியர்,
'**சக்தி**'

அறிக்கை

சந்தா பாக்கி உள்ளவர்கள் தங்கள் சந்தாக்களை அனுப்புவதுடன், பத்திரிகை விஷயமாக தகவல் எழுதும்போது சந்தா நெம்பர்களைக் குறித்தனுப்ப வேண்டுமாய் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

நமது பிரதிநிதி : நமது பிரதிநிதி **திரு. ரா. பாலசுப்ரமண்யம்** 'சக்தி'யின் அபிவிருத்தி நாடி தமிழ் நாடெங்கும் சுற்றுப் பிரயாணஞ் செய்து வருவதால் ஆங்காங்கு உள்ள நண்பர்கள், அவருக்கு ஒத்தாசை புரிந்து இயன்ற ஆதரவு தருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மானேஜர்,
சக்தி காரியாலயம்,
சென்னை.

பொருளடக்கம்

காலச் சுழல்	...	97
முகப்புப் படம்	...	98
காந்தி வாக்கு	...	99
புண்ய நகரம்	...	100
ஸ்ரீமான் ஸினிமா 'வீசிறி'க்கு — தி. ஜ. ர.	...	102
தெய்வங்கள் எப்படித் தோன்றின ?	...	103
இப்படி ஒரு ஜன்மம்	...	104
கனவு சிருஷ்டிகன் — ஆர். திருஞானசம்பந்தம்	...	105
நவின வழக்கங்கள் — எஸ். விசாலாக்ஷி	...	109
சக்தி — 'நாணல்'	...	110
சிரிப்பைத் தேடிய சிற்பி — எஸ். பி.	...	111
காலத்தேர் — சுவாமி சுத்தானந்த பாரதியார்	...	113
தென்னுப்பிரிக்க வீரர் ஸ்மட்ஸ் — 'ஸரஸி'	...	117
உலகில் அழகிய பாரிஸ் — ஏ. கே. செட்டியார்	...	119
ரமண ரிஷிகள் சன்னிதானம் — கே. அருணாசலம்	...	123
அரசியல் சாமர்த்தியம் — ரா. நா.	...	124
பாரத சக்தி மஹாகாவியம் — சுவாமி சுத்தானந்த பாரதியார்	...	125
கடற்கரையில் பிடித்த குழந்தை — அழ. வள்ளியப்பன்	...	129
வடிவேலன் — 'பூ'	...	131
முன்னேற்றம் — கு. ப. ராஜகோபாலன்	...	132
கவிதைத் தீபம் — வி. ஆர். எம். செட்டியார், பி. ஏ.	...	133
நகைக் காதல் — எஸ். சாவித்திரி	...	135
பச்சா தாபம் — லியோ டால்ஸ்டாய்	...	137
பிரிட்டனில் நடக்கும் 'புரட்சி'	...	138
புத்தகமும் வித்தகமும் — வை. கோவிந்தன்	...	140
பாலர் பாட்டு : ஈயும் கொசுவும் — வித்வான் சு. உமைதாணு பிள்ளை	...	142
பாலர் கதை : கந்தர்வ லோகம் — 'மாமி'	...	143
இந்த இதழில்		

ஆரம்ப தேதியை எதிர்பாருங்கள்!

ஸாதனா பிலிம்ஸாரின்

மகத்தான புராணப் படம்

கிருஷ்ணகுமார்

முதல்தர நடிகர்கள் நடிக்கின்றனர்

* ஸி. ஹொன்னப்ப பாகவதர்
* வி. ஏ. செல்லப்பா
* நாகர்கோயில் மகாதேவன்
* ஆர். பாலசுப்ரமணியன்
* எஸ். டி. ஆர். சந்திரன்
* காளி என். ரத்தினம்
* “அஜாக்தன்” கிருஷ்ணய்யர்
* வி. எஸ். கிட்டப்பா அய்யர்
* கே. தவமணி தேவி
* டி. எஸ். ராஜலட்சுமி
* பி. ஆர். மங்களம்
* பி. எஸ். ஞானம்
* ஜி. எஸ். சரஸ்வதி
* கே. வி. ஜீவா
* கே. டி. தனலட்சுமி
* பேபி சகுந்தலா

டைரெக்ஷன் S. D. S. யோகி

பாட்டுகளை எச். எம். வி. ரிகார்டுகளில் கேளுங்கள்

ஸாதனா பிலிம்ஸ் லிமிடெட்

சேலம் டவுன் :: சேலம்

சக்தி

அன்பும் அறிவும் அறமும் திருவும் அருளும் ஆற்றலும்
இன்ப வாழ்வும் விளங்கச் சக்தி எழுந்து போலிகவே!

மலர் ௪ : இதழ் ௫ — விக்கிரம—பங்குனி

காலச் சூழல்

உள்ளுக்குள்ளே கனிந்து புகைந்து குமுறும் எரிமலைமேல் உல்லாச மண்டபம் கட்டி அமரும் ஒருவனைப் போல, இன்று இந்தியப் பிரச்னை விஷயத்தில் பிரிட்டன் நடந்து கொண்டு வருகிறது.

தேசீய இந்தியாவின் பிரதிநிதியான காங்கிரஸ், பிரிட்டனின் இந்தத் துயர சமயத்திலே, தனது பூர்ண சுதந்திரக் கோரிக்கையைக் கூட வற்புறுத்தாமல், சட்டசபைக்குப் பொறுப்பான தேசீய சர்க்கார் போதுமென்று சொல்லிற்று. பிரிட்டன் கையை விரித்துவிட்டது. ஆத்மத் தியாகமான சத்தியாக்கிரகத்தில், ஐயன் காந்தியின் தலைமைக்குட்பட்டு, அது இறங்கிவிட்டது.

ஜின்னாவின் தலைமையில், முஸ்லீம் லீக், தன்னால் ஒன்றும் ஆகாமல் உறக்கத்தில் விழுந்துவிட்டது.

ஸவர்க்கார் தலைமையில் ஹிந்து மகாசபை, 'மார்ச்சு மீ முடியட்டும்; நேரடியான செயலில் இறங்கி விடுகிறோம்' என்று உறுமிக் கொண்டிருக்கிறது.

இடையில், ஒரு கட்சியிலும் சேராத, ஆனால் தேசத்தில் நல்ல மதிப்புள்ள, அரசியல் அறிவு நிறைந்த மிதவாதிகளும் பிறருமாய்ப் பலர் பம்பாயில் ஸர் தேஜ் பகதூர் ஸாப்ரூ தலைமையில் இம்மாதம் கூடினார்கள். "இந்தியரே அடங்கிய ஒரு தேசீய சர்க்கார் உடனே இந்தியாவுக்கு வேண்டும். ஆனால், யுத்தம் முடிகிற வரையில், அது சட்ட சபைக்குப் பொறுப்பில்லாமல், பிரிட்டிஷ் சர்க்காருக்குப் பொறுப்பாயிருந்து வரலாம்" என்று அவர்கள் ஏகோபித்து ஒரு தீர்மானம் செய்தார்கள்.

இதன் குணங் குறைகளை நாம் இப்போது ஆராய விரும்பவில்லை. ஆனால், இன்று இந்தியாவின் மிகக் குறைந்த கோரிக்கை ஒன்றிருக்குமானால், அது இதுதான். பிரிட்டனுக்கு உண்மையிலே ஜனநாயகத்தில் நம்பிக்கையிருந்தால், இந்தியாவுக்குச் சுதந்திரம் வழங்க அதற்கு உண்மையிலே நாட்டமிருக்குமானால், சாப்ரூ மகாநாட்டின் இந்த மிகக் குறைந்த கோரிக்கையை மாறு பேசாமல் அங்கீகரித்தாகவேண்டும். அங்கீகரிக்குமா? நமக்கு நம்பிக்கையில்லை.

வரிச்சுமை பட்ஜெட்

இந்திய சர்க்காரின் 1941-42-ஆம் வருஷ பட்ஜெட் சாராம்சம் இதுதான்:

வருமான மொத்தம்:
ரூ. 100 கோடியே 39 லட்சம்.

செலவு மொத்தம்:
ரூ. 126 கோடியே 85 லட்சம்.

துண்டு:
ரூ. 26 கோடியே 46 லட்சம்.

இதில் 6 கோடியே 61 லட்ச ரூபாய், பின்வரும் புதிய வரிப் பிரேரணைகளால் ஈடுபடுத்தப்படும்:

அமிதலாப வரி விகிதம் 50%லிருந்து $66\frac{2}{3}$% ஆக உயர்த்தப்படுகிறது; இதனால் ரூ. $2\frac{1}{2}$ கோடி வருமானம் எதிர்பார்க்கப்படுகிறது. வருமான வரி, சூப்பர் டாக்ஸ் இவை மீது சர்சார்ஜ் 25%லிருந்து $33\frac{1}{3}$% ஆக உயர்த்தப்படுகிறது. இதனால் எதிர்பார்க்கப்படுவது ரூ. ஒரு கோடியே 90 லட்சம்.

தீப்பெட்டிகள் மீது உள் நாட்டுச் சுங்க வரி இரண்டு மடங்காக உயர்த்தப்படுகிறது. இதனால் ரூ. $1\frac{1}{2}$ கோடி எதிர்பார்க்கப்படுகிறது.

இமிடேஷன் பட்டு நூல் வகையறாக்கள் மீது இப்பொழுது விதிக்கப்படும் இறக்குமதித் தீர்வை, மேற்கொண்டு உயர்த்தப்படுகிறது. விலை மதிப்பில் 25% வீதம், அல்லது ராத்தலுக்கு 3 அணா வீதம் இவற்றில் எது அதிகமோ அதுவே இதுவரை விதிக்கப்பட்டு வரும் தீர்வை. இது ராத்தலுக்கு 5 அணாவாக உயர்த்தப்படுகிறது. இதனால் ரூ. 36 லக்ஷம் கிடைக்கும்.

ரப்பர் டயர்கள், டியூப்கள் இவற்றின்மீது விலை மதிப்பில் 10% வீதம் புதிதாக உள்நாட்டுச் சுங்க வரி விதிக்கப்படுகிறது. இதனால் ரூ. 35 லக்ஷம் வருமானம் எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியாவைப் போல்தான் கானடா, ஆஸ்திரேலியா, நியூஜீலந்து முதலியவையும் யுத்த முயற்சியிலீடுபட்டவை. அவையெல்லாம் இப்படித் தடதட வென்று புதிய வரிகள் விதிக்கவில்லை. யுத்தத்தால் தொழில்கள் பெருகி, உற்பத்திப் பொருள்களும் தேசத்தின் வருமானமும் அதிகரித்த பின்னரே, அவை புது வரிகள் விதித்தன. அந்த வரிகளும், உற்பத்தித் தொழிலுக்கு இடையூறு விளைக்காதபடி, ஜனங்கள் சௌகரியமாய்ப் பொறுத்துக் கொள்ளத்தக்க முறையில் விதிக்கப்பட்டன. இந்தியாவிலோ ஒரு தொழிலும் வளரவில்லை. சர்க்கார் அதற்கு உதவவுமில்லை. தீப்பெட்டித் தீர்வை முற்றிலும் ஏழைகள் மீதே சுமரும். ஆதலால், இந்திய சர்க்காரின் இந்த வரிச்சுமை பட்ஜெட்டை எவரும் பாராட்ட முடியாது. துண்டு விழும் தொகையை ஈடு செய்ய, ஏராளமான ரிஸர்வ் நிதியிருக்

கிறது. ஆதலால், இந்த அரிய யுத்த சந்தர்ப்பத்தில், அந்த நிதியை உபயோகித்து, வரிச் சுமையைக் குறைத்தும் புதிய கைத்தொழில்களுக்கு உதவியும் இந்தியாவின் செல்வத்தைப் பெருக்க வேண்டியதை விட்டு, இந்திய சர்க்கார் இம்மாதிரி வரி வசூலிப்பிலேயே கவனம் செலுத்துவது சற்றும் நியாயமல்ல.

பணங் காக்கும் பட்ஜெட்

சென்னையில்தான் சட்ட சபையோ, மந்திரி சபையோ கிடையாதே ; ஆகையால், கவர்னரின் சர்க்கார் ஒரு அறிக்கையின் மூலம், மாகாண பட்ஜெட்டை வெளியிட்டிருக்கிறது. சென்னை சர்க்காரின் ரெவின்யூ வரவு-செலவுச் சுருக்கமாவது :

(ஆயிரக் கணக்கில் ரூபாய்)

	திருத்தப்பட்ட மதிப்பு 1940-1941.	பட்ஜெட் மதிப்பு 1941-1942.
ரெவின்யூ வரவு :	18,04,47	18,21,37
செலவு :	17,99,66	18,08,62
அதிக வரவு மிச்சம் :	4,81	12,75

மாகாண சர்க்காரின் நிதி நிலைமை மிக உறுதியா யிருக்கிறது என்பதைச் சர்க்கார் அறிக்கை காட்டுகிறது. ஆயினும், கவர்னர் பெருமான் சந்தோஷப் படுவது போல நாம் அவ்வளவு சந்தோஷப் பட முடியவில்லை. 'பணங் காக்கும் பூதம்' போல் நிர்வாகம் நடத்திப் பயனில்லை. மது விலக்குத் திட்டம் நடத்தப்படவில்லை; அதற்காக வென்று, காங்கிரஸ் சர்க்கார் விதித்த வரிகள் மட்டில் கைவிடப் படவில்லை. மற்றும், கைத்தொழில்களை வளர்க்கவும், கல்வியைப் பரப்பவும், இவை போன்ற பிற நிர்மாணத் திட்டங்களை வகுத்து நிறைவேற்றவும் சென்னை சர்க்கார் தீவிரமாய் முயலாமல் 'பணங் காத்துக்கொண்' டிருப்பதைக் கண்டு யார்தான் சந்தோஷிக்க முடியும் ?

நண்பரை இழந்தோம் !

தமிழ்க் கவிதை யின்பமே வாழ்வாக வாழும் ஸ்ரீ. டி. கே. சிதம்பரநாத முதலியாரின் அருமந்த மகனும், சிறந்த ரஸிகரும், 'வானொலி'யின் மாஜி ஆசிரியரும், நமது நெருங்கிய நண்பருமான ஸ்ரீ தீத்தாரப்பன் காலமானார் என்ற செய்தி கேட்டுத் திடுக்கிட்டோம்.

'பூ' என்ற புனை பெயருடன் மாதம் தவறாமல் அவர் எழுதிவந்த அருமையான கவிகளைச் 'சக்தி' வாசகர் அனைவரும் ரஸித்திருப்பர். நண்பர் தீத்தாரப்பன் நோய்ப் படுக்கையி லிருந்தபோதும், 'சக்தி' யிடம் ஒரு தனி அபிமானங் கொண்டு, நமக்கு ஊக்கமளித்து வந்தார். நோய் குணமானதும் கலை, சங்கீதம் சம்பந்தமான கட்டுரைகள் எழுதிச் 'சக்தி'க்கு உதவுவதாக வாக்களித்து மிருந்தார். இந்த இதழிலும்கூட அவர் உதவிய பாடல் ஒன்று வெளிவருகிறது. 'நேரிலாப் பாக்யமெலாம் நேர்ந்த தடி யெனக்கே' என்று பாடிய தீத்தாரப்பன், நேரிலாப் பாக்கியத்தை நாடி, நமக்களித்த வாக்கையெல்லாம்கூட மறந்து மறைந்து விட்டார் ! ஸ்ரீ. டி. கே. சி. அவர்களின் துக்கம் அளவிடற் கரியது. அவர்களுக்கும் ஸ்ரீ.தீத்தாரப்பனின் தாய், மனைவி மக்கள், நண்பர்களுக்குப் நாம் நமது பரிபூர்ணமான அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதை யன்றி வேறு என்ன ஆறுதல் கூற முடியும் ?

முகப்புச் சித்திரம்

நீலகிரியில் வசிக்கும் மலை ஜாதியாரான தோதவர் வகுப்பில் புதிதாய் மணமான தம்பதிகள்.

தோதவர்களின் ஜனத்தொகை தற்போது சுமார் 600 தான்.

தோதவர்கள், இந்தியாவின் ஆதிக் குடிகளில் ஒரு முக்கிய வகுப்பார். அவர்களது விவாகச் சடங்குகள் சற்று விநோதமா யிருக்கின்றன. குடிசைக்கு வெளியே குடும்பத்தினர் பலரும் கூடுவார்கள். பெண்ணின் தந்தை ஒரு காலைத் தூக்குவான். மணமகன், தலைகுனிந்து, பெண்ணின் தகப்பனுடைய பாதத்தில் தன் முடியால் தொடுவான். பிறகு, அவனுக்கு ஒரு மாட்டையும் பெண்ணுக்கு ஒரு சேலையையும் மணமகன் பரிசளிப்பான்.

தாரை தம்பட்டைகளுடன் விருந்துகளும் கேளிக்கைகளும் நடைபெறும்.

முதல் நாள் இரவு பெண்ணையும், மணமகனையும் தனியே ஒரு குடிசையில் விட்டு, பெண்ணின் தாய் அக் குடிசை வாசலில் இரவு முழுதும் காவல் புரிவாள். மறுநாள் பொழுது விடியும்போது, பெண்ணும் பிள்ளையும் வெளியே வருவார்கள். பெண் முகம் மலர்ந்திருந்தால், இந்த விவாகத்துக்குச் சம்மதம் என்று அர்த்தம். இல்லையானால், பெண் தன் தலையை ஆட்டுவாள். அவ்வளவுதான் ; விவாகம் நிறுத்தப்பட்டு விடும்.

தோதவர்களுக்குள்ளே, காதல் இல்லாக் கண்மூடிக் கலியாணம் கிடையாது.

யுத்த நிலைமை

பிரிட்டனுக்கு உதவி செய்வதற்காக, ரூஸ்வெல்ட் கொணர்ந்த தளவாட இரவல் மசோதா சட்டமாகி விட்டது. இந்த உதவியை முடிந்த மட்டில் தடுக்க வேண்டுமென்ற நோக்கத்தால், ஹிட்லரின் யுத்தக் கப்பல்கள் அட்லாண்டிக் கடலில் போர் தொடங்கி யிருக்கின்றன.

பால்கன் நிலைமை திருப்திகரமாயில்லை. பல்கேரியா, ஹிட்லரின் வலையில் விழுந்து விட்டது. அந்த நாட்டில் ஜெர்மன் துருப்புகள் புகுந்து, ஜெர்மனியின் பாதுகாப்புக்குள் அதை வைத்துக்கொண்டு விட்டன. அதே மாதிரி யுகோஸ்லாவியாவும் பணிந்துவிட வேண்டுமென்று ஜெர்மனி விரும்புகிறதாம். இந்த நிபந்தனையை ஏற்பதா கூடாதா என்ற பிரச்னையில் அபிப்பிராய பேதத்தால், சில மந்திரிகள் ராஜினாமாச் செய்து விட்டார்கள். யுகோஸ்லாவியாவும் ஜெர்மனிக்கு அடிபணிந்து விடுமோ என்று அஞ்ச வேண்டியதா யிருக்கிறது.

துருக்கியை ஒருபுறம் ஹிட்லரும் மறுபுறம் ஈடனும் நெருக்கி வருகிறார்கள். இதுவரை அது பிரிட்டன் பக்கமே சாய்ந்திருக்கிறது.

ஜப்பானையும் ருஷியாவையும் சிநேகப்படுத்திவிட்டு, அமெரிக்காவுக்குத் தொல்லை கொடுக்குமாறு ஜப்பானைத் தூண்டிவிட ஹிட்லர் சூழ்ச்சிகள் புரிந்து வருவதாய்த் தோன்றுகிறது.

இந்த நிகழ்ச்சிகளின் பயனாக, அடுத்த சில வாரங்களில் ராஜதந்திரப் போராட்டங்களும் ரணகளச் சண்டைகளும் தீவிரப்படுமானால், நாம் அதிசயிப்பதற்கில்லை.

காந்தி வாக்கு

{ பழைய கட்டுரை-பிரசங்கங்களிலிருந்து

மனிதர் உயிர் வாழ வேண்டுமே யானால் ஒவ்வொருவரும் உழைத்து உணவு சம்பாதிக்க வேண்டியது அவசிய மெனத் தெய்வமிட்ட சட்டம் உலகில் எங்கும் பரவி யிருக்கிறது. இதைப் பற்றிக் கீதையில் மூன்றாவது அத்தியாயத்தில் குறிப்பிட்டிருப்பதாவது :— ‘தியாகம் செய்யாமல் எவன் உணவு உட்கொள்ளுகிறானோ அவன் திருட்டு உணவையே புசிக்கிறான்.’ தியாகம் என்பதற்கு உழைப்பும் உணவும் என்றே இங்கே பொருள். இதைப்பற்றி நாம் தீர யோசித்துப் பார்ப்போமே யானால், உழைத்து உணவு உட்கொள்ளுவதே நீதி என்ற முடிவுக்கு வருவோம். உழைப்பில்லாத மனிதன் உணவு கொள்ளுவது எப்படி நீதி யாகும்? பைபிளிலும் ‘உன் நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த நீ பாடுபட்டு உழைப்பாய்’ என்று கூறி யிருக்கிறது. பெரும் லட்சப் பிரபுக்களெல்லாம் நெடுங்காலத்துக்கு உழைப்பின்றி உணவு உட்கொண்டு வாழ முடியாது. அவர்கள் தங்கள் படுக்கையில் சாய்ந்துகொண்டு ஏவலாளரின் உதவியால் தங்களுக்கு ஆகாரம் ஊட்டச் செய்து படுத்த படுக்கையிலிருந்தே உணவுகொள்ள முடியாது. இது நெடுங்காலம் நீடித்திருப்பது துர்லபம். அவர்களது ஜீரண சக்தி குறைந்து பசியில்லாமற் போய்விடும். ஆகவே பசியை உண்டுபண்ண அவர்கள் தேகாப்பியாசமாவது செய்ய வேண்டிய அவசியம் நேரிடும்.

பாவப் பிராயச்சித்தம்

ஹரிஜன நிதிக்கு எவ்வளவு கொடுத்தாலும் தகும். ஏனெனில், அது பாவத்துக்குச் செய்துகொள்ளும் ஓர் பிராயச்சித்தமாகும். பிராயச்சித்தம் செய்துகொள்ளுபவன், கொடுப்பதால் லாபமடைகிறான்; கொடுக்காமல் இறுக்கி வைத்துக் கொள்ளுவதால் நஷ்டமடைகிறான். பாவியின் மனசு, பிராயச்சித்தம் செய்து தீர்க்கும் வரையில் சதா சர்வதாக் கஷ்டப்பட்டுக் கொண்டேயிருக்கும்; உலகத்தில் உள்ள சகல ஐசுவரியத்தையும் அடைந்தாலும் அவன் சந்தோஷமடையான். தீண்டாமை என்பது ஹிந்து மதத்தையே அழித்து விடக் கூடிய ஓர் பாவமாகும். பலவந்தத்தாலல்ல; ஆத்மத் தூய்மையாலேயே நாம் இதனின்றும் விடுதலையடைய முடியும்.

கதைகளில் பொய்ப் பெண்கள்

பெண்களைப் பற்றித் தற்கால ஆசிரியர்கள் தங்கள் கதைகளில் வரையும் சித்திரம் அடியோடு அபத்தமானது என்று ஜ்யோதிர் சங்கப் பெண்கள் குற்றம் சாற்றுகிறார்கள். கோழை உணர்ச்சிகளை உடையவர்களாகப் பெண்களை நீங்கள் சித்தரிப்பதைக் கண்டு அவர்கள் ஆத்திரங்கொண்டிருக்கிறார்கள்; அவர்களுடைய அங்க அழகுகளை நீங்கள் வர்ணிக்கும் கேவல முறையைக் கண்டு அவர்கள் மனங் கொதித்திருக்கிறார்கள். பெண்களுடைய பலமெல்லாம், அவர்களுடைய அங்க அழகிலும் புருஷனுடைய காமக் கண்ணைத் திருப்தி செய்யக்கூடிய சக்தியிலுமே அடங்கிக் கிடக்கிறதா?

அந்தப் பெண்கள் நியாயமான ஓர் கேள்வி கேட்கிறார்கள்: ‘வேலைக்காரிகளாக வீட்டு வேலைகளை மாத்திரமே நாங்கள் ஏன் எப்போதும் செய்துகொண்டிருக்க வேண்டும்? புருஷனைத் தவிர வேறு தெய்வமே யில்லாமல் நாங்கள் ஏன் வாழவேண்டும்? எங்களை உண்மையாக உள்ளபடி ஏன் சித்தரிக்கவில்லை? நாங்கள் கந்தர்வக் கன்னியரல்ல; வெறும் பொம்மைகளுமல்ல; ஆசாபாசங்களே நிறைந்த நரம்புப் பிண்டங்களுமல்ல. புருஷர்களைப் போலவே, நாங்களும் நர ஜன்மந்தான். அவர்களைப் போலவே எங்களுக்கும் சுதந்திர ஆர்வம் நிறைந்திருக்கிறது’ என்று அந்தப் பெண்கள் கூறுகிறார்கள்.

எனக்குப் பெண்களையும் அவர்கள் மனதையும் நன்றாய்த் தெரியும். தென்னாப்பிரிக்காவில் பல பெண்கள் என்னைச் சூழ்ந்திருந்தார்கள். அவர்களுடைய புருஷரெல்லாம் சிறை சென்று விட்டார்கள். சுமார் அறுபது பெண்கள் எனது ஆசிரமத்துக்கு வந்து சேர்ந்தார்கள். அந்தப் பெண்களுக்கெல்லாம் நானே சகோதரனும் தந்தையுமானேன். என் தலைமையில் அவர்கள் வலிமையிலும் ஆன்ம சக்தியிலும் வளர்ச்சியடைந்தார்கள். இறுதியிலே, அவர்கள் தாங்களே சிறைக்கும் சென்றார்கள்.



உங்கள் பேனாவைக் காகிதத்தின்மீது வைக்கு முன்னதாக, பெண் உங்களுடைய மனைவியாவதற்கு முன்னரே உங்கள் சொந்த அன்னையாயிருந்ததை நினைவு கூருங்கள்; அவ்விதம் செய்வீர்களானால், வறண்ட பூமியின் தாகத்தை யாற்றும் இனிய வான் மழை போல, உங்கள் பேனாவிலிருந்து மகா பரிசுத்தமான இலக்கியம் சிருஷ்டியாகும் என்று நான் உங்களுக்கு உறுதி கூறுகிறேன். ஒரு பெண் உங்கள் மனைவியாகு முன்னதாக, ஒரு பெண் உங்கள் தாயாயிருந்ததை நீங்கள் நினைவு கூருங்கள். பெண்களின் ஆன்ம தாகத்தைத் தீர்ப்பதை விட்டு, அவர்களது காம இச்சைகளைத் தூண்டும் முறையில் எழுதுகிறார்கள் சில ஆசிரியர்கள். அதனால் அறியாமை மிக்க பல பெண்கள், கதைகளில் பெண்களைக் குறித்துக் காணப்படும் வர்ணனைப்படி நடப்பதெப்படி என்று முயன்று தவிக்கிறார்கள்.

ஏது திருட்டு?

சொத்தில்லாதிருத்தல், திருடாமல் இருப்பது போலாகும். ஒரு வஸ்து ஆதியில் திருடப்பட்ட வஸ்துவாயில்லாத போதிலும், அதை ஒருவர் தமக்கு அவசியமில்லாமல் வைத்திருந்தால், அதனால் அவ் வஸ்து திருடப்பட்ட வஸ்துவாகத்தான் பாவிக்கப்பட வேண்டும். ‘வைத்திருத்தல்’ என்ற காரியம் எதிர்கால அவசியத்துக்காகத் தயாரிப்பதைக் குறிப்பிடுகிறது. உண்மையை நாடும் ஒருவன், அன்பு என்ற தருமத்தை பின்பற்றிய ஒருவன், நாளைக் கென்று ஒன்றும் வைத்திருக்கக் கூடாது. நாளைக்காகக் கடவுள் ஒன்றும் தயார் செய்வதில்லை. அன்றையப் பாட்டுக்கு அவசியமானதற்கு மேலாக அவர் எதையும் ஒருபொழுதும் சிருஷ்டி செய்வதில்லை. ஆகையால், அவரது கருணையில் நம்பிக்கை யிருந்தால், அவர் நமது தினசரி அவசியத்திற்கான உணவைத் தினந்தோறும் கொடுத்து, நமக்கு அவசியமானதைப் போதிய அளவு எப்போதும் அருளுவார் என நாம் உறுதியாக நம்பி யிருக்கவேண்டும்; இந்த நம்பிக்கையுடன் வாழ்ந்துள்ள மகான்களும், பக்தர்களும், தங்கள் அனுபவத்தின் மூலம், தாங்கள் செய்வதே சரி என்று கண்டு கொண்டிருக்கின்றனர்.

லாமாவின் தொப்பிகள்

உடைகள் அணிவதிலே கண்டிப்பான சில நியமங்களை லாமாக்கள் அனுஷ்டித்தாக வேண்டும். லாமாவின் தொப்பிகள் மாறுவதை இங்கே காணலாம் :

கோயில் பூஜைக் காலத் தொப்பி

விசிட்டர்களைக் காணும் தொப்பி

வேத பாராயணத் தொப்பி

புண்ய நகரம்

ஒரு பக்கத்தில், ராணுவத் திமிர் பிடித்த ஜப்பான் வந்து நெருக்குகிறது; மறு பக்கத்தில் உலகாயதப் பொது உடைமை ருஷியா உறுமிக் கொண்டிருக்கிறது—இந்த இரண்டுக்கும் நடுவே, மாந்திரிகமும் மதமும் கலந்த விசித்திரக் கதம்பமான லாமா ராஜ்யம் ஒன்று இன்றும் தனது பழைய சம்பிரதாயங்களின்படி அமைதியாகக் காலங் கழித்துக் கொண்டிருக்கிறது. அந்தப் புண்ய நகரின் பெயர்தான் ஜிஹோல்.

சீனாவின் முக்கிய நகர்களில் ஒன்றான பீகிங்குக்கு வடக்கே 130 மைல் தூரத்தில் இருக்கிறது ஜிஹோல் நகரம். முன் காலத்தில் சீனத்துச் சக்கிரவர்த்திகள், நாட்டுப்புற வாசத்துக்காக வருஷத்தில் சில காலம் இங்கேதான் வந்து தங்குவது வழக்கம். அந்தச் சக்கிரவர்த்திகளுக்காகப் பெரிய அரண்மனை யொன்றை இங்கே கட்டியிருந்தார்கள். அதையும் அதைச் சூழவிருந்த நந்தவனங்களையும் வளைத்துக்கொண்டிருந்த சுற்றுச் சுவரின் நீளம் 13-மைல் இருந்ததாம். இந்தச் சுவருக்குப் பக்கத்திலே பல பௌத்தக் கோயில்களையும் மடங்களையும் சீனச் சக்கிரவர்த்திகள் அக்காலத்தில் கட்டினார்கள். அந்தக் கோயில்களில் ஒன்றுக்குப் பெயர் போ-நிங் என்பதாகும். இதிலுள்ள பிரம்மாண்டமான புத்தர் சிலை எழுபத்தி யிரண்டடி உயர மிருக்கிறது; நாற்பத்திரண்டு கைகளைப் படைத்திருக்கிறது. ஆனால், இக்கோயிலையும் விட மகா கம்பீரமாய்க் கட்டப்பட்டிருப்பது பொட்டாலா என்ற மற்றோர் கோயில் தான். திபேத்தில் பாஞ்சன் லாமாவின் கோட்டையிருக்கிறதே அதைப் பார்த்து அதே மாதிரி 1780-ஆம் (வருஷ) கட்டப்பட்டது பொட்டாலா ஆலயம்.

முன் காலத்தில் ஜிஹோல் நகரம் மிக உன்னத நிலையில் இருந்தது. மத குருமார்களுக்கு அரசியலிலே மிகுந்த செல்வாக்கு இருந்தது. லாமா மடங்களைச் சீனாவின் சக்கிரவர்த்திகள் கட்டியதே அரசியல் காரணங்களுக்காகத்தான். திபேத் மீதும் மங்கோலியா மீதும் லாமாக்களின் மூலமாகத்தான் சீனச்சக்கிரவர்த்திகளின் செல்வாக்கைக் காப்பாற்றிக்கொள்ள முடிந்தது. ஆகையால் லாமாக்களுக்கு, அந்தச் சக்கிரவர்த்திகள் ஏராளமான மான்யங்களைக் கொடுத்து வந்தார்கள். லாமாக்கள் வெகு வைபவமாக வாழ்ந்து வந்தார்கள்.

லாமாக்களின் மடங்களில் தினந்தோறும் நீண்ட நேரம் பூஜை நடக்கும். பூஜை முடிவிலே மாந்திரிக சங்கீதம் ஒன்று பொழியும்; சங்கு, ஜாலர், பேரிகைகள் முழங்கும்; சாம்பிராணித் தூபங்கள்



மதச் சடங்குகள் நடத்தும் தொப்பி

போடப்படும். இந்தப் பிரார்த்தனை நேரம் போக மற்ற நேரங்களில் மத சம்பந்தமான காலட்சேபம் நடைபெறும். பல யுவர்கள் மத வாழ்வுப் பயிற்சியும் மதக்கல்வியும் பெறுவதற்காக இந்த மடங்களில் வந்து சேர்கிறார்கள்.

மத தத்துவ விசாரணைகள் புரியும் லாமாக்களிடம் பாமர மக்களுக்கு மிகுந்த நம்பிக்கை. ஆதலால், லாமாக்கள் மாந்திரிகத் தொழிலும் புரிகிறார்கள். அவர்களுடைய கவசங்களையும், யந்திர சக்கரங்களையும், ஜபமாலைகளையும் ஜனங்கள் மிகுந்த ஆவலுடன் வாங்கிக் கொள்ளுகிறார்கள்.

ஜனங்களிடம் லாமாக்களுக்குப் பெருமிதமான செல்வாக்கு

‘ நாதன் ’

முன்னே இருந்து வந்தது. ஆனால், சீனாவில் உள்நாட்டுச் சண்டைகளும் கலகங்களும் தோன்றவே, மத்திய சர்க்காரின் ஆதரவு லாமாக்களுக்குக் கிடைக்காமல் போய் விட்டது. தங்களுடைய அரும் பொக்கிஷமான புத்த விக்கிரகங்களைக்கூட விற்று லாமாக்கள் ஜீவிக்க நேரிட்டது. இந்நிலையில் ஜப்பான் வந்து நுழைந்தது. மஞ்சூரியாவின் மூன்று மாகாணங்களையும் ஜிஹோலையும் ஒன்று சேர்த்து, மஞ்சுகோ என்ற ஒரு கதம்ப ராஜ்யத்தையும் அதற்கொரு பொம்மை சர்க்காரையும் ஜப்பான் சிருஷ்டித்து, தன் இஷ்டப்படி ஆட்டி வரத் தொடங்கிற்று.

இந்த நிகழ்ச்சிகளால் மஞ்சுகோ லாமாக்களின் அரசியல் செல்வாக்கு அடியோடு தொலைந்தது. மத விஷயங்களில் மட்டுமே இப்போது அவர்கள் கவனம் செலுத்துகிறார்கள். பழைய அதிகாரங்களை இழந்து, வறுமையிலே கஷ்டப்பட்டாலும், லாமாக்களின் ஊக்கமும் தப்பற்றும் மிக உறுதியாகவே இன்றும் இருந்து வருகின்றன. இப்போது முன்னிலும் அதிகக் கட்டுப்பாடும் ஒழுக்கமுங் கொண்ட வாழ்க்கையை அவர்கள் நடத்துகிறார்கள். வறுமையின் சோதனையே இன்று அவர்களுக்கு அதிக மத ஆவேசத்தை ஊட்டி யிருக்கிறது. நகரிலே தங்களைச் சுற்றிலும் மத நம்பிக்கை குறைந்த உலகாயத மக்கள் சூழ்ந்திருக்கையில், தங்கள் மடங்களுக்குள்ளே அவர்கள் அமர்ந்து, தெய்வத் தியானத்தை ஓயாது புரிந்து வருகிறார்கள்.

பெர்னார்ட் ஷா ஒரு வீட்டுக்கு விருந்தாளியாய்ச் சென்றார். வீட்டுக்காரரின் ஒரு மகள் பியானோவில் ஒரு பாட்டை வாசிக்கத் தொடங்கினாள். அப்போது அவள் ஷாவைப் பார்த்து “உங்களுக்குச் சங்கீதம் பிடிக்குமாமே” என்று கேட்டாள்.

“ஆமாம்; பிடிக்கும். அதைப்பற்றிக் கவலைப்படாதே. நீ பாட்டுக்கு நடத்து உன் காரியத்தை” என்று அவர் பதிலளித்தார்.

போ-னிங் ஆலயத்திலுள்ள புத்த விக்ரகம். 72 அடி உயரம் இருக்கிறது. 42-கைகளைப் படைத்திருக்கிறது.

ஆசிரியர் - கட்டுரையாளர் தகராறு

சிக்காகோ நகரில் ஒரு கட்டுரையாளர் எழு வருஷங்களுக்கு முன்னே ஒரு பத்திரிகைக்கு ஏதோ ஓர் வியாசம் எழுதி அனுப்பினார். “கட்டுரை வந்தது. பிரசுரித்ததும் சன்மானம் அனுப்புகிறோம்” என்று பத்திரிகைக்காரரிடமிருந்து அவருக்குப் பதில் கிடைத்தது. ஆனால், இது வரையில் சன்மானத்தைக் காணோம்; வேறு தகவலும் எதுவுமில்லை. “என் கட்டுரை என்ன ஆயிற்று ?” என்று எழு வருஷத்துக்குப்பின், இப்போது அந்தக் கட்டுரையாளர் எழுதிக் கேட்டார். நிர்வாகிகள் ஆசிரியரைப் போய் விசாரித்தார்கள். “என்ன அவசரப் படுகிறார் அந்த நண்பர் ! கொஞ்சம் பொறுத்திருக்கச் சொல்லுங்கள்” என்று கம்பீரமாக ஆசிரியர் அதட்டி விட்டாராம்.

இதே மாதிரி மற்றோர் கதையுண்டு. மத சம்பந்தமானதோர் பத்திரிகைக்கு, ஒரு பாதிரியார் என்னவோ கட்டுரை எழுதியனுப்பினார். அது ஆசிரியரின் ‘புறக்கூட்டு’க்குள் போய்விட்டது. பல வருஷங்களுக்குப் பின் அவர் கண்ணில் அது மீண்டும் தட்டுப் பட்டிருக்கிறது. படித்துப் பார்த்தபோது, அது அவருக்கு ரொம்பப் பிடித்தமா யிருந்தது. பாதிரிக்கு ஒரு கடிதம் எழுதினார். “உங்கள் கட்டுரை ரொம்ப அருமையா யிருக்கிறது. காலத்துக்கேற்ற நேர்த்தியான கருத்துக்கள்” என்று அதில் ஆசிரியர் குறிப்பிட்டார். பாதிரியாரின் பதில் இது: “என் கட்டுரையை இப்போதாவது பிரசுரிக்கப் போகிறீர்களே ; ரொம்ப சந்தோஷம். ஆனால், அதில் ஒரு சிறு திருத்தம் செய்து வெளியிடுங்கள். ‘இரண்டு குழந்தைகளின் தகப்பனான நான்’ என்று அதில் ஓரிடத்தில் என்னைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறேன். அதைத் தயவு செய்து ‘எட்டுக் குழந்தைகளின் தகப்பனான நான்’ என்று திருத்தி விடுங்கள்.”

இதர வேலைகளுக்கு நடுவே பல கட்டுரைகளும் வந்து குவியும் போது, பல சரக்குக் கடைக்காரனுக்குப் பைத்தியம் பிடித்தது போல் ஆகிவிடுகிறது பத்திரிகை ஆசிரியர்களின் நிலைமை. அதுவே இம்மாதிரி சம்பவங்களின் காரணமாகும்.

ஸினிமாக் கடிதம் : கடைசி

ஸ்ரீமான் ஸினிமா 'விசிறி'க்கு—

(தி. ஜ. ர.)

அன்புடையீர்!

வணக்கம், நலன்; விழைவதும் அஃதே.

இதுவரை ஸினிமா உற்பத்தி சம்பந்தப்பட்டவர்களுக்குச் சில கடிதங்கள் எழுதினேன். இன்னும் அவர்களில் மிச்சமுள்ள ஒன்றிருவருக்கும் ஸினிமா விமர்சகருக்கும் எழுதி விட்டு, கடைசியில் உங்களுக்கு எழுத வேண்டுமென்று எண்ணியிருந்தேன். ஆனால், அவர்களுக்கு என்ன எழுதுவது என்று தெரியவில்லை. அதைப் பற்றித் தயங்கித் தயங்கி உட்கார்ந்திருந்த சமயத்தில், ஒரு கடிதம் வந்தது. "நண்பர் தி. ஜ. ர. அவர்கள் ஸினிமா சம்பந்தத்தை ஒழித்து, கருத்துக்கள் கொண்ட கதைகள் எழுதிவரும்படி செய்வது உத்தமம். இவர்கள் போன்ற ஓர் சிறந்த எழுத்தாளர், கனவு போன்ற ஸினிமாக்களில் நேரத்தைக் கழிப்பது வீண்" என்று அந்தக் கடிதத்தை எழுதிய நண்பர் யோசனை கூறியிருக்கிறார். நண்பர் என்னைச் 'சிறந்த எழுத்தாளர்' என்பதால், அவர் சிறந்த யோசனையாளராய்த்தான் இருக்கவேண்டும் என்பது எனது நிச்சயம். ஆதலாலும், விஷயம் அகப்படாததாலும்—இந்த இரண்டு காரணங்களில் எது உங்களுக்குத் திருப்தியோ அதை வைத்துக் கொண்டு மற்றதை அடித்து விடவும்—நண்பரின் யோசனையை முழுமனதுடன் ஏற்றுக்கொள்ளுகிறேன். இருந்தாலும், எடுத்த காரியத்தைக் 'காமா, சோமா' என்றாவது பூர்த்தி செய்ய வேண்டுமல்லவா? அதற்காகத்தான் இந்தக் கடைசிக் கடிதம் உங்களுக்கு எழுதுகிறேன்.

கோபமா? "நான் என்ன அப்படிக் கேவலம் 'காமா சோமா' என்ற கடிதத்துடன் என்னைப் பிணைக்க?" என்றா கோபம்? இல்லையே; நான் அப்படிச் சொல்லவேயில்லை. நீங்கள் நமது ஸினிமா வளர்ச்சியின் வெறும் நிலைக்கண்ணாடியே யாவீர்கள். முகத்தின் விகாரத்துக்குக் கண்ணாடியைச் சீறிப் பயனுண்டா? நான் அப்படிச் செய்யவே மாட்டேன். நமது ஸினிமா நிபுணர்கள்தான் அப்படிச் செய்வது வழக்கம். ஏனெனில், முகம் அவர்களுடையது. கண்ணாடியைத் தானே அவர்கள் சீறவேண்டும்? ஆத்ம திருப்திக்கு வேறே என்ன வழி?

'ஸினிமா வேண்டாம்' என்று எனக்கு யோசனை கூறிய நண்பர் 'ஸினிமா ஒரு கனவு' என்கிறார். அழகான வார்த்தை; பல கலைகளுக்குமே பொருந்தும் சொல். சிறு வயது முதலே, கனவுகள் காண்பதிலே எனக்கு மோஹம் உண்டு. சுந்தரக் கனவுகளிலே ஒரு ஆசை; கோரக் கனவுகளிலே ஒரு அச்சம். ஆனால், இரண்டு கனவுகளிலும் ஒரு கவர்ச்சி மாத்திரம் குறைவதேயில்லை. கனவு சுந்தரமாயினும் கோரமாயினும், இடையிலே முறிந்தால், எனக்கு மிகுந்த வருத்த மேற்படும். பிரத்யட்ச வாழ்க்கையிலே காண முடியாத வர்ண விசித்திரங்களையெல்லாம், அடைய முடியாத உணர்ச்சி அனுபவங்களையெல்லாம் கனவுகள் நமக்கு நல்குகின்றன. கனவு வெறும் பிரமை என்றால், வாழ்வுதான் என்ன? வெறும் மாயைதானே? எனக்கு வாழ்வு வேண்டும்; இன்பக் கனவுகள் வேண்டும்; அந்தக் கனவுகளை எனது நனவிலும் கொண்டு தரும் சுந்தரக் கலைகளும் வேண்டும். ஸினிமா அத்தகைய தொரு நற்கலையாக இன்னும் நமது நாட்டிலே பரிபக்குவ மடையவில்லை. அதனால்தான், நண்பர் அதை விட்டுவிட எனக்கு யோசனை கூறுகிறார்.

நமது ஸினிமாக்கள் சீர்திருந்துவது தான் எப்படி? முதலாளிகளுக்குக் கலையைப்பற்றி அக்கரையில்லை; பணத்தைப் பற்றியே கவலை. தொழிலாளிகளுக்குத் தொழிலைப் பற்றி அக்கரையில்லை; முதலாளியைப் பற்றியே கவலை. ஆகையால், அவர்கள் காதிலே யார் யோசனையும் எவர் கண்டனமும் ஏறுவதில்லை. இந்த வழியிலே போனால்தான் பணம் கிடைக்கும் என்று, அழுந்தி அழுந்திச் சோடு விழுந்த பழந்தடமொன்றையே அவர்கள் பற்றிச் செல்லுகிறார்கள். கடைசியிலே அத்தனை பழியையும் உங்கள் மேலே போடுகிறார்கள். என்னைக் கேட்டால், உங்களைக் கெடுத்தவர்கள் அவர்கள்தான் என்று நிச்சயமாய்ச் சொல்லுவேன். ஆயினும், உங்கள் ஆதரவும் பலமும் தங்களுடைய தற்போதைய போக்குக்கு இருக்கும் வரையில், அவர்கள் ஏன் மாறப் போகிறார்கள்? மாட்டவே மாட்டார்கள்.

ஆகையால், நமது ஸினிமாக்கள் சீர் திருந்த, நீங்கள் மாறினால்தான் இனி முடியும். ஆனால், "ஸினிமாக்கள் திருந்தாமல் நாங்கள் திருந்த முடியாதே!" என்று நீங்கள் பிரலாபிக்கக்கூடும். ஆம்; இது ஒரு விஷம சக்கரந்தான்; 'பைத்தியம் தெளிந்தால் கலியாணமாகும்; கலியாணமானால் பைத்தியம் தெளியும்' என்ற சங்கதிதான். இருந்தாலும் மனமுண்டானால் இடமுண்டல்லவா? எனவே, நீங்கள் சீர்திருந்த நான் உங்களுக்குச் சில யோசனைகள் சொல்ல விரும்புகிறேன்.

'ஸினிமாக்களை எப்படி ரஸிப்பது?' என்ற ஓர் ஆங்கிலப் புத்தகத்தில் நான் சில குறிப்புகள் கண்டேன். அவை ஓரளவு உங்களுக்கு உபயோகமாகும். கலைச் சுவை என்பது ஆளுக்கு ஆள் மாறுபடுவதாகும்; ஒரு மனிதனின் உணவு மற்றொருவனுக்கு விஷமாய் முடியுமல்லவா? ஆதலால், பிறர் அபிப்பிராயங்களையெல்லாம் நீங்கள் பூரணமாய் நம்புவது தவறு என்று அவர் கருதுகிறார். உங்களுக்குத் தேவையான படத்தை நீங்களேதான் தேர்ந்து கொள்ள வேண்டும். ஆனால், அதெப்படி முடியும்? விளம்பரங்களை நம்பவே முடியாது. பல பத்திரிகை விமர்சனங்களையும் திரட்டி, ஒருவாறு படத்தைப் பற்றி ஒரு ஊகத்துக்கு வரலாம் என்கிறார் அவர். இது தமிழ் நாட்டில் இன்று நடக்கக்கூடிய சங்கதியாக எனக்குத் தோன்றவில்லை.

'விமர்சனம் என்றாலே திட்டுவதுதான்' என்ற கண்டிப்பான நியதியைக் கடைப்பிடிக்கும் விமர்சகர் கூட்டம் ஒன்று; 'இல்லவே யில்லை, ஒரே யடியாய்ப் புகழ்வதுதான் விமர்சனம்' என்று திடமாய்க் கட்சி பேசும் விமர்சகர் கூட்டம் மற்றொன்று—இந்த இரு கூட்டங்களுக்குள்ளும் அடங்காத விமர்சகர்களும் தமிழ் நாட்டில் இன்று இருக்கிறார்களோ என்பது எனது சந்தேகம். இது போக, விளம்பரங்கள் கொடுப்பதும் கொடுக்காதிருப்பதும் வேறே விமர்சனங்களை ஆட்டி வைக்கின்றன. ஆதலால், விமர்சனங்களை நீங்கள் படிக்கவே படிக்காதீர்கள்.

ஆனால் என் யோசனைகள் என்ன? அவை இவைதான். எந்தப் படத்துக்கும் நீங்கள் முதல் வாரத்தில் செல்லாதீர்கள். 'ஆ! இவ்வளவு கூட்டமா? அப்படியானால், இதில் என்னவோ விசேஷம் இருக்கத்தான் இருக்கவேண்டும்' என்ற பிரமைக்கு இடங்கொடாதீர்கள். போய்வந்த நண்பர்களின் அபிப்பிராயங்களைத் தனித்தனி கேளுங்கள்.

இப்படிப் பலர் அபிப்பிராயங்களையும் ஒன்று திரட்டினால், ஒன்றுக்கொன்று ஒற்றுமையும் வேற்றுமையும் படும் அம்

சங்கைக்கொண்டு இணைத்தும் பிரித்தும் தள்ளியும் மொத்தமாக ஒரு அபிப்பிராயம் நீங்கள் தயாரித்துக் கொள்ளலாம்.

முதலில் அவர்களைப் படத்தின் கதையைச் சொல்லச் சொல்லுங்கள். எந்தக் கட்டத்தை, எந்தக் காட்சியை, எந்தச் சம்பாஷணையை, எந்தப் பாட்டை, யார் நடிப்பை அவர்கள் ரசித்தார்கள் என்று விவரமாகச் சொல்லுமாறு சொல்லிக் கேளுங்கள். ஆபாசங்கள் இல்லாமல் இருக்கிறதா என்று விசாரியுங்கள். ஆபாசம் எல்லாருக்குமே சில சமயம் ரஸமாய்த்தான் இருக்கும். இருந்தாலும் கண்டிப்பாய் அதைப் பார்ப்பதில்லை என்று மனக் கட்டுப்பாடு செய்து கொள்ளுங்கள். துளி ஆபாசமேனும் ஒரு படத்தி லிருக்குமானால், அந்தப் படத்தையே நிக்ரகம் செய்வதென்று உறுதி கொள்ளுங்கள்.

இத்தனை முன்னெச்சரிக்கைகளுக்கும் திருப்தி யேற்பட்ட பிறகுதான், நீங்கள் ஒரு படத்தைப் பார்க்க வேண்டும். பார்த்தபின், தாராளமாக, விவரமாக, உங்கள் அபிப்பிராயத்தை, உங்கள் நண்பர்களுக்குச் சொல்லுங்கள். உங்கள் சுவையை ஆரோக்கியமாக வளர்த்துக் கொள்ள எப்போதும் ஆசையுடன் முயலுங்கள். இதுதான் நீங்கள் சீர்திருந்தும் வழி; தமிழ் ஸினிமாக்களையும் சீர்திருத்தும் வழி.

ஆனால், இதை யெல்லாம் விடச் சிறந்த ஒரு மார்க்கம் எனக்குத் தெரியும்; அது தவறவே தவறாத மார்க்கம். ஆனால், அதை நீங்கள் அனுஷ்டிக்கமாட்டீர்கள். அது என்னவென்றால், ஒரு வருஷம் வரை நீங்கள் எந்த ஸினிமாவுக்குமே போவதில்லை என்ற விரதம் வைத்துக் கொள்ளுவதுதான். அதைப் படி முடியும் உங்களால்? ஸினிமாப் பார்ப்பதற்கென்றே எடுத்த அவதாரங்களல்லவா நீங்கள் ?

இங்ஙனம்

தங்கள் உழவலன்பன்.

மனிதர்களின் கைவிரல் ரேகைகள் ஒருவரைப்போல் மற்றவருக்கு இருப்பதே யில்லை. 6400 கோடி பேரில் ஒருவர் ரேகைதான் மற்றொருவருடையது போல் நேரக் கூடும். ஆனால், உலக மொத்த ஜனத்தொகையே 1600 கோடி தான். ஆகையால், இந்தத் தலைமுறையில் உள்ள ஒருவரின் விரல் ரேகை இன்னும் மூன்று தலை முறைக்குப் பிறகு வேண்டுமானால், இன்னொருவர் விரலில் மீண்டும் தோன்றலாம்.

வேதாந்த விசாரணை:

தெய்வங்கள் எப்படித் தோன்றின ?

லூவெலின் பௌவில்

'பரிதாபகரமான மயக்கம்' (Pathetic fallacy) என்றோர் அற்புதமான நூலில், இந்த ஆசிரியர், கிருஸ்தவ மதத்தைப்பற்றி, அறிவாராய்ச்சி ரீதியில் பரிசீலனை செய்திருக்கிறார். கவிதையைப்போல் மிகா அழகான நடையில் இந்நூல் அமைந்திருக்கிறது. உலகப் பிரசித்தமான நூல். நூலின் முன்னுரையில் அடங்கிய கருத்துக்களே இந்தக் கட்டுரை :

எந்த மதத்தை எடுத்துக் கொண்டாலும் சரி; அந்த மதத்தின் மூலகாரணமான மனோ தத்துவ நிகழ்ச்சியை நாம் எப்போதும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுதல் நலமாகும்.

ஆதியந்தமற்ற அநாதிப் பொருளின் முன்னே, ஜீவ மனிதனது ஆன்மா நடுங்கிய நடுக்கத்தினின்றே மதங்கள் பிறந்துள்ளன. தேசங்கள் என்னதான் செயல்கள் கொழித்து நின்றாலும், பிரத்யட்சமான உலகப் பொருள்களிலே நாட்டங்கொண் டுழைத்தாலும், என்றோ ஒரு நாள், இவ்வண்டத்தின் தீரா ஆச்சர்யங்களுக்குச் சமாதானங் கண்டுகொள்ளும் சிலவழிகளைக் கோலித்தான் தீரவேண்டும். ஏனெனில், தேசங்களின் ஆசைகளை யெல்லாம் பூர்த்தி செய்த கொள்ளும் அரங்கம் இவ்வண்டமே யன்றோ ?

ஒரு மனிதன் சாகும்போது— அது அரண்மனையிலே யாயினும் சரி, சின்னஞ் சிறு குடிசையில் தானாயினும் சரி— கூடவிருப்போர் மனதுக்குத் திடீரென்று ஓர் கேள்வி பிறக்கிறது. ஒவ்வொரு சவமும், கடுமை யானதோர் பரீட்சாதிகாரி யாகும். இன்றல்ல; என்று தினம், வனக் குரங்கினின்றும் நம்மைப் பிரிக்கும் விவேகம் நமக்கு உதயமாயிற்றோ அன்று முதல், இச் சம்பவம் நிகழ்ந்து வருகிறது. சகல ஒழுக்கங்களும், சகல வேதாந்தங்களும், சகல மதங்களும் நேரே சாவினின்றும் பிறந்த விளைவுகளே யாகும். புதைந்த மரங்களிலே வளர்ந்து கிளம்பும் தேரைகளைப்போலவே, இந்தக் கற்பனை மயக்கங்களும், புதைபட்ட எலும்புகளையே தங்கள் ஊட்டமாய்க் கொண்டு வளர்கின்றன.

நூலை முறைகள் பல திடு திடு வென்று மறைந்து விடுகின்றனவே! ஏன்? இதற்கோர் சமாதானம் நமக்கு வேண்டியிருக்கிறது. பரோவா, ஸீஸர், தாமர்லேன் ஆகிய ராஜாதி ராஜர்களாயினும், தங்கள் வாழ்வை அர்த்த மற்ற நீர்க்குமிழியாய்க் கருத மனமிசைவதில்லை. இல்லையாயின் மனித வர்க்கத்தின் அஹங்காரத் துக்கே யன்றோ ஹானி விளைகின்றது! அற்ப ஈயும் எறும்பும் வேண்டுமானால் அர்த்தமற்று அழியட்டும்; பிராணிகளுக் கெல்லாம் தலைவனான மனிதன் அப்படி அழிய முடியாது.

பயத்தினின்றே மதம் பிறந்தது என்று சொல்லுகிறார்களே, அது உண்மை. இயற்கையைக் கண்டு பயம்; இயற்கைக்கும் அதீதமானதொரு சக்தியை எண்ணிப் பயம்; சாவில் பயம்! கடவுளின் பயங்கர திருஷ்டியிற் படாமல், நமது மும்முரமான காரியங்களை நாம் செய்துகொண் டிருப்பதற்காக, சதா காலமும் தீப தூபப் புகைப் படலங்களை வானத்துக்கு நாம் அனுப்பிக் கொண்டிருக்கிறோம். செத்த சவமொன்றை நாம் காணும் போதெல்லாம், நமது கதியையும் பற்றி நாம் நினைவு கூர்கிறோம்; மந்தி

ரத்தை ஜபித்து, மணியை அடித்து, பயபக்தியோடு ஊர்வலமும் புறப்படுகிறோம். சிலந்தியைப் போல் வெகு ஊக்கமாய் வலையொன்று பின்னி, நாமாய்ப் பின்னிய அம்மெல்லிய வலைத் திரையின் பின்னேயொளிந்து, நமது அசட்டுத் துணிச்சலை மீண்டும் பெற முயல்கிறோம்.

ரூபப் பிரக்ஞை மிகக் கரடு முரடான ஆரம்ப நிலையிலேயிருப்பினும்கூட, அந்தப் பிரக்ஞை தோன்றியவுடனே இயற்கைக் கதீதமானதோர் சக்தியில் ஒரு நம்பிக்கை உண்டாகித்தான் தீர்கிறது. நமது முற்பிதாக்களான ஆதி மனிதர்கள், குரங்குகளாய் மரத்திலே தொங்குவதை விட்டு 'மட்டாங்' தரையிலே குதித்த போதும், திறுதிறு வென்று விழித்துக்கொண்டு தங்கள் குகைகளினின்று வெளிக்கிளம்பிய போதும், கால் பரப்பி அமர்ந்து தம் சிக்கிமுக்கிக் கற்களைச் சூப்பிக் கொண்டிருந்த போதும், சிருஷ்டியின் அற்புதத்தைப் பற்றிப் பளிச் சென்று நினைவு கூர்ந்துதானிருப்பார்கள். காரணம் புரியாததோர் காலடிச் சத்தம், அகஸ்மாத்தாய்த் தோன்றியதோர் வெறு நிழல், தங்கள் குரலே திரும்பி வந்ததோர் எதிரொலி கூடத்தான் — இவையெல்லாம் சந்தேக மெழுப்பிப் பல கற்பனைகளை அவர்களிடம் தூண்டித்தானிருக்கும். அந்தச் சந்தேகாஸ்பதமான அற்ப சம்பவங்களைக் கண்டு அவர்கள் அசட்டை செய்திருப்பினும் கூட, காதைத் துளைக்கும் இடியின் உறுமலைக் கேட்ட போதும், மணிக்கு மணி தம்மருகே மாண்டு கிடக்கும் பிரேதம் கண்ணற்று மூச்சற்றுக் கருத்துமற்றுப் பிடிவாதம் புரியும் போதும், அவர்களில் எவர்தான் அலட்சியம் புரிந்திருக்க முடியும்? இன்று நம்மில் சிலர், வாழ்வின் மர்மத்தைக் கவிதையில் கண்டு திருப்தி கொள்கிறோம். ஆதி மனிதனின் அந்த வியப்புணர்ச்சி இன்னும் நம்மிடம் இருந்துதான் வருகிறது என்பதையே, இது காட்டுகிறது. அறிய வியலாததோர் சக்திக்கு நாம் செலுத்தும் வணக்கமே யாகுமிது.

சூரியனின் இடையறு இரு அயன கதிகளின் கம்பீரமும், மதியின் மாதப் பிறைகளும், வானத்து நட்சத்திரங்கள் நள்ளிரவிலே எண்ணற்று மல்குவதும், நம்மை மதச் சிந்தனைகளிலே மூழ்குமாறு வலியுறுத்துகின்றன. கோடையிலே மலருக்கு மலர் தாவும் வண்ணாத்திப் பூச்சிகளை—வர்ணச் சிறகுடைய, எலும்பேயில்லாத அவ் விசித்திரப் பூச்சிகளை—காணுமொருவன், அவன் பரம மூடனாயிருப்பினும்கூட, அவ் வழியும் அழகுக்குள்ளே மகோன்னதப் பொருளொன்றைக் கண்டு கொள்கிறான்; வாழ்வின் அதிசயத்தைக் கண்டு, ஓர் வியப்புணர்ச்சி உண்டாகிறது; அந்த 'ஆத்மீக' நிலையிலே, தெய்வங்கள் முளைக்கின்றன—வேலியில் கள்ளி போலச் சர்வ சாதாரணமாய் முளைக்கின்றன! இந்த வசதியான கற்பனைச் சக்திகள், நமது மனக் குழப்பச் சிக்கல்களைத் தீர்க்கின்றன; நமது சந்தேகங்களுக்கெல்லாம் சுலபமான பரிகாரமாகின்றன. நமது வியப்புக்குச் சாந்தியேற்படுகிறது. சகலமும் தெளிவாகிவிடுகிறது!

வர்ணனை :

இப்படி ஒரு ஜன்மம்

'மூ'

ஒரு விசித்திர ஜந்து—இருகால் பிராணி — எனது நண்பர்! வரும்போது ஏதோ ஒரு நூதன உருவம்போல் கண்ணுக்குப் புலப்படும்; நெருங்கி வர வர, சிநேகிதரின் முகம் அருமையாகக் கண் முன் துலக்கமாகும்.

நடந்து வரும்போது மூக்கும் வாயும் மாறி மாறித் திறந்த நிலையில் புன்முறுவல் பூக்கும்; கண்கள், பகல் பன்னிரண்டு மணி வெயிலில் ஓடிவரும் கண்ணாடிக் கோலிக் குண்டுகள்போல் சுழன்று மின்னும்; மூக்கின் முனை, வளைந்து, இடது கைப்பக்கம் சாய்ந்து பார்க்கும்; புருவம், மயிர்க்கோடு கலைந்து சிதறிக் கிடக்கும்; கால்கள், மணலைக் கௌவி ருசிபார்த்து நடை பயிலும்; மிதியடியில் உறங்காத விரல்கள்; வயிறு முன்னணியில் தொங்கும் வர்ணச்சட்டைக்கு வாட்டம் கொடுக்கும்; விரிந்த விசாலமான யானைக் காது; குறுகிய நாசி; பள்ளம் பாய்ந்த நெற்றி; அலைக் கன்னம்; புஜத்தைப் பதுக்கிய குட்டைக் கழுத்து; ஈசல் நெஞ்சு; பேனாவைக் கதற வடிக்கும் விரல்; ரோஜாவைப் பழிக்கும் பொத்தான் கூட்டம்; பொடிப் பிரளயத்தில் நனைந்து கிழிந்த வர்ணக் கைக்குட்டை; ஒரு வாரத்துக்கு முன் வெளியான 'ஆனந்த விகட'னைத் தாங்கிய கதர்ப் பை; மூன்று காலணா ஸ்டாம்பைச் சுமந்த தபால் காகிதக் கூடு; புத்தகங்களை ஏடு ஏடாக விழுங்கும் புத்திக் கூர்மை வறுமையின் சிங்காரத் தோற்றம்—இப்படி ஒரு ஜன்மம்.

இரவிலே, அவருடைய கண்கள் காய்ந்த பளிங்கு மைக்கூடுகள் போல் தோன்றும்; விடிந்தால், எண்ணம் நிறைந்து மின்னும்.

இட்டலியைக் கடித்துத் தின்பார்; ரொட்டியை அதப்பி விழுங்குவார்; பழத்தைப் பல்லில் இடித்துச் சாறு பிழிவார்; தோசையைக் கையால் கிழித்துச் சுருட்டி வாய்க்குள் குண்டுபோல் வீசுவார்; நிலக்கடலையைப் பச்சையாகவே பிசாசு போல் தின்பார். தீனி வாயில் நுழையும்போது, பற்கூட்டம் விளம்பரஞ் செய்யும்; மீசை வெளுத்து விம்மி ஆமோதிக்கும்.

இந்த அருமையான உருவம் உறங்கும்போது, ஆங்கில பாஷையில் உள்ள இருபத்தாறு எழுத்தையும் கையாலும் காலாலும் எழுதி கர்ஜிக்கும். அந்த மர்மம்தான் என்னவென்று எனக்குப் புரியவேயில்லை.

“ தற்போதுள்ள இந்திய அரசியல் சட்டம் வெறும் குப்பை. அது நமக்குப் பொறுப்பளிக்கிறது; ஆனால் அதிகாரமளிக்கவில்லை. சகல அதிகாரத்தையும் கவர்னர்களுக்கும், கவர்னர் ஜெனரலுக்கும் அது அளித்து விடுகிறது; ஆனால், சகல பொறுப்புக்களையும் மந்திரிகளுக்கு அளித்து விடுகிறது.”

—கனம் மௌலவி பஸ்லுல் ஹக்.

ஓரங்க நாடகம்: (மொழிபெயர்ப்பு)

கனவு சிருஷ்டிகன்

(ஆர். திருஞானசம்பந்தம்)

அந்தி நேரம். காட்டின் நடுவே மண் சுவர்களா லாகிய ஒரு சிறிய அறை. குளிர்ந்த சந்திரக் கிரணம் வெகு தூரத்துக்குப் பரவியிருக்கிறது. அறையின் பின் பக்கத்தில் ஓர் ஜன்னல். இடப் பக்கத்தில் அடுப்பு எரிந்துகொண் டிருக்கிறது. நடுவில் மேஜை; அதன்மீது வர்ணம் கலந்த சிவப்புத் துணி. இரு புறமும் நாற்காலிகள். அருகே மங்கிய கண்ணாடி விளக்கு எரிந்து கொண்டிருக்கிறது. அப்போது அறைக்குச் சொந்தக்காரியான பயரேட் நுழைகிறாள். கையிலிருந்த துணியைக் கதவின்மேல் போட்டு விட்டு நெருப்பருகே போய் உட்கார்ந்து குளிர் காய்கிறாள். சட்டென்று எழுந்து பாத்திரத்தில் தண்ணீரை ஊற்றிச் சரியாக அடுப்பில் வைத்துவிட்டு வாயிற்படியில் நின்று எட்டிப் பார்க்கிறாள். ஏமாற்றத்துடன் திரும்பி உள்ளே போகிறாள். வெளியில் காலடிச் சத்தம் கேட்கிறது. அதோடு இனிமையான இந்தப் பாட்டின் ஒலியும் வருகிறது:

“நிலவை எதிர் பார்த்து
நிற்காதே நீ காத்து;
குலவும் கொம்பிலைகள்
கதிரை மறைத்திருக்கும்.”

சத்தம் சம்பூர்ணமாகக் கேட்கிறது. வெள்ளைத் தொப்பி ஜன்னல் இடையே தெரிகிறது. பயராட் கதவைத் திறந்து உள்ளே நுழைகிறான்.

பயராட்: (தொப்பியைக் கையில் எடுத்துக்கொண்டே) என்ன இப்படிக் குளிருகிறதே! என் கால் எல்லாம் பனிக்கட்டி மாதிரி உறைந்து போய்விட்டது.

பயரேட்: உன்னுடைய பூட்ஸுகளை இப்போதுதான் நெருப்பருகே காட்டிச் சற்றுக் காய வைத்திருக்கிறேன்.

(அவள் எழுந்துசென்று பூட்ஸுகளைக் கொண்டுவந்து அவன் முன் போடுகிறாள். நெருப்பையும் அருகில் நகர்த்தி வைக்கிறாள்.)

பயராட்: (பாடுகிறான்)

வீணைக் குரலில் கீதம்
விண்ணிலே இசைக்கின்றாள்;
அணையாது நட்சத்திரம்
அள்ளி யள்ளி அடுக்குகிறாள்.

(பின்பு திரும்பி) டீ, தயாராகி விட்டதா?

பயரேட்: ஆச்சு, கொஞ்சம் கொதிக்கவேணும்.

பயராட்: வெளியி லெங்கும் ஒரே பனி மயமாக இருக்கிறது. எனக் கென்னவோ இந்தக் குளிர் காலத்தில் நன்றாகப் பாட வருவதே இல்லை.

பயரேட்: ஆமாம். அந்தப் பாத்திரமும் உன்னைப் போல்தான் குளிராக இருந்தால் ‘சொய் புய்’ என்று பாடுவதில்லை.

பயராட்: அதற்கும் தன் சத்தத்திலே ஆசை இருக்கும் என்று நினைக்கிறேன்.

பயரேட்: நானும் அப்படித்தான் நினைக்கிறேன்.—இப்போது கொதிக்கும் சத்தம், பக்ஷி பாடுவதைப்போல் இல்லை! ஒரு இன்ப கீதம் நிறைந்த பக்ஷியின் நாவிலே நாம் ‘டீ’ போடுகிறோம், இல்லையா?

பயராட்: (எரியும் நெருப்பைப் பார்த்துக்கொண்டு) ஆஹா, எவ்வளவு அழகாகச் சுழித்து எரிகிறது! இத்தனை மினுமினுப்பும், மயக்கும் இதற்கு இருக்கிறதே! ஆனால் உயிர் மட்டும் இல்லை.

பயரேட்: (ரொட்டித் துண்டுகளை அறுத்து வெண்ணெயைத் தடவுகிறாள்.) இங்கே வந்து சாப்பிடு. சும்மா முணு முணுத்துக் கொண்டு உட்கார்ந் திருக்காதே.

பயராட்: நான் யோசித்துக் கொண்டிருக்கிறேன்.

பயரேட்: பேசாமல் டீயைக் குடி. நெருப்புக்குப் பக்கத்தில் உட்கார்ந்துவிட்டால், ஆகாசத்தில் பறப்பதைப்போல் யோசனை வந்து விடுகிறது உனக்கு.

பயராட்: உலகத்தி லுள்ள எல்லோரையும் யோசிக்கும்படி செய்ய வேண்டும். அப்போது அவர்களுக் குள்ளாகக் கிளம்பும் சிந்தனைகளைப் பார்க்க வேண்டும். ஆனால் ஆழமான செய்திகளை அவர்கள் புகையைப்போல் நழுவிப் போகும்படி விட்டுவிட்டால்—?

பயரேட்: சந்தோஷமாக எழுந்து வா, பயராட். பார், வெண்ணெய் எவ்வளவு அதிகமாகத் தடவி யிருக்கிறேன்!

பயராட்: நீதான் எப்போதும் சந்தோஷமாக இருக்கிறாய்.

பயரேட்: நான் அப்படியிருக்க முயற்சிக்கிறேன்.

பயராட்: ஓ ஹோ—!

(மேஜைக் கருகில் உட்கார்ந்து டப்ளரை எடுத்துச் சலிப்போடு ஒரு வாய் குடிக்கிறான்.)

பயரேட்: டீ எப்படி யிருக்கிறது?

பயராட்: சுமார்.

பயரேட்: சுமாராகவா இருக்கிறது?—இன்னும் கொஞ்சம் பால் ஊற்றட்டுமா?

பயராட்: இல்லை, இல்லை—சரியாக இருக்கிறது. என்ன சும்மாத் தொந்தரவு கொடுக்கிறாய்?

பயரேட்: அப்படியா சேதி; வாசலில் கட்டி யிருக்கும் அந்தக் கறுப்பு நாயை அவிழ்த்து விடட்டுமா?

பயராட்: அதிருக்கட்டும். இன்றைக்கு அந்தப் பெண்ணைப் பார்த்தாயா?

பயரேட்: யார் அது?

பயராட்: அவள்தான்; அந்தச் சிவப்பு மெத்தை மாடியோரம் தலையை அழகாக வாரி விட்டுக் கொண்டு, கழுத்தில் கொடி போன்ற சங்கிலி போட்டுக் கொண்டிருந்தாளே, அவள்.

பயரேட்: நான் அவளைப் பார்த்ததில்லை.

பயராட்: ஆனால், நான் தினம் பார்க்கிறேன். அவளும் என்

னுடைய பாடல்களைக் கவனமாகக் கேட்கிருள். ஒவ்வொரு தடவையும் கையை ஆட்டிக்கொண்டு எதையோ சொல்ல முயற்சிப்பவள் போலிருக்கிறது. அழகே உருவெடுத்ததைப் போலிருக்கும் அவளைக் காணும்போது நரம்புகளிலும் தித்திப்பு ஏறுகிறது.

பயரேட்: அப்படிச் சிங்காரித்தபடி நிற்கிருள்.

பயராட்: நான் நிச்சயமாகச் சொல்லுகிறேன், அவளால் அப்படிச் செய்துகொள்ளவே முடியாது............ நீதான் அவளைப் பார்க்கவில்லையென்ருயே, உனக்கு எப்படித் தெரியும்?

பயரேட்: ஒருவேளை பார்த்தும் இருக்கலாம்.

பயராட்: இந்தா, பயரெட். அவளிடம் உனக்கிருக்கும் பொருமை நியாயமானதல்ல. (கோபமாக)—இப்போது நாமிருவரும் ஒன்ருகச் சேர்ந்து நடிக்கிரேம்.—இவ்வளவுதான். நான் பார்த்து ஒருத்தியைக் கலியாணம் செய்துகொள்ள வேண்டுமானால், செய்துகொள்வேன். நீயும் அப்படியே....

பயரேட்: (சிரித்தபடி) இன்னும் வெகு சமாசாரங்கள் வரும் போலிருக்கிறதே! எனக்குப் பொருமை இல்லை........உம். இதைக் கேட்க வேடிக்கையாக இருக்கிறது.

பயராட்: (வெளியே திரும்பிப் பாடுகிருன்.)

மதியை எதிர்பார்த்து
மயங்காதே நீ மனமே;
விதியின் குழந்தையவள்
விண்ணடியில் தூங்குகிருள்.

பயரேட்: நாடகம் முடிந்த பிறகு, நீ அந்தப் பெண்ணைப் பார்த்தாயா?

பயராட்: இல்லை; அவள் கூட்டத்தில் கலந்து விட்டாள். இப்போது போய்த் தேடிப் பார்க்கலாமென்றிருக்கிறேன்.

பயரேட்: நீ நெருப்புக்குப் பக்கத்தில் உட்கார்ந்து சற்றுக் குளிர்காயேன். இங்கிருந்தாலும் துணிதைக்க எனக்குக் கொஞ்சம் உதவியாக இருப்பாய்.

பயராட்: நிஜமாகவா? என்னைக் 'கோட்டா' பண்ணுதே. ஆமாம். மேலும் மேலும் கிழிந்து போவதையே போட்டுக்கொண்டிருந்தால் என்ன?

பயரேட்: விசித்திரமான பேச்சுக்களெல்லாம் பேசாதே. துணி கிழிந்து போனல் தைத்துப் போட்டுத்தான் ஆகவேண்டும். அதே போல் புத்திசாலிகள், கவிழ்ந்த காரியங்களை மறுபடியும் எடுத்துச் சரி செய்கிருர்கள்.

பயராட்: எனக்குப் பாட்டு எழுதுவதற்கு இது ஒருவிதக் கருத்தைக் கொடுக்கிறது.

பயரேட்: அப்படியானல் உடனே எழுது.

பயராட்: இந்த எண்ணம் முன் பொரு தடவைகூட என் நினைவுக்கு வந்தது.

(மேஜையருகில் ஓடி நோட்டுப் புஸ்தகத்தில் பின்வரும் பாட்டை எழுதுகிருன்.)

வாழ்வென்ற உயிர்க் கம்பளியை
வகை வகையாகப் பிரித்துப் பார்;
பாழ் பட்டழிந்த தொவ்வொன்ருய்

(ஒரு நிமிஷம் யோசிக்கிருன். மறுபடி ஆரம்பிக்கிருன்)

பறந்து போகக் காண்பாய் நீ.

(படிக்கிருன்)

பயரேட்: இதை நாடகத்தில் பாடுவாயா?

பயராட்: நீ எப்பொழுதும் அதிக உற்சாகமாகவே பேசுகிருய்.

பயரேட்: வெளியில் ரொம்பக் குளிராக இருக்கிறது. நீ இங்கேயே இருந்துவிடு.

பயராட்: உன்னுடன் ஓயாமல் பேசி, எதையாவது சொல்லி உனக்கு என் துக்கத்தைத் தரவேணும்?

பயரேட்: நான் எப்பொழுதும் சந்தோஷமாக இருப்பதாக இப்போதுதானே சொன்னய்.

பயராட்: பழையபடி ஆரம்பித்து விட்டாயே!

பயரேட்: நீ வெளியே போகாதே, பயராட். சுற்றிலும், நடுக்கும் குளிராக இருக்கிறது. நான் உன்னைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன். இங்கேயே உட்கார்ந்திருக்க மாட்டாயா?

பயராட்: இல்லை. நான் போய்த்தான் ஆகவேண்டும். எப்படியாவது அந்தப் பெண்ணைக் காணவேண்டும். என்னுடைய கனவில் வந்த அழகியாக அவள் ஏன் இருக்க முடியாது?

பயரேட்: நீ மானசீகமாக ஒரு பெண்ணை எதற்காகக் கற்பித்துக் கொள்ளுகிருய்?

பயராட்: இந்த மாதிரி ஒரு வாலிபனை உன் மனதில் நீ சிருஷ்டித்துக் கொண்டதேயில்லையே?

பயரேட்: கண்ணுக் கெதிரே தெரிவதைத்தான் நான் நம்புவேன்.

பயராட்: பெண்களெல்லோருமே கற்பனையற்றவர்கள். அவர்களுடைய உள்ளங்களிலிருக்கும் வார்த்தைகளை நேராக ஏனே வெளியிடுவதில்லை. கிடக்கிறது அது. எனக் கென்னவோ என் மனச் சிம்மாசனத்தில் வீற்றிருக்கும் இளவரசியைக் கண்டு மணம் புரியவேண்டுமென்று ஆசை.

பயரேட்: (பரிதாபமாக அவன் கைகளைப் பிடித்துக்கொண்டு) பயராட், வஸந்த காலம் வருஷத்துக்கொரு முறைதான் வரும். இந்த இனிய இசைகளெல்லாம் காணக் காண மறைந்துவிடும். இன்னும் சொல்ப நாளைக்கே அமிர்தத்தின் மெல்லிய நாதம் கேட்டுக்கொண்டிருக்கும்.

பயராட்: உன்னல் இதையெல்லாம் புரிந்துகொள்ள முடியவில்லை. சரி, நிறுத்திக் கொள்ளுகிறேன்.

(பயராட் எழுந்து பாடிக்கொண்டு பாதையிலிறங்கி நடந்து போகிருன். கொஞ்சம் கொஞ்சமாக அவன் தோற்றம் மறைகிறது. கனவில் கேட்பதைப்போல் 'நிலவை எதிர்பார்த்து நீ காத்து

நிற்காதே" என்ற அடிகள் மங்குகின்றன. பயரெட் அடுப்பருகே சென்று நெருப்பைச் சரியாகத் தள்ளுகிருள். மறுபடி ஒருதரம் பனிமூடிய அவன் சென்ற தடத்தை உற்று நோக்குகிருள். அவள் கண்ணில் ஜலம் நிறைகிறது. அந்தச் சமயம் பால்யத்தில் அவள் கேட்ட பாட்டொன்று நினைவுக்கு வருகிறது. மெதுவாகக் குளிர்ந்த நினைவுகளின் அலை மோதவும், பாடுகிருள்.)

வீதியோரம் முனகிக் கொண்டு
விழுந்து கிடந்தாள் பைத்தியக்காரி.
நாதியற்ற அவளைக் கண்டு
நகைத்துச் சென்றனர் பார்த்தவ
[ரெல்லாம். (1)

கோதி முடியாக் கூந்தற் சுருள்கள்
கொஞ்சி நின்றன கன்னத் தோரம்.
பாதி மூடிய கனவுக் கண்களின்
பதைப்பு முழுதும் கண்டவ ருண்
[டோ. (2)

மனத் திரையிலே மறைந்த காதலன்
வந்து தோன்றி வீதியிற் கிடக்கும்
கனவுக் கண்களைக் கரத்தால் தொட்
[டுக்
கவிழ்ந்த தலையில் கண்ணீர் சொரிந்
[தான். (3)

போன நாட்களை எண்ணி யங்கே
புழுதியிற் கிடக்கும் பைத்தியக்காரி
காண நினைத்த காதல னிடத்தில்
கதறிச் சொன்னுள், காவியம் போலே!
(4)

பார்த்தவர் யாவரும் பரிகசித்தனர்.
பலபல பேசிப் பதறும் மனதில்
வார்த்த இருளில் மறைந்த ஒளியை
வந்து போனவர் கண்டது முண்டோ?
(5)

(அவள் கண்களி லிருந்து கண்ணீர் வழிந்துகொண்டே யிருந்தது. கைகளால் பொத்திக்கொண்டு அழுதாள். அதே சமயம் கதவை இடிக்கும் சத்தம் கேட்கிறது. திடுக்கிட்டுத் திரும்பினுள். மறுபடியும் தட்டும் சத்தம் வருகிறது.)

பயரெட் : (கண்ணைத் துடைத்துக்கொண்டு) யார் அது? உள்ளே வாருங்கள்.

(மெதுவாகத் திறந்த கதவு மூடிக் கொண்டது. வெளியே சந்திர வெளிச்சத்தில் ஆலை முதலாளி நிற்கிருன். பார்வைக்குப் பயங்கரமாகத் தோன்றினுலும் அன்புள்ள மனதுடையவன். சிறு குழந்தைகள் அவனைக் கண்டால் பயந்து போய் விடுவார்கள். அவன் வெள்ளிப் பொத்தான்கள் கொண்ட பச்சை நிறக் கோட்டு அணிந்திருக்கிருன். சொந்த வீடுபோலத் தாராளமாகக் கதவைத் திறந்து விட்டு உள்ளே நுழைகிருன். மறுபடி கதவு மூடிக் கொள்ளும் சத்தம் கேட்கிறது.)

பயரேட் : (அவனுக் கெதிரில் வந்து) நீங்கள் கதவைத் தட்டும் போதே திறந்திருக்கு மென்றல்லவோ நினைத்தேன்.

ஆலை முதலாளி : அதைப்பற்றிப் பரவாயில்லை. இது எனக்குச் சகஜமான வேலை. வரும் வழியில் நான் பார்த்த கதவுகளுக்கு இது எவ்வளவோ சுலபமாகத் திறந்து கொண்டது. சில கதவுகளின் மீது உறுதியான ஆணிக் குமிழ்கள் பதித்திருந்தனர். ஆனல் நீங்கள் நம்பக்கூட மாட்டீர்கள். அவையெல்லாம் தட்டுவதற்குச் சிரமமாயிருக்கும்........கிடக்கட்டும். நான் யார் என்று தெரிந்தால் நீங்கள் ஆச்சரியப் படுவீர்கள்.

பயரேட் : என்னுடைய ஆச்சரியமெல்லாம் இதுதான் : நீங்கள் பசியாயிருக்கிறீர்களோ, என்னவோ?

முதலாளி : ஆஹா, பெண்களின் உபசரிக்கும் தன்மைதான் என்ன! அம்மா, உங்கள் நன்றிக்கு வந்தனம். ஆனல் நான் அதிகச் சாப்பாட்டுக்கார னல்ல வென்பதையும் சொல்லி விடுகிறேன். கொஞ்சம், ஒரு குழந்தை சாப்பிடும் சாதம் இருந்தாலே போதும்........ சில சமயங்களில் ஒரு புன்னகை—அமிர்தம் கலந்த ஒரு பார்வையே என்னைத் திருப்திப் படுத்தி விடுகிறது.

பயரேட் : சாப்பிடாமல் போனல் போகிறது. இதை உங்கள் வீடாகப் பாவித்துச் சற்று இளைப்பாறிக் கொள்ளுங்கள்.

முதலாளி : (கட்டிலருகில் சென்று) நான் எல்லா வீடுகளையும் அப்படித்தான் பாவிப்பது. என்னுடைய கால்களை இந்தச் சட்டத்தின்மேல் போட்டுக் கொள்ளலாமா? இந்த வழக்கம் என்னிடம் வெகு நாளாக இருக்கிறது. எங்கும் அப்படித்தான் செய்வது.

பயரேட் : (சிரித்துக் கொண்டு) காலைக் கீழே போட்டுக்கொண்டிருந்தால் கட்டிலின் சுகம் தெரியாது.

முதலாளி : (திருப்தியுடன்) சரிதான், நான் வரும்போது நீ அழுது கொண்டிருந்தாயா?

பயரேட் : ஆமாம்.

முதலாளி : நீ அழுத காரணம் எனக்குத் தெரியும். அவனுக்காக—பயராட்டை நினைத்துத் துக்கப்பட்டாய்; அவனிடமுள்ள பாசத்தால் அழுதாய். ஆனல் அவன் அதைக் கவனித்தானு? ஆஹா! என்ன கொடூரமான உலகம் இது! உன்னுடைய கண்ணீர் வெள்ளத்தால் அவனது பாதங்களைக் கழுவ நீ காத்திருக்கையில்........!

பயரேட் : நான் ஒருபோதும் இப்படி அழுத தில்லை. இன்று இரவு பயராட் அதிகச் சிடு சிடுப்பாக இருந்தான். நான் எவ்வளவோ முயன்று சந்தோஷப் படுத்தப் பார்த்தேன்.

முதலாளி : என்ன, சிடுசிடுப்பா?

பயரேட் : ஆனல் அவனுக்கு அது தெரியாது. இந்தக் குளிர் இரவில் நாடகக்காரன் கூட எங்களுக்குச் சேரவேண்டிய பணத்தைக் கொடுக்கவில்லை...........எங்களைப் பற்றிய கதையைப் பத்திரிகாசிரியர் போடுவதாகச் சொல்லியிருக்கிருர்........... பின்னல்தானே அதற்குப் பணம் வரும்........இதனல் மனது கொஞ்சம் சஞ்சலப் பட்டிருக்கிறது.

முதலாளி : உன்னுடைய கண்ணீரைக் கண்டு அவன் மனம் இளகுவான் என்று நினைக்கிருய்?

பயரேட் : நிச்சயமாக.

முதலாளி : ஆமாம். ஹிருதயத்திலிருந்து துளிக்கும் அந்த முத்துக்கள் வீணுகவா உலர்ந்து போகும்? ஒரு பெண்ணின் புலம்பலுக்கு உருகாத மனித உள்ளத்தை நான் கண்டதே கிடையாது!

பயரேட் : இல்லை, அவன் குறிப்பறிந்து நடப்பதில் ரொம்பச் சமர்த்

தன். என்னைவிடப் பயராட்டைப் பற்றி உங்களுக்கு அதிகம் தெரியாது. ஆனால் அவன் என்னவோ உதாசீனமாக இருப்பது வாஸ்தவம்தான். இருந்தாலும் காதல் என்பது எப்படி மனதை மாற்றியமைத்து விடுகிறது!

முதலாளி: அது உண்மைதான். ஆனால் உன்னுடைய சேவைக்குத் தகுந்த பிரதிப் பலன் கிடைப்பதில்லை.

பயரேட்: வாஸ்தவம். நான் அவனுக்காக என்னென்னவோ செய்கிறேன். அதைச் செய்யும் போதெல்லாம் அவனுக்காகச் செய்கிறோம் என்பதனாலேயே ஆனந்தம் ஏற்படுகிறது. அவனுக்கும் என்னிடம் அன்பில்லா விட்டால் அதையெல்லாம் 'வெட்டி வேலை' என்றே நினைத்திருப்பேன்.

முதலாளி: அதை உண்மை அன்பு என்று நினைக்கிறாய்?

பயரேட்: சந்தேகம் என்ன?

முதலாளி: இல்லை, நீ அவனை எந்நேரமும் நினைத்துக் கொண்டிருக்கிறாய். ஆனால் அவன் யார் யாரைப் பற்றியோ பேசுகிறான். உனக்குச் சாப்பி என்பவளைப் பற்றித் தெரியுமா? அவள் வீடு எங்கேயிருக்கிறது?

பயரேட்: (அவசரமாகக் கையை நீட்டி) இதோ பக்கத்தில்தான் இருக்கிறது.

முதலாளி: உன் வீட்டுக்கு வடபுறத்தில். இல்லையா? சரி, எல்லாப் பாட்டுகளும் பயராட் உன்னைக் கலந்தே எழுதுகிறானே. அது எதனால்?

பயரேட்: அதா—அது....அவன் பயராட். ஆகையால்.......

முதலாளி: 'அவன் பயராட் ஆகையால்!' இந்தக் காரணம் போதுமா?

பயரேட்: இல்லை, அவன் கொஞ்சம் கனவு காண்பவன். அது அவனது இயற்கை என நான் நினைக்கிறேன். அவன் முயற்சி செய்தால் எவ்வளவோ பெரிய காரியங்களை யெல்லாம் சாதித்து விடுவான். அவன் சிரிக்கும்போது கவனித்திருக்கிறீர்களா? எவ்வளவு மலர்ச்சியுடன் அழகு கொண்டதாக இருக்கிறது! சில சமயங்களில் அவன் கண்களின் ஆழத்திலே என்ன விருக்கிறது என்பதைக் காண முயன்றிருக்கிறேன். (வெட்கத்துடன்) மற்றவர்களைப் பார்த்துப் புன்னகை கொள்வதைவிட என்னைப் பார்த்து அதிகமாகவே சிரிக்கிறான்.

முதலாளி: மற்றவர்களைவிட— வேறு பெண்களைப் பார்த்தும் சிரிப்பதுண்டோ?

பயரேட்: இல்லை, நாடகத்தில் சில ரூபவதிகள் தோன்றுவார்களோ இல்லையோ? அப்படி முக்கிய மில்லாவிட்டாலும் சில சமயங்களில், இன்றுகூட, வளர்ந்த சிவப்புக் கன்னங்களும் குளிர்ந்த பார்வையுமுடைய அந்த எலியட்டைத் தேடிக்கொண்டு போயிருக்கிறான். ஆனால், இதெல்லாம் அவர்கள் குற்றமல்ல; அவர்களில் ஒருத்தியும் இவனை உள்ளன்புடன் நேசிக்க மாட்டார்களென்பது எனக்குத் தெரியும். (கர்வமாக) எந்த யுவதியும் அவன் அழகைக் கண்டு நிச்சயம் மயங்கி விடுவாள்.

முதலாளி: ஒரு வேளை அந்த யுவதிகளில் யாராவது பயராட்டை மணம் செய்துகொண்டால்?

பயரேட்: அவர்கள் ஒருக்காலும் அதற்கு ஒப்பமாட்டார்கள். ஒரு பெரும் பணக்காரி ஏழைப் பாடகனைக் கலியாணம் செய்துகொள்ள இசைவாளா? அப்படிப் பயராட் விவாகத்துக்கு இணங்கி விட்டால்....நான் உலகில் இருக்கப் போவதில்லை...........சே! இந்த மாதிரி வார்த்தைகள் ஏன் என் வாயிலிருந்து வருகின்றனவோ? ....உம்....ஆனால் உங்களை எனக்கு ரொம்ப நாளாகத் தெரியும், அதனால்...........

(முதலாளி சட்டெனக் கட்டிலிலிருந்து எழுகிறார். மேஜையருகே வெள்ளைத் துணியை விரித்துக் கொண்டே பயரேட் திரும்புகிறாள்.)

முதலாளி: (தணிந்த குரலில்) என்ன, உனக்கு ரொம்ப நாளாகத் தெரியுமாகையால். ....ரொம்ப நாளாக........

(முதலாளியின் குரல், அன்பும் கனிவும் கலந்து, பரிவுடன், மிருதுவாக ஒலித்தது. துணி போடுவதையும் விட்டுவிட்டு ஆச்சரியத்தோடு பார்க்கிறாள். ஒரு நிமிஷம் கழித்து அந்த வார்த்தைகளை உச்சரித்துக் கொண்டு நெருப்பருகே போய் உட்காருகிறாள். ஒரு மெல்லிய சிரிப்பின் ரேகை உதட்டருகே விளையாடி மறைகிறது.)

பயரேட்: (முதலாளியின் கோட்டு ஜேபியில் கிடந்த உண்டை வில்லை எடுக்கிறாள்.) இங்கே, இதைப் பாருங்கள்.

முதலாளி: அடடா, அதை நீ பார்த்து விட்டாயா? என்னுடைய ஜேபிக்குள் சிக்கிக் கொண்டிருக்கிற தென்றல்லவோ நினைத்தேன். நான் ஒரு காலத்தில் வில் வித்தையில் மகா கெட்டிக்காரனாயிருந்த விஷயம் உனக்குத் தெரியாது. ஆனால் இப்போது வில்லைக் கையிலெடுப்பதேயில்லை. (அதை எடுத்து ஜேபிக்குள் போட்டுக் கொள்ளுகிறான்.)

பயராட்: (தூரத்தில் பாடிக் கொண்டு வருகிறான்.)

நிலவை எதிர்பார்த்து
நிற்காதே நீ காத்து!

முதலாளி: (கவனமாகக் காது கொடுத்துக் கேட்கிறான்) யார் பாடிக்கொண்டு வருகிறது?

பயரேட்: பயராட்தான்.

(வெள்ளைத் தொப்பி ஜன்னலின் வழியே தெரிகிறது. பயராட் அறைக்குள் நுழைகிறான்.)

பயராட்: அவளை எங்குமே காணோம். (நாற்காலியில் உட்காருகையில் முதலாளியைப் பார்க்கிறான்.) ஓ! நீங்கள்....நீங்கள்.....?

(அடுத்த மாதம் முடிவுறும்.)

நவீன வழக்கங்கள்

(எஸ். விசாலாக்ஷி)

"மீனு, இதைவிடப் புடவை கட்டிக் கொள்ளாமலே யிருந்து விடலாமே. ஐந்து ரூபாய்க்குப் பாவாடை வாங்கி, அதன் மேல் என் கண்ணாடியைப் போல மெல்லிய 'ஜார்ஜெட்' புடவையைக் கட்டிக் கொள்ள வேண்டும்? தெய்வமே என்று பாவாடை சட்டையோடு நின்றுவிட்டால், அண்ணாவுக்கும் புடவைப் பணம் மிச்சமாகுமே" என்று தன் மதனியைப் பார்த்து, ஊரிலிருந்து டிஸம்பருக்காகச் சென்னை வந்திருந்த ருக்மணி கேட்டாள்.

"நீங்கள் இப்படிச் சொல்லுகிறீர்கள். உங்களைப் போல நாட்டுப் புறத்தில் கட்டுப் பெட்டி மாதிரி உட்கார்ந்திருப்பவர்களுக்கு எப்படி இருந்தபோதிலும் பரவா யில்லை; ஒருவரும் ஒன்றும் சொல்ல மாட்டார்கள். இங்கே பட்டணத்தில் அப்படி யிருக்க முடியுமா? கொஞ்சம் 'பாஷன்' ஆக இல்லாவிட்டால் 'கர்னாடகம்', 'மடிசஞ்சி', 'பத்தாம் பசலி' என்றெல்லாம் பேர் வைத்து விடுவார்கள். வெளியிலே தலை காட்ட முடியாது. நானே கொஞ்சம் மிதமானவள் என்றுதான் பேரு" என்று மீனு சமாதானம் சொன்னாள்.

"எனக்கென்னவோ இந்த பாஷன் கீஷனெல்லாம் புரிகிறதே யில்லை யம்மா. குளிரையும் வெயிலையும் தாங்குவதே உடைகளுக்கு அழகு. இந்தப் பனிக் காலத்தில் இவ்வளவு மெல்லிய ஆடை அணிவதாயிருந்தால், கோடைக் காலத்தில் பிறந்த மேனிக்குத்தான் இருக்க வேண்டும் போலிருக்கு! மிதமானவள் என்று பெயர் வாங்கிய நீயே இப்படி யிருந்தால், மிதமிஞ்சியவர்கள் இன்னும் எப்படி யிருப்பார்களோ?" என்று ருக்மணி ஆச்சரியப்பட்டாள்.

மியூஸிக் அகேடமி சங்கீதக் கச்சேரிக்குப் போவதற்காக என் சிநேகிதை மீனாக்ஷியை நான் அழைக்கப் போன போது, இந்தச் சம்பாஷணை என் காதில் விழுந்தது. இந்த 'பாஷன்' இருக்கிறதே இதைப் போன்ற கொடுமை வேறொன்றும் இல்லையென்றே நான் நினைக்கிறேன். புடவைக்காரன் பிழைப்பதற்காகப் பல விதங்களில் தறி போடுகிறான். அது 'பாஷனா'க வந்து பெண்களை என்ன பாடு படுத்துகிறது! இன்று 'லுங்கி பாட்டர்ன்' 'பாஷ'னி லிருக்கிறது. நாளை அதில் 'ரிப்பன் பார்டர்'; அதற்கடுத்த நாள் இன்னொரு மாதிரி. இப்படிச் சீதோஷ்ண ஸ்திதி போல மாறிக் கொண்டிருக்கும் 'பாஷனு'க்கு, சினிமா நடிகைகள்தான் 'பாரோமீடர்'—சீதோஷ்ணமானி! தேவிகா ராணி பார்டர், கண்ணாம்பா ஜாக்கெட், சேவாசதன் சேலை இத்யாதி நாமகரணங்கள் ஆடை அணிகலன்களுக்கு ஏற்படுகின்றன!

நாற்பது ரூபாயில் காலட்சேபம் செய்ய வேண்டியிருக்கும் ஒருவன், மாதம் நான்கு முறை சேலைகள் வாங்கவும் பதினைந்து முறை ரவிக்கைகள் தைக்கவும் நேருமானால், கடன் படாமல் என்ன செய்வான்? வீட்டில் மனைவி கொடுக்கும் தொந்திரவை விடக் கடன்காரர் அவதியே மேல் என்று நினைத்து, அநியாய வட்டி வாங்கி ரத்தத்தை உறிஞ்சக் கூடிய சில மார்வாடிகளிடமும் பட்டாணிகளிடமும் கூடக் கடன் வாங்க முற்படுகிறான். அதனால் குடும்பமே அழிய ஏதுவாகிறது.

புடவை ரவிக்கையோடு இந்த 'பாஷன்' நின்று விட்டால் போதும் என்று புருஷர்கள் பிரார்த்தனை புரிந்து கொண்டிருந்தார்கள். ஈசன் அதற்கும் செவி சாய்க்கவில்லை. 'பாதாதி கேச பர்யந்தம்' என்று வாய் வார்த்தைக்குச் சொல்வது வழக்கம். இந்த 'பாஷன்' இருக்கிறதே இது நுனி மயிரிலிருந்து கால் விரல் நகம் வரையில் இப்போது வியாபித்திருக்கிறது. மயிரைக் கட்டியிருக்கும் ரிப்பன், தலையில் சூட்டியிருக்கும் புஷ்பம், (டிஸம்பர் பூ என்ற ஒரு வகைப் புஷ்பம், பலவித வர்ணங்களில் பூப்பது இதற்காக வென்றே போலும்) மேலே போட்டிருக்கும் ரவிக்கை, மேனியில் உடுத்தியிருக்கும் புடவை, காலில் அணிந்திருக்கும் செருப்பு இவ்வைந்திலும் நிற ஒற்றுமை இருக்க வேண்டும்; இவற்றில் ஏதாவதொன்று மாறினால், மற்றவையும் மாற வேண்டும். இது தவிர, நகங்களுக்கு 'கூட்டெக்ஸ்' பூச்சு! முன்னெல்லாம் மருதாணி இட்டுக் கொள்வார்கள். இப்பொழுது அதற்குக்கூடச் சீமையிலிருந்து சாயம் வருகிறது!

முகத்துக்கு "க்ரீம்", 'ஸ்நோ' என்ற பலவிதப் பூச்சுகளும் பொடிகளும் பிரயோகிக்கப் படுகின்றன. இதில் விசேஷம் என்னவென்றால், பூச்சுகளினாலும் பொடிகளினாலும், கிழவிகளுக்கு ஒரு வேளை யௌவனம் வாய்த்தாலும் வாய்க்கலாம். ஆனால், இவற்றினுதவியால் குமரிகள் மட்டில் கிழவிகளாகத்தான் தோற்றமளிக்கிறார்கள். சோப்பு, கிரீம் ஆகியவற்றில் உபயோகிக்கப்படும் காஸ்டிக் சோடாவும் சுண்ணாம்புத் தெளிவும், பவுடர்களில் சேர்ந்திருக்கும் செயற்கை வாசனைத் திரவியங்களும் சருமத்தின் ஜீவனை உறிஞ்சி விடுகின்றன. இதனால் சருமம் பளபளப் பற்றுச் சுருங்கிக் கிழத்தன மடைந்து விடுகிறது. பௌடரின் பூச்சு அழிந்ததும், வசீகரம் பொருந்திய வதனம் பொலிவற்று, தொண்ணூறு வயதுக் கிழவியைப் போலச் சுருக்கங்களுடன் வெளிறிட்டு விடுகிறது.

பலவகைச் செயற்கை வாசனைத் திரவியங்களான செண்டுகளால் தயார் செய்யப்பட்ட கூந்தல் வளரும் எண்ணெய்களை உபயோகிப்பதால், பதினெட்டு வயதுக்குள் நரை ஏற்பட்டு விடுகிறது. வெறும் தேங்காயெண்ணெயோ, நல்லெண்ணெயோ போட்டு வாரிக் கொண்டிருந்த எங்கள் பாட்டிக்கு, வயது 72 ஆகியும் இன்னும் அவள் தலையில் நரை முற்றவில்லை. நானாவிதக் கூந்தல் தைலங்களை உபயோகித்து வரும் என் தங்கையின் தலையிலுள்ள கறுப்பு மயிர்களை, இரண்டாங் 'கிளாஸ்' பையன் (நூறு வரையில்தான் எண்ணத் தெரிந்தவன்) கூட எண்ணி விடுவான்.

மஞ்சள் பூசுவது 'பாஷ'னில்லை என்று ஆரம்பித்ததன் பலனாகப் பல பெண்மணிகள் ஆண்மக்களோடு போட்டியிடுவது அதிகமாகி யிருக்கிறது. பெண்கள் மஞ்சள் பூசி வந்ததால், சருமத்துக்கு மிருதுவும் வசீகரமும் ஏற்பட்டதோடு, ரோம வளர்ச்சியும் தடைப்பட்டுவந்தது. இப்போது அவ்வழக்கம் போய்விட்டதால் பல மங்கையர் முகத்தில் ஆண்களின் தோற்றம் ஏற்பட்டு விடுகிறது. 'பாஷன்' என்பது உயிர் வாழும் எல்லா ஜந்துக்களுக்கும் பொதுவான இயற்கை உணர்ச்சிகளின் விளைவு என்றுதான் மனோதத்துவ சாஸ்திரிகள் அபிப்பிராயப் படுகிறார்கள். தற்காப்பு உணர்ச்சியும், வம்சவிருத்தி உணர்ச்சியும் சகல ஜீவன்களுக்கும் உண்டு. சீதோஷ்ணங்களினின்றும் நம்மைக் காப்பாற்றிக் கொள்ள விரும்பும் தற்காப்பு உணர்ச்சியால் உடைகளை அணிகிறோம். வாழ்க்கைக் குரிய துணைவனை அடைய வேண்டும் என்ற வம்சவிருத்தி உணர்ச்சியால், உடம்பை அலங்கரித்துக் கொள்கிறோம். இயற்கையில் இது சாதாரணம். புள்ளினங்களின் அழகிய சிறகுகள் இதற்குச் சாட்சியாகும். ஆனால், பகுத்தறிவு படைத்த மனிதர்கள் இவ்வுணர்ச்சி வேகத்தில் வரம்பு மீறி வெகு தூரம் வந்து விட்டனர். இதனால் அழகெது, வசீகரம் எது, தற்காப்பு எது என்பதெல்லாம் தெரியாமல் போய்விட்டது.

சில 'பாஷன்'களை உதாரணமாக எடுத்துக் கொள்வோம். ஏதோ ஒரு ஆங்கிலேய அரசிக்கு ஜன்னி பாத ஜுரம்

வந்து மயிர் கொட்டி விட்டதாம். ஜுரம் குணப்பட்டு, தான் சபைக்கு வந்த பொழுது, பிறர் தலையிலிருந்த நீண்ட கூந்தல்களைக் கண்டு அவள் மனம் புழுங்கினாளாம். சபையிலிருந்த சீமாட்டிகளெல்லாம் இதை உணர்ந்து, அரசியின் மனக் கலக்கம் நீங்குவதற்காகத் தங்கள் தலை மயிரையும் குட்டையாக வெட்டிக் கொண்டார்களாம். பின்னால், இதையே வழக்கமாய் வேறு பலரும் அனுஷ்டிக்கத் தொடங்கி விட்டார்கள். இவ் வழக்கம் மேனாட்டில் எப்படியாவது இருந்து தொலையட்டும். நமது ஸ்திரீகளிலும் சிலர் இதைப் பார்த்துத் தங்கள் தலை மயிரை வெட்டிக்கொண்டு காட்சி யளிப்பது எவ்வளவு கோரமாய் இருக்கிறது !

இவ்வாறேதான், மற்றோர் வெள்ளைக்கார அரசிக்கு ஒரு கால் குட்டையாகவும் மற்றொரு கால் நீளமாகவு மிருக்கவே, உயர்ந்த குதிகால் செருப்புகளை அணிய ஆரம்பித்தாள். அதே வழக்கமாய் உயர்ந்த குதிகால் செருப்புகள் 'பாஷ'னில் வந்து விட்டன.

மேனாட்டாரைப் பார்த்து இம்மாதிரி விசித்திரப் பழக்கங்களை நாமும் கைக்கொண்டுவிடுகிறோம். இந்த அடிமை மனப்பான்மை நம்மை விட்டு என்று தொலையுமோ அன்றுதான் நமது விடிவுகாலமாகும்.

அவர்கள் நம்முடைய நடையுடை பாவனைகளைக் கைக்கொள்ளுகிறார்களா பாருங்கள்! அவர்களுடைய தேச சீதோஷ்ண ஸ்திதிக்குத் தக்கவாறு அவர்களது உடைகள் அமைந்திருக்கின்றன. வரிப் புலியைப் பார்த்துச் சிங்கம் தன் உடம்பிலே சூடிக்கொண்டால், அழகா யிருக்குமா? மதியீனந் தானே ஆகும்.

சில நாட்களுக்கு முன் நான் ஒரு கூட்டத்துக்குப் போயிருந்தேன். ஊரைச் சொன்னாலும் பேரைச் சொல்லக் கூடாதல்லவா? அங்கே அக்கிராசனம் வகித்தவர் ஒரு இந்தியர். கவடு சூது தெரியாதவ ராகையால், சற்றுப் பருத்திருந்தார். அவரைச் சுற்றிப் பிடிக்க மூன்று பேர் வேண்டுமென்றால், பார்த்துக் கொள்ளுங்களேன். டிஸம்பர் மாதம்; மேலே மின்சார விசிறி சுற்றிக் கொண்டிருக்கிறது. இருந்தும் அவர் முகத்தில் வியர்வை ஆறாய்ப் பெருகிற்று. காரணம் மேனாட்டு மோஸ்தரில் தைக்கப்பட்டிருந்த உடையை அவர் அணிந்திருந்ததுதான். ஐயோ பாவம்! தமது சுதேசி உடையை அணிந்திருந்தால், இந்த அவஸ்தை அவருக்கு நேரிட்டிருக்குமா?

சக்தி

'நாணல்'

சின்னஞ் சிறிய தளிர்க்கை விரித்துத்
  தேமலர் காற்றில் அலர் தூவும்;
தென்னை மரத்தினில் வெண்பொன் சோர்ந்து
  தேனை உலகில் நிலா வீசும்;
விண்ணை யளந்த வியப்பினை அங்கொரு
  விந்தைக் குருவி இசை யாக்கும்;
சொன்ன கவிதைக் கருத்தை யெலாம்இவள்
  சோபை நெருப் பொரு பொய்யாக்கும். 1

சத்தமிட்டுத் தரை முட்டித் தொட்டுத் திரைத்
  தாவணி ஓலக் கடல் வீசும்;
கொத்தி அலைநுரை கோதிய நாரைகள்
  கோலப் புயலில் மிதந்து வரும்;
பத்தி பத்தியாக நின்று படர்முகிற்
  பாத்தியிலே மின்னல் பாய்ந்து வரும்;
சுற்றித் திசையெங்கும் துள்ளி நிறைந்து
  சோவெனவே மழை சாய்ந்து விழும். 2

தத்திமி தோமென் றரற்றிச் சதங்கை—த
  யங்கித் தயங்கி ஜதி பேசும்;
சித்த முருக்கிச் சிவ மயமாக்கிச்
  சின்மயம் வீணைக் குரல் விம்மும்;
ஒத்திவை தம்மோ டுங்கி அதிர்ந்திட்
  டோங்கு முழவம் ச்ருதி தழுவும்;
இத்தனையும் பின்னி ஏழை நெஞ்சை விலங்
  கிட்டுச் சுழலும் எழில் நடனம். 3

சீனத்து மண்ணை அளைந்து திருவையும்
  செய்குவன் ஓர் சிற்பி கைவலியால்;
வானத்திலே விளை வன்னக் கலவைகள்
  வாரித் தெளிப்பான் தூரிகையால்;
ஞானக் கனற் கொழுந் தாய்ந்து தொடுத்தே
  நல்குவன் ஞானி இருள் விலக்கி;
மோனத்திலே மனம் தோய்க்க முனைந்தருள்
  மெய்யை உணர்வான் மெய்த் தவசி. 4

எங்கிருந்தோ உந்தன் சக்தி அனைத்தையும்
  இங்கெனைச் சுற்றி வழங்கி விட்டாய்;
தங்கி உன்நெஞ்சினில் பொங்கி வளர்வது
  தன்னை இழந்த களிப் பலவோ?
எங்கும் நிறைந்த உன் சக்தியினில் எனக்
  கேது மில்லை யென்றயர் வேனோ?
எங்கும் நிறைந்தே தன்னை மறந்தஉன்
  ஏழ்மையில் என்னை மற வேனோ? 5

சிறு கதை :

சிரிப்பைத் தேடிய சிற்பி

(எஸ். பி.)

“சச்சிதானந் தக்கடலில்—
வெண்ணிலாவே
தாழ்ந்துவிழ வேண்டுகின்றேன்—
வெண்ணிலாவே”

“உண்மையாகச் சொல்லுகிறேன், லாலு. நீ அங்கே பல தேசத்து ராஜாக்களிடம் சொன்ன கதைகளையெல்லாம் நான் சேகரித்து வைத்திருக்கிறேன். மேலும் இங்கேயும் என் வீட்டுக்கு வந்தது முதல் நீ சொல்லிய கதைகளையும் நான் எழுதி வைத்துவிட்டேன். அவை அற்புதமாக இருக்கின்றன.”

“எது, எது, ராதா கமல்; எவ்வளவு நாட்களாக இப்படி நீ......”

“இல்லை, லாலு! எகிப்து தேசக் கைதிகளையும், பாக்தாது வியாபாரிகளையும், பொகாராப் பணிப் பெண்களையும், பாரசீகத்துக் கவிவாணர்களையும் கதை சொல்லுவதில் நீ தோற்கடிக்கிறாய். உன் வாக்கு தேவ வாக்கு. உனது கதைகளைக் கேட்டுக் கொண்டிருக்கையில் காஷ்மீரத்து இயற்கை வனங்களில் திரிவது போல் இருக்கிறது; உன் கதைகளில் கொற்கை முத்துக்கள் ஏராளமாகச் சிதறிக் கிடக்கின்றன; காந்தஹார் அத்தர் அதில் கமழ்கிறது; சிந்து நதிக்கரைப் பசும்புல்லின் மென்மை அதில் தென்படுகிறது; இன்றும் நீ ஒரு கதை சொல்லவேண்டும். பதினெட்டு நாட்கள் சொல்லுவேன் என்றாய். நேற்றோடு பதினேழு நாட்கள் கழிந்து விட்டன......தயவு செய்து இன்றும்......”

“ரொம்பப் புகழுகிறாய், லாலு. ஏது உனக்கு இவ்வளவு ஆர்வம் என் கதைகளில்......? (என் கதைகள் அழிந்து விடுமோ? எல்லாரும் என் கதைகளை விரும்புகிறார்கள்; ஆனால் ஒருவரும் என்னைக் கவனிப்பதில்லை) கமல்! அந்த நிலவைப் பார்த்தாயா? நல்ல பால் நிலவு.”

“லாலு! இதோ கிண்ணம் நிறைய மது விட்டிருக்கிறேன். கதையை ஆரம்பி.”

“கமல்! இன்று போல் ஆனந்தம் எனக்கு என்றும் கிடைத்ததில்லை. இருபது வருஷங்களுக்குப் பிறகு இன்றுதான் வயிறு நிறைய உணவைக் கண்டிருக்கிறேன். வறுமை, ஏமாற்றம், துயரம்—எல்லாவற்றையும் நான் குடங்குடமாக ருசி பார்த்திருக்கிறேன்; ஆனால் இதுபோல் மதுவையும் அதன் இனிமையையும் நான் கண்டதே இல்லை; இனிமேல் காணப் போவதும் இல்லை. சிற்பி தாஸவி சிரிப்பைத் தேடியது போல், நான் இந்த மதுவைத்தான் தேடி அலைந்தேன். ஆனந்தம்.........

சச்சிதானந் தக்கடலில்—
வெண்ணிலாவே
தாழ்ந்துவிழ வேண்டுகின்றேன்—
வெண்ணிலாவே!”

“கதை யெங்கே, லாலு, அதை மறந்து விட்டாயே?”

“இந்த நிலவில் மூழ்கிவிடலாமென்று நினைக்கிறேன். நீ கதையைக் கேட்கிறாய். சரி, சொல்லுகிறேன். இந்தக் கிண்ணம் நிறைய மது விடு. நான் தேடிய மதுவல்லவா?... மகா அரசன் தனக்குக் கலையிலுள்ள ஆர்வத்தால் சிற்பி தாஸவிக்கு ஒரு கால எல்லை குறிப்பிட்டான். தான் கட்டும் கோயிலில் ஒரு குழந்தையின் சிற்பம் நிற்கவேண்டும் என்று அரசனுக்கு ஆசை. (அரசனுக்கு உன் இஷ்டம் போல் நீ பெயர் கொடுத்துக் கொள், கமல்). தாஸவிக்குப் பயம் உண்டாயிற்று. குறிப்பிட்ட கால எல்லைக்குள் சிற்பத்தை முடித்து நிறுத்தாவிட்டால் தாஸவியின் உயிர் காலி; அவனது முந்தைய சிற்பங்களும் அழிக்கப்படும் — — — (என் கதைகள் அழிந்து விடுமோ?). நிபந்தனைக்கு உட்பட்டு அரசனது பணியை ஏற்றுத் தாஸவி சிற்பத்தை உருவாக்க ஆரம்பித்தான் — — — நிலவொளி என்னை மயக்குகிறது, கமல்! கதைதான் வேண்டுமோ?”

“உம் ......”

“நிபந்தனையை ஏற்றது முதல், தாஸவியின் சித்திரக் கூடத்தில் இரவும் பகலும் எட்டிப் பார்க்கவில்லை. உள்ளே சதா சாம்பிராணிப் புகை, படலம் படலமாகக் கிளம்பிக் கொண்டே யிருக்கும். சிற்பத்தில் அவனது பரிபூரண அன்பைப் போல் அந்தப் புகையும் மேலே மேலே மேலே கிளம்பிப் படர்ந்து நறுமணம் பரப்பிக் கொண்டிருக்கும். அவனது நெற்றியில் நீர்த் திவலைகள் ‘சில்’ லென்று பூத்த நட்சத்திரங்களைப் போல் தயங்கி நிற்கும். கால வரையறை இங்கு என்னை விழுங்கிடுமோ, என் முந்தைய சிற்பங்கள் சிதைந்திடுமோ என்று நடுங்கிக்கொண்டே தாஸவி உரக்கக் கூவுவான். அந்தச் சப்தத்தில் அண்டம் செவிடுபடும்; எட்டுத் திக்குகளும் நடுங்கிக் கிடுகிடுத்து ஒடுங்கும். உடனே மின் வெட்டுப் போல் அவனது கையுளி பாய்ந்து செல்லும்; இடி முழக்கம்போல் அவனது உளியில் சுத்தியல் சீறிழும்; ஆஹா, பூவிதழ்போல் சிறு சில் மட்டும் நழுவி விழும். சிற்பக் குழந்தை வர வரத் தாஸவியின் கைகளில் வளர்ந்தேறி வந்தது. அதன் கன்னங்களில் அடிக்கடி அவன் முத்தமிடுவான். மெய்ம்மறந்து ‘நேரம் கழிவதில் நினைப்பின்றி’ அவ்வுயிர்க் குழந்தையுடன் நெடுநேரம் பேசிக் கொண்டிருப்பான். அப்படியே உறங்கி விடுவான். பதறி விழித்து என் சிற்பங்கள் அழிந்து விடுமோ என்று பயந்து நெட்டுயிர்ப்பான்............ ஒரு நாள் தாஸவி, குழந்தையின் கண்களில் தெய்வ ஒளியைக் கண்டான். அதன் முகத்தில் நல்ல மலர்ச் சிரிப்பைக் காணவேண்டுமென்று இதயத்து அடிவானத்திலிருந்து தாஸவிக்கு ஓர் ஆசை, அலைபோல் எழுந்தது. இந்த எண்ணம்தான் காலத்தை இழுத்தது; அரசனுக்குக் கோபத்தீ மூட்டிற்று; அவனது தண்டனையை உறுதி செய்தது; அவனது இன்பத்தை அதிகரித்தது; காலத்தை ஒழிக்கவும் உதவி செய்தது......உறக்கமா? இத்தனை நாட்களும் அவன் பட்டினி, கமல்; இத்தனை நாட்களும் அவன் பட்டினி. உலகத்தில் அன்பு உண்டு. ஆனால் ஆதரவு இல்லை; ஆகவே அன்பின் கனிவு இல்லை. என்னைப் போல அவனும் வெகு காலம் பட்டினி. கமல், கிண்ணத்தில் மது இல்லையோ?”

“இதோ இருக்கிறது. வேண்டிய மட்டும் குடி, நீ.”

“தாஸவிக்குக் குழந்தையின் மேல் பற்றுதல் வளர்ந்தோங்கியது. சிரிப்பை அவனகத்தில் காண முடியவில்லை. தன் ஊரிலும் அவனால் காண முடியவில்லை. அதைத் தேடிப் புறப்பட்டான். கண்டு விடுவதென்றே தீர்மானம். எங்கே தேடுவது? என்னைப் பார், கமல்! இந்த உலகத்தில் சிரிப்பு ஏது? கிடையாது; நான் பார்த்தமட்டும் கிடையாது. கமல்! இன்னும் கொஞ்சம் மது ஊற்று.”

“லாலு! பர்தம் பருப்பை எடுத்துக் கொள். என்ன, நாவல் பழம் உனக்குப் பிடிக்கவில்லையா?”

“சிரிப்பைத் தேடி, பரிமளம் வீசும் நந்தவனங்கள், பாடி நகரும் நதிக்கரைகள், பேரொலி முழக்கும் நீரருவிகள், தேன் சொரியும் பூஞ்சோலைகள், கந்தர்வர் முகம், மதிமுகப் பெண்கள், தாமரைத் தடாகங்கள்—இங்கே எல்லாம் தேடினான். இதெல்லாம் வெறும் பாலைவனந்தானே; அதுவும் வறுமைக்கு அடிமைப்பட்ட பாலைவனம். இங்கே

எது சிரிப்பு? போதாக் குறைக்கு, தாஸவி பட்டினி. இங்கே உள்ளவர்களுக்குக் கலைஞர்கள் வேண்டாம்; கலைகள் தான் வேண்டும். கவிஞன் வேண்டாம்; காவியம்தான் வேண்டும்......... (என் கதைகள் அழிந்து விடுமோ?). கடைசியில் அலந்து அலுத்து அங்கே மிதந்த ஓர் தோணியில் நிமிர்ந்து படுத்தான். வானத்தில் நட்சத்திரங்களில் சிரிப்பு அகப்படுமா என்று கூர்ந்து கவனித்தான் தாஸவி. பாவம்! பட்டினி.........இங்கே மது கொடு, கமல். தாஸவிக்குக் கொடுப்போம்......இந்தா, தாஸவி. எழுந்திரு. இம்மதுவை அருந்து...... குடி. ...எழுந்திரு அப்பனே.........

"லாலு! லாலு! என்ன இது? தாஸவி உன் கற்பனைப் பாத்திரமல்லவா...... மது அதிகமாகி விட்டதா என்ன?"

"நல்ல வேளை. தோணிக்காரன் மறந்து வைத்துப் போன தண்ணீரும் உணவும் இருக்கிறது. பேஷ்! ஆனந்தம்!......... தோணியில் பல காதங்கள் கடந்துவிட்டான். சப்தசமுத்திரங்களையும் கடந்து அவன் மிதக்கும் பொழுது 'காலவரையறை இங்கே என்னைக் கவிழ்த்திடுமோ' என்று பயப்படுவான். நள்ளிரவில் தொங்கி ஊசலாடும் மின்மினிகளைத் தனது ஆடையுள் பிடித்துப் போட்டு மங்கிய அவ்வெளிச்சத்தில் சிரிப்பைத் தேடிக்கொண்டே போவான். நீர் மட்டத்துக்கு வரும் அழகிய மீன்களை நட்சத்திர வெளிச்சத்தில் கூர்ந்து கவனிப்பான். அவ்விதம் கவனிக்கையில் இரு கோரைப் புல் பேசும் சப்தம் அவன் காதில் விழுந்தது. தாய்ப் புல்லைப் பார்த்து இளம்புல் சொல்லிற்று: 'அம்மா, என்னால் இனி ஒரு அடி கூட மிதக்க முடியாது. கைகால் சோர்ந்துவிட்டது. நீரில் தாழ்ந்து விடுவேன். எப்பொழுது நாம் சிரிப்பைக் காணுவது?' தாஸவியைத் திகில் அடித்தது; ஆச்சரியம் விழுங்கிவிட்டது என்றுவைத்துக்கொள், கமல். தாய்ப்புல் பதிலளித்தது: 'குழந்தாய், இவனும் சிரிப்பைத் தேடித்தான் யாத்திரை செய்கிறான். இவனும் நம்மைப் போல்தான்.' உடனே இளம்புல் கேட்டது: 'அம்மா, நமக்குத்தான் கடல் கொந்தளமும் வடவா முகாக்னியும் கொடுமை செய்கின்றன; சிரிப்பைத் தேடிப் புறப்பட்டோம். இந்த மனிதனுக் கென்ன?' அதற்குத் தாய்ப்புல் சொல்லிற்று: 'என் கண்ணே! மனுஷனும் நம்மைப் போல் பெரிய கடலில் மிதக்கும் கோரைப்புல்தான். அங்கே இக்கடலை விடக் கொடுமைகள் அதிகம் என்று கேள்விப் பட்டிருக்கிறேன். நம்மைப்போல் அவனும் சிரிப்பைத் தேடுவது இயற்கைதானே? இது பரந்த கடல்; அது பயக் கடல். இது உகக் கடல்; அது வெக்கக் கடல். வித்தியாசம் இது தான். ஆழமும் கொந்தளிப்பும் இரண்டிலும் ஒன்றுதான்.' சிரிப்பை எங்கே எப்படிக் காணுவது என்று இளம்புல் கேட்டதற்குத் தாய்ப்புல் சொல்லிய பதில் இதுதான்: 'நம்மிருவரையும் தாஸவி கையில் எடுத்துச் செல்வான். காலாதீத நகரத்திலுள்ள மறவி என்னும் பாவியிடம் நம்மைக் கொடுப்பான். அவன் பெரிய கொள்ளைக்காரன். தாட்சண்யமற்றவன். நம்மைக் கண்டதும் அவன் மயங்கி விழுந்து மாய்வான். அதைக் கண்ட அவன் மனைவி அந்தினி, வருத்தமுற்றி, அழமுடியாமல், சிரிப்பாள். அதுதான் நாம் தேடும் சிரிப்பு. அவளது சிரிப்பொலியில் அவள் மார்பில் உறங்கும் ஓர் குழந்தை விழிக்கும். விழித்ததும் சிரிக்கும். அச் சிரிப்பு சிரந்தரமானது. தெய்வீகம் உள்ளது. அக் குழந்தை சிரிக்கும் பொழுது படரும் கொடியிலிருந்து கொய்துதான் ஒவ்வொரு ஆன்மாவுக்கும் சிரிப்பு சூட்டப்படுகிறது. இச்சிரிப்பைத் தேடித் தானே சூடிக்கொண்டவன் கால எல்லையைக் கையிலெடுத்து ஆட்டலாம்; தலையைச் சுற்றித் தரையில் அடிக்கலாம். அவன் சொன்னபடி காலம் ஆடும். தாஸவி தேடும் சிரிப்பு அக் குழந்தையின் சிரிப்புத்தான். தாஸவி கால எல்லையைக் கண்டு இனி நடுங்க வேண்டியதில்லை.' இவ்வாறு பேசிய அவ்விரு புற்களும் ஆனந்தத்தில் இரு தடவைகள் முங்கி மூழ்கி மிதந்தன. மது ஊற்று, கமல்."

"அப்புறம்.........?"

"குழந்தை சிரித்தது! நான் இம்மதுவைக் கண்டதுபோல் தாஸவியும் குழந்தையின் சிரிப்பைக் கண்டுகொண்டான். தன் சிற்பம் அழிந்து விடுமோ என்று தான் பயந்ததற்காகத் தன்னைப் பார்த்துத் தானே சிரித்துக் கொண்டான். அரசன் சிரித்தான். கோவிலினுள் சிற்பம் சிரித்தது. கால எல்லை சிரித்துவிட்டுத் தன் வாலைத் தானே விழுங்கிவிட்டது. தாஸவியின் சிற்பங்கள் சிரஞ்சீவிப் பட்டம் பெற்றுவிட்டன......... (ஆனால்...என் கதைகள் அழிந்து விடுமோ?)"

"என்ன, லாலு, ஏன் தயங்குகிறாய்?"

"கமல்! நானும் தேடிய மதுவைக் கண்டுகொண்டேன். வெகு கஷ்டத்துக்குப் பின் இன்று இன்பத்தில் இருக்கிறேன். இப்படியே நான் நீடூழி வாழ விரும்புகிறேன்........ (என் கதைகள் அழிந்து விடுமோ, என்னவோ?)"

"லாலு! என்ன முனகுகிறாய்? மது வேணுமா?"

"ஆமாம். மதுத்தான் வேணும், கமல். தேடிக் கண்டுகொண்ட மது வல்லவா? ஊற்றி வை. இன்னும் உண்டா மது? நீடூழி வாழ்வது லேசா? உயிரை அல்லவா விடவேண்டும் உழைப்பில். வாழ்க்கை என்றால் சாமானியமா? உயிரைக் கொடுத்து அல்லவா உயிர் வாழவேண்டும். கமல்! அந்த நிலா இருண்ட மேகத்துள் மறையப் போகிறது, பார்! என் முகத்தைப் பார்க்காதே. அங்கே பார்த்துக் கொண்டிரு. என்ன இருண்ட மேகம்!......பார்த்தது போதும், கமல். கீழே வேறு மது இருந்தால் எடுத்துக் கொண்டுவா......"

"லாலு, வந்து விட்டேன். இதோ கிண்ணி நிறைய மது!

சச்சிதானந்தக் கடலில்—
வெண்ணிலாவே,
தாழ்ந்துவிழ வேண்டுகின்றேன்—
வெண்ணிலாவே!

சரிதானா லாலு, நான் பாடுவது? என்ன பேசாமல் இருக்கிறாய்......? இதென்ன வாயில் நுரை!"

"அதுவா, கமல்? அது அது அமரத்துவத்தின் குமிழி; மோட்ச மார்க்கத்தின் மைல் கற்கள்.—உயிரை இழப்பவனே உயிரைப் பெறுகிறான். இன்பமும் துன்பமும் எனக்கினி யில்லை—ஆனால்........."

"அட பாவி! பாஷாணத்தையா விழுங்கினாய்! ஐயோ! தற்கொலை ஏனடா?"

"தற்கொலையா? நானா? உலகையல்லவா அழிக்கிறேன்—நன்றியற்ற சண்டாள உலகமே, தொலை—போ, போ!—ஆனால்...என் கதைகள்—என் கதைகள்.........அவையும் அழிந்திடுமோ!)"

மனத்தில் ஈசுவர பிம்பம்

அலைகளால் சலித்துக்கொண்டிருக்கும் நீர்த்தடத்தில் சந்திரனுடைய பிரதி பிம்பம் பூரணமாகத் தெரியாமல் விட்டு விட்டுத்தான் தெரியும். அதேபோல, உலகப் பற்றுக்களாலும் பாசங்களாலும் சலித்துக்கொண்டிருக்கும் மனத்தில் ஈசுவர ஜோதி பூர்ணமாகப் பிரதிபலிக்காது.—ஸ்ரீ பரமஹம்ஸர்.



[சுவாமி சுத்தானந்த பாரதியார்]

நான்காம் அங்கம்

மூன்றாங் காட்சி

[மதுரை போலீஸ் ஸ்டேஷன். ஆயுத அணிகள் காண்கின்றன. வட்ட மேஜையைச் சுற்றி நாற்காலிகள். அப்துல்லாகான் ஒரு வெல்வெட் நாற்காலியில் அமர்ந்திருக்கிறான். இரண்டு சப் இன்ஸ்பெக்டர்கள் பக்கத்தில் அமர்ந்திருக்கின்றனர். அவர்களது அறிக்கையைக் காப்டன் அப்துல் கூர்ந்து பார்க்கிறான். வாசலில் கான்ஸ்டேபிள்கள் துப்பாக்கியுடன் காவல்காக்கின்றனர். ஒரு சேவகன் பங்காப் போடுகிறான். சீனு திண்ணையில் இருக்கிறான்.]

அப்துல்

வரவரக் கலகம் வலுத்தது நாட்டில்.
வடக்கு நெருப்புத் தெற்கும் வந்தது...
தீயுடன் காற்றும் சேர்ந்தது போலே,
சாதிப் போருடன் சமயப் போரும்
சேர்ந்து நாட்டைச் சிதைத்தது பின்னும்.

க. இன்ஸ்பெக்டர்

தீயும் காற்றும் சேர்ந்தது போலே
கட்சிக் கூட்டமும் காரப் பேச்சும்,
வகுப்புச் சினத்தை வளர்த்தன ஊரில்
வீரப் புகைச்சல் விடாது போலும்...!

அப்துல்

வீரமு மில்லை, காரமு மில்லை
மனத்தில் ஒன்றார், இனத்தில்ஒன்றார் ;
வெற்றுரை பெருக்கி ஒற்றுமை யின்றியே
இடிப்போர் முன்னே இழிந்ததிந் நாடு!
பட்டினி யிருந்தும், பரிந்து பேசியும்
ஒற்றுமை நாட்ட உயிரைக் கொடுக்கும்
சீரியருடனும் சேர்ந்திவர் வாழார் ;
நாட்டைப் பிரிக்கவே சேட்டை செய்வார்.
ஒருவீட் டாருள் ஒன்பது தனிக்குடி !

உ. இன்ஸ்பெக்டர்

ஒருவரை யொருவர் அருவருக் கின்றார்
எத்தனை இடர்கள் எழுந்தன சுற்றும் ?
இந்து முஸ்லிம் இணைவது என்றோ ?

அப்துல்

நானொரு முஸ்லிம். ஆனால் எனைப்போல்
இந்து சமுகமும் இனிது வாழவே
நினைப்பேன் ; அவர்களும் நிகரெனக் கொள்வேன்.
கோயிலும் மசூதியும் கொள்வதோர் கடவுள்.
கீதையும் குரானும் போதனை செய்வதும்
அன்பும், வாய்மையும், அடைக்கல வாழ்வுமே.
சரிநிக ராவதே சகோதரர்க் கழகு
பலசா லிக்கே உலகில் மதிப்பாம்.
சிங்கமும் சிங்கமும் சிநேக மாகலாம்.
புலியும் பசுவும் பொருந்துதல் அரிது.
இந்து முஸ்லிம் இருவரும் வீரராய்
ஒற்று மையுடனே, உறுதி யுடனே,
தொகைப்படி யுரிமை யுகப்பதே நலமாம்.
பிரிவினை யின்றி ஒருநாட் டுணர்வுடன்
வாழலாம் என்பர் வஞ்சமில் மேலோர்.
அதை யறியாமல் உதையில் இறங்கி
ஊரின் அமைதியை உலைத்தனர் சிலபேர்.

க. இன்ஸ்பெக்டர்

சந்தடி சாக்கில் வந்ததைப் பற்றும்
கொடியர் இங்கே கும்மாளம் போட்டனர்.
கொள்ளையும் சள்ளையும் கொலையும் கண்டோம்,
கண்ணனும் வள்ளியும் புண்படக் கண்டோம்.

அப்துல்

புண்பட டுத்திய பொன்னுவைக் காணோம் !
அவனைக் காண்பதே அடுத்த முயற்சி.
ஜோதி யெனது சொந்த நண்பன்.
கண்ணனும் நண்பன். காதகப் பொன்னு
செய்த கொடுமையைச் செருப்பதென் கடமை.
வாக்கு மூலமும், மங்களம் வரைந்த
சீட்டும், சிவனார் செய்த உயிலும்,
கூரிய வாளினுங் கொடிய, சுந்தரி
மங்களத் திருவைப் பங்கம் செய்ததும்,
ஊரில் உலாவும் பேரும், புகாரும்,

உள்ளன ; மூன்று கள்ளரைப் பிடித்துத்
தண்டனை செய்து, தருமங் காப்போம்.

உ. இன்ஸ்பெக்டர்

கொடுமைக் கெல்லாங் கொள்கலம் சுந்தரி.
அவளிக் கொலையின் அடிப்படை யாவாள் ;
புருஷனை விரட்டிப் பொன்னுவைக் கூடினுள் ;
பொன்னு வீட்டைப் பொட்ட லடித்துப்
பாதிச் செல்வம் பரத்தைக் கீந்தான் ;
முல்லையின் தீமைக் கெல்லைவே றில்லை.
கதை கதையாகக் காதற் கொலைகள்,
அவளைச் சுற்றி எவளவோ கேட்டோம்
அவளது வலக்கை அண்ணுவி யென்போன்.
அவனே பொன்னுவை அழித்த போக்கிரி.
அண்ணனைச் சுட்ட பொன்னுவின் குண்டு
அண்ணுவி முதுகில் ஆழ்ந்ததும் விதியே ;
அவனது தலையை ஆற்றில் எறிந்தே
பொன்னு தப்பிப் பொருட்பெண் ணுடனே
சுந்தரி தனையும் தந்திர மாகக்
கூட்டி எங்கோ ஓட்டம் பிடித்தான்.

அப்துல்

பட்டண உளவும் பார்த்தொன் றறிந்தேன்.
விடுதி, அல்லது வெள்ளித் திரையில்
ஆழ்ந்து பார்த்தால் அகப்படு வார்கள்.
சிவனர் வீட்டைச் சீல்வைத்து விட்டோம்.
சோதிபே ருக்கே சொத்தும் உரியது.
பத்திர முள்ளது. பண்பன் சோதியும்
துறவுடன் பொதுநலத் தொண்டுசெய் கின்றான்.
இடமறிந் தங்கே கடனறிந் தியற்றி,
வருகிறேன். சீனு வருக உடனே !

கான்ஸ்டேபிள்

சீனுவை யங்கார் ! சீனுவை யங்கார் !!

[ஓடிவந்து]

சீனு

வந்தனம். சிவனர் வழக்கைத் தாங்களே
நடத்தி வைத்து நலஞ்செய வேண்டும்.

அப்துல்

அத்தாட்சி யெல்லாம் அமிதமா யுள்ளன...
முல்லை, பொன், சுந்தரி--மூன்று பேரையும்
கைது செய்தபின் கடுங்கொலை வழக்கை
நடத்தி நீதி நல்குவோம்...உறுதி.
ஊரில் தாங்களும் உஷாரா யிருங்கள்.
சமனெதிர் பார்த்துச் சாட்சி சொல்லலாம்
இனிநீர் செல்லலாம் !

சீனு

எல்லாந் தங்கள்
அன்பி னலும், ஆற்ற லாலும்
இனிதே முடியும். இறைவன் அருள்க !

[செல்கிறான்.]

அப்துல்

நகரில் வந்துசெல் நட்சத்தி ரங்களைக்
கண்கா ணித்துக் கவனமா யிருங்கள்.
அவ்வப் போதுநான் அறிக்கை யனுப்புவேன்.
விரைவில் எல்லாம் வெளிச்ச மாகும்,

[டெலிபோன் மணி யடித்தல்
—"ட்ரங் ட்ரங்"]

ஹல்லோ யாரது ? மில்லரா ? வருகிறேன் !
தெல்லா குளத்தில் மில்லரைப் பார்க்கிறேன்.
சாரணர் காத்த ஆர ணங்கையும்
கண்டு செய்திகள் கொண்டு வருவேன்.

சப் இன்ஸ்பெக்டர்கள்

இரண்டுமா தத்தில் இந்த வழக்கைத்
தீர்க்க வேண்டும் தீவிர மாக
நாங்களும் உதவி நல்குவோம் வந்தனம்.

[எல்லாரும் இருக்கையை விட்
டெழுந்து வணக்கமுடன் வழி
யனுப்புகின்றனர். அப்துல்
மோட்டாரில் மில்லரிடம்
செல்கிறார்.]

மூன்றாங் காட்சி முற்றிற்று.

நான்காங் காட்சி

[பாதிரிக் கல்லூரித் தோட்டம். பலவகை மலர்கள் குலுங்குகின்றன. துரைச்சிபோல் உடைதரித்த மங்களம் சிறு குழந்தைகளுடன் பூப்பறிக்க வருகிறாள்.]

குழந்தைகள், மங்களம்

தோட்டத்திலே பூப்பறிப்போம்
தோழ ரெல்லாரும்
பாட்டுப்பாடி யாடிடுவோம்
பறவைக் கூட்டம்போல்.

மங்களம்

அன்புக் குழந்தைகாள், இன்பக் குழந்தைகாள் !
ஆண்டவ னுக்கு மாலை யணிவோம்.

ஒரு குழந்தை

அம்மநான் மல்லிகை யரும்புகள் பறிப்பேன்

மற்றொரு குழந்தை

அம்மநான் செவந்தி.

இன்னொரு குழந்தை

அம்மா ரோஜா.

மங்களம்

விருப்பப்படியே விரிமலர் கொய்வீர்
இலையுதி ராமல், இதழ் கசங்காமல்,
மெதுவாய்க் கொய்வீர் புதுமலர் பார்த்தே !

குழந்தைகள்

ஆடிப்பாடிப் பூப்பறிப்போம்
ஆனந்த மாகக்
கூடிக்கூடி அன்புசெய்வோம்
குழந்தைக ளெல்லாம்.

[எல்லாரும் மங்களத்துடன்
மலர் கொய்யத் தோட்டத்தில்
ஒரு மூலைக்குச் செல்கின்றனர்.
வருதல் மில்லர், அப்துல்லா]

மில்லர்

கடமை காத்துக் கதிரவன் செல்கிறான் ;
ஒளிக் கரங்களால் உலகை யெழுதிப்
போகும் போதவன் பொன்மயம் பாராய் !
ஞாயிறு போலே நாம்வா ழோமோ ?

அப்துல்

அரிகதிர் போலே அடக்க மாகவே
உண்மைக் குழைக்கும் உத்தமர் நீரே !
கல்விக் கடமை காத்தது போன்றே
வீரப் பணியும் சீர்பெறச் செய்வீர்.

மில்லர்

அடுத்த மாதம் யானும் மனைவியும்
கட்டளைப் படியே கடமை காக்கப்
போர்முனை செல்வோம். புதுமுறைப் பயிற்சி
பெற்றோம் ; உனது பேச்சால் அனுபவம்
கற்றோம் ; அச்சம் செற்றோம், அன்பா !
வீரப் பதக்கம் விளங்குமுன் மார்பைக்
காணுந் தோறும் நாணுமென் னுளமே ;
" இன்னும் மிதமா " என்னுமந் நாணமே.
இலண்டனில் நடக்கும் குண்டு வீச்சுகளைப்
பார்க்கிறேன் மனதால்... பறவைக் கப்பலில்
யானும் ஏறி யறப்போர் செய்யத்
துடிக்கும் நெஞ்சம் துரத்துதென் கனலே.
சூரச் சர்ச்சிலின் வீரப் புகழ்ச்சியால்,
தமிழ்நாட் டிற்கே தனிப்புக ழீந்த
காப்டன் அப்துலக் கனலை வளர்த்தான்.
உனது வீரம் உளந்தொறுங் கனல்கவே !

அப்துல்

ஊரில் அமைதி ஊன்றிய வுடனே
போரில் அந்த வீரமும் புகுமே.
எல்லாம் தாங்கள் ஏற்றிய வீரமே.
வீடும் நாடும் விளங்சப் பணிசெய்
அறிவுந் திறனும் அளித்த தங்களை
என்றும் எண்ணி நன்றி செலுத்துவேன்.
உங்களைப் போல ஒற்றுமை யுடனே
எம்மவர் கடமை யியற்றுக நன்றே !

மில்லர்

ஒற்றுமை யற்றதே உங்கள் சாபம் !
வருண பேதம் வகுத்த நாட்டை,
பார்ப்பதுந் தொடுவதும் பழுதெனு நாட்டை,
ஆலயந் தன்னில் ஹரிஜனர் புகுந்தால்
சாமீதீட் டாமெனச் சாற்றுமிந் நாட்டை,
சிலுவையே ஒற்றுமை செய்திட லாகும்.

அப்துல்

சிலுவையும் பிறையும் செய்வதைக் காட்டிலும்,
அன்பே ஒற்றுமை யாகும் வழியாம்.
சாதி வகுப்புச் சங்கட மின்றி
விதவிதச் சமய வேடங்க ளின்றி
மனிதனை மனிதன் மனிதனாய் மதித்தால்,
அன்பும் அறமும், அறிவும், திறனும்,
ஆன்ம நேயமும், அருட்பணி வாழ்வும்,
பயின்றால் உலகம் பழுதற வாழலாம்
ஜோதி சொல்லுமிந் நீதியே நீதி !

மில்லர்

அருமை ஜோதிபோல் அனைவரும் இருந்தால்,
வானர சாட்சி வந்து குதிக்குமே.
அருளும் அறிவும், அன்புங் கொண்டவன்
அனைத்துந் துறந்தான் ; அநாதை களுக்கே
வாழத் துணிந்தான் ஆழக் கருணையால்,
பணியுடன் பரம்பொருட் பதத்தையுந் தேடினான்.
யோக முனிவர் ஒருவர் திருவடி
அமர்ந்துமெய்ஞ் ஞானமும் அடைந்ததாய்ச் சொல்வர்.
இன்றவன் இருக்கும் இடத்தை அறிகிலேன்.

அப்துல்

அறியவே, செல்கிறேன். அன்பனைக் காண்பேன்.

மில்லர்

அவன் வீட்டினிலே அனலை வைத்துப்
படுகொலை செய்த பாவிகள் யாவர் ?

அப்துல்

ஒருவனை வினையே உயிர் பிரித்தது.
மூவர் கரந்துளார் ; முயன்று பிடிப்பேன்.
ஆதா ரங்கள் அனைத்தும் உள்ளன.
காயம் பட்ட கண்ணனும் வள்ளியும்
வாக்கு மூலம் வழங்கி யுள்ளார்.

மில்லர்

கண்ணன் பட்ட புண்கள் ஆறுமா ?

அப்துல்

உள்ளும் புறமும் ஆறும் ; உறுதி!

மில்லர்

சிவனார் வீட்டின் செய்தி யென்ன ?

அப்துல்

வீட்டைப் பூட்டினோம். வீட்டுத் திருமகள்
ஜோதிபே ருக்கே சொத்தை யெழுதி,
ஆற்றில் விழுந்தாள் ; அத்தாட்சி யுள்ளது,
சோதியைக் கண்டு மற்றதைச் சொல்வேன்.

[மங்களம் ஓடிவந்து, அழகிய தொரு ரோஜாவை மில்லரிடம் தந்து]

மங்களம்

அப்பா, உனக்கென் அன்பு ரோஜா.

மில்லர்

இம்மலர் போல இன்ப மாயிரு !

[மங்களம் செல்கிறாள்]

அப்துல்

அந்திக் காட்சியை அழகுசெய் மலர்போல்.
வந்துசெல் இந்த வனதே வதையார் ?

மில்லர்

அவளே என்றன் அன்புத் திருமலர்.

அப்துல்

சாரணர் காத்த தண்மலர் இவளோ ?

மில்லர்

உன்னிடம் உண்மையை ஒளிக்க முடியுமா?
அவளே அவளே அருண ஜோதியை
எதிர்பார்க் கின்றாள், இரகசிய மாகச்
சொல்வேன், வேறிடஞ் செல்வோம், அன்பா!

[இருவரும் தோட்டத்தை விட்டு வேறிடம் செல்லல் வருதல் திருமதி மில்லர்.]

திருமதி மில்லர்

அன்பு மலரே... இன்ப மலரே.

[ஓடிவருதல் மங்களம்]

மங்களம்

அம்மா, இதுவென் அழகு ரோஜா.

[மலர் தருதல்]

திருமதி மில்லர்

அதையுன் அழகே அழகு செய்க!

[மங்களத்தின் கூந்தலில் முடித்தல்]

மங்களம்

அம்மா, உன்னுள் அன்பைப் போலவே
பூத்துச் செடிகள் புன்னகை பொலிந்த!

திருமதி மில்லர்

இன்முகங் கனியும் புன்முறு வல்போல்
உனது செடிகள் இனமலர் சொரிந்த.

மங்களம்

சொரிந்த மலரைச் சோதிக்கடவுள்
அன்புடன் ஏற்கும் அந்நாள் வருமோ?

திருமதி மில்லர்

வரும், வரும் கண்ணே வருத்தப் படாதே.
போர்முனை செல்லுமுன், பொன்னிளங் கிளியே!
உன்மனங் களிக்க வுபாயஞ் செய்வோம்.
அப்பா வுடனே நின்றவர் இங்கே
கற்றவர்; அவரே ஒற்றர் தலைவர்
அவரே ஜோதியை அருகே கொணர்வார்

[கோயில் மணி அடிக்கிறது.]

ஆண்டவன் மணிநமை யழைத்தது வாராய்!

மங்களம்

ஆட்டம் போதும் அன்புக் கிளிகாள்!
கொய்த மலருடன் கோயில் புகுவோம்.

குழந்தைகள்

[சந்தோஷமாக ஓடி வந்து பாடுகின்றன.]

அந்திமலர் பறித்துவந்தோம்
அன்புத் தோழர்கள்
வந்தனஞ்செய் தாண்டவனை
வாழ்த்திச் சூட்டுவோம்.

மங்களம், குழந்தைகள்

காலைமாலை பூப்பறித்தே
கடவுளைத் தொழுவோம்
வேலையெல்லாம் பூஜையாக்கி
வெற்றி யோங்குவோம்.

[எல்லாரும் சந்தோஷமாகப் பாடியாடிச் செல்லல்]

நான்காங் காட்சி முற்றிற்று.

பண்டமாற்று ராஜ்யம்

'பணம்' என்ற தொல்லையில்லாமல் பண்டமாற்றின் மூலமே முன் காலத்தில் அரசாங்கங்கள் கூட நடந்து வந்திருக்கின்றன. இந்த அபூர்வம் நமது எல்லைப்புறத்தி லுள்ள ஸ்வாட், தீர், சித்ரால் என்ற இஸ்லாமிய நாடுகளில் இன்றும் நிகழ்ந்து வரு கிறதாம். சகல விளைவுகளிலும் பத்திலொரு கடமை சர்க்கார் வாங்கிக் கொள்கிறார் கள். ஆனால், ஆடுகளுக்கு மட்டில் நாற்பதில் ஒரு குட்டி விகிதம் கடமை வாங்கப் படுகிறது. 'கண்டிராக்டர்கள்' இந்தக் கடமைகளை வசூலித்து, சர்க்கார் சிப்பந்தி களின் சம்பளங்களைப் பண்டங்கள் ரூபத்திலேயே பட்டுவாடாவும் செய்கிறார்கள். சில ராணுவ உத்தியோகஸ்தர்களின் அரை வருஷச் சம்பளங்களைப் பாருங்கள்:

(1) சிப்பாய்களுக்கு: 7 மணங்கு சோளமும், 4 மணங்கு கோதுமையும், 7 மணங்கு அரிசியும், துணிமணிகளுக்காக 40 ரூபாய் ரொக்கமும்.
(2) சுபேதார்களுக்கு: 25 மணங்கு தானியமும் 60 ரூபாய் ரொக்கமும்.
(3) தளகர்த்தர்களுக்கு: 40 மணங்கு தானியமும் 80 ரூபாய் ரொக்கமும்.
(4) நாயிப் சதாருக்கு: 60 மணங்கு தானியமும் 100 ரூபாய் ரொக்கமும்.
(108 தோலாக்கள் கொண்ட சேர்கள் 40 கொண்டது ஒரு மணங்கு.)

இதே மாதிரியே போலீஸ், நீதி இலாக்கா, நிர்வாக இலாக்கா முதலியவற்றிற் கும் சம்பளப் பட்டுவாடா நடக்கிறது.

பிரபலஸ்தர் வரிசை 9 :

★ தென்னாப்பிரிக்க வீரர் ஸ்மட்ஸ் ★

‘தோல்வியே அறியாதவர் ; ஆனால், மகாத்மா காந்தியிடம் மட்டும் தோற்றுவிட்டார்’ என்று ஒரு வீரரைப் பற்றிச் சொல்வதுண்டு. அவர்தான் தென்னாப்பிரிக்க யூனியன் சர்க்காரின் தற்போதைய பிரதம மந்திரியான தளபதி ஸ்மட்ஸ். தென்னாப்பிரிக்க யூனியன் ஸ்தாபிதமானதற்கு மூல புருஷர்களில் ஜெனரல் ஸ்மட்ஸ் ஒரு முக்கியஸ்தர். அவருடைய வாழ்க்கை, வீரம் செறிந்தது ; வெற்றி நிறைந்தது. அவர் ஒரு போர் வீரர், சட்ட நிபுணர், இலக்கிய பண்டிதர், அரசியல் வாதி, ராஜ தந்திரி. இன்று பிரிட்டனின் உற்ற நண்பர்களில் ஒருவர்.

தென்னாப்பிரிக்க போயர் குடியானவக் குடும்ப மொன்றில் 1870-ஆம் ஆண்டு ஜான் கிரிஸ்தியன் ஸ்மட்ஸ் பிறந்தார். இங்கிலாந்து சென்று, கேம்பிரிட்ஜ் சர்வ கலாசாலையில் கல்வி பயின்று, முதல் தரமாய்ப் பரிட்சைகளில் தேறிப் புகழுடன் திரும்பினார். டிரான்ஸ்வாலில் வக்கீல் தொழிலில் பிரவேசித்தார். அப்போது வயது 28. ஆள்களை மயக்கும் ஜாலக்குகள் தெரியாதவராதலால், தொழிலில் பிரகாசிக்க வில்லை. தேசம் நிலை குலைந்து கொண்டிருந்தது. ஆங்கிலேயருக்கும் போயர்களுக்கும் பிரமாதமான போர் நிகழ்ந்து கொண்டிருந்தது. அந்தப் போர்த் தீயில், தளபதி ஸ்மட்ஸ், தாவிக் குதித்து விட்டார்.

அந்தப் போரின் வரலாற்றை நண்பர்கள் அறிந்து கொள்வது அவசியம். தென்னாப்பிரிக்காவிலே ஆங்கிலேயர்கள் குடியேறினார்கள் ; டச்சுக்காரர்களும் போய்க் குடியேறினார்கள். அந்த டச்சுக்காரர்களுக்குத்தான் போயர்கள் என்று பெயர். சுதேசி நீக்ரோக்களை இருவருமே வாட்டி வதைத்து அமுக்கினார்கள். தங்கள் தங்கள் ராஜ்யங்களை விஸ்தரித்தார்கள். அப்போது, அந்த ஆங்கிலேயருக்கும் டச்சுக்காரருக்குமே போர் மூண்டது. அதுதான் போயர் யுத்த மென்பது. 1899-ஆம் வருஷத்திலிருந்து 1902-ஆம் வருஷம் வரையில் இந்தப் போயர் யுத்தம் நடந்தது. டிரான்ஸ்வால், ஆரஞ்சு பிரீ ஸ்டேட்ஸ் என்ற இரண்டு குடியரசுகளும்



போயர் ராஜ்யங்கள். கேப் காலனி, நேட்டால் இரண்டும் பிரிட்டிஷ் காலனிகள். இவற்றினிடையே நடந்தது அந்தப் போர்.

போயர்கள் மிகுந்த வீரத்தோடு போரிட்டார்கள். அவர்களை நசுக்கித் துவைக்க மகா மூர்க்கமாய்ச் சண்டையிட்டார் லார்டு கிச்னர். போயர்களின் எதிர்ப்பு தளர்ந்தது. பிளீம்பாண்டீன், பிரிட்டோரியா என்ற போயர்த் தலைநகர்கள் பிடிபட்டு ஆங்கிலேயர் வசமாயின. டிரான்ஸ்வாலின் சர்க்கார் இருந்த இடம் தெரியாமல் போய்விட்டது. போயர் தலைவன் கிழ குரூகர் ஐரோப்பாவுக்கு ஓடி அஞ்ஞாத வாசம் புரிந்து விட்டார். ஆயிரக்கணக்கான போயர்ப் போர்க் கைதிகள் ஹெலினாத் தீவுக்கும் சிலோனுக்கும் அனுப்பப்பட்டுச் சிறை வைக்கப்பட்டனர். இந்நிலையில் 250 போயர் வீரரைச் சேர்த்து ஒரு படை திரட்டிப் போர் முனையில் வந்து குதித்தான் 28 வயதுடைய ஒரு வாலிப வீரன். அந்த வீரனே தளபதி ஸ்மட்ஸ்.

தளபதி ஸ்மட்ஸின் போர் முறை மிக விசித்திரமானது. மாயமான் போல வந்து தாக்கிவிட்டு, ஒளிந்து பிடிப்பதுபோல ஆங்கிலேயர்களின் கையிலகப்படாமல் ஓடுவார் ; கொசுவைப் போல் வந்து குத்திவிட்டுப் பறந்து செல்வார். எத்தனையோ முறை, மயிரிழையில் தப்பியோடியிருக்கிறார். பதினாயிரம் பிரிட்டிஷ் சோல்ஜர்களைக் கொண்டதொரு படை, தெற்கிலும் கிழக்கிலும் மேற்கிலும் சூழ்ந்து, இவரது காலடியில் இவரை மோப்பம் பிடித்துத் தூரத்திக் கொண்டே யிருந்தது. அத்தனைக்கும் இவர் ‘டிமிக்கி’ கொடுத்துக்கொண்டே யிருந்தார். 250 வீரரையே ஆரம்பத்தில் அடக்கிக் கொண்டிருந்த இவரது படை திரண்டுவரும் மழை வெள்ளம் போல் வரவர அதிகரித்து, 3,000 போயர்களைக் கொண்டதாய் வளர்ந்து விட்டது. ஸ்மட்ஸ் படையின் வேலை என்ன? கேப் காலனியில் போய்க் கொள்ளை யடிப்பதும், அங்குள்ள போயர்களைப் புரட்சி செய்யத் தூண்டுவதுமே யாகும். இதில் பல ஆபத்துக்கள் நேரிட்டன. சில சமயம் உடைகளெல்லாம் இழந்து ஸ்மட்ஸ் படையினர் தவிப்பார்கள். செத்த அல்லது பிடிபட்ட ஆங்கில வீரர்களின் உடுப்புகளைக் களைந்து தாங்கள் உடுத்திக் கொள்வார்கள். உணவுக்குப் பல முறை பஞ்சம் ஏற்பட்டது. ஸ்மட்ஸ் எதற்கும் சளைக்காமல் போரிட்டார்.

ஒருபுறம் ஸ்மட்ஸின் இந்தப் படையை அடக்க முடியாமல் திணறினாலும், மறுபுறத்தில் லார்டு கிச்னரின் அடக்கு முறைக் கொடுமை வலுத்தது. போயர்ப் பெண்களெல்லாம்கூட முகாம் சிறைகளில் அடைக்கப்பட்டனர். சொல்லொணாத் துயரங்களுக்கு அவர்கள் ஆளாயினர். அந்த வீரப்பெண்கள் அத்தனையையும் பொறுத்துக் கொண்டனர். மது வெறிகொண்ட ஆங்கில சோல்ஜர் ஒருவன் போயர்ப் பெண்ணொருத்தியைப் போய்ச் சீண்டுவான். அவளது மானபங்கச் சோகப் புலம்பல் கேட்போர் மனதை உருக்கும். இம்மாதிரி அட்டூழியங்களும் நிகழ்ந்தன. இதை யெல்லாம் கேட்ட ஏழாம் எட்வர்டு மன்னர், உள்ளம் வெதும்பி, லார்டு கிச்னருக்கு ஒரு தாக்கீது அனுப்பினார். “போயர்களை நமக்கு அடிபணியச் செய்ய இதுவே வழி யென்றால், என்னால் இது சகிக்காது. போரை நிறுத்துங்கள்.

‘ஸரஸி’

சமாதானம் செய்யுங்கள். அது எப்படிப் பட்ட சமாதானமா யிருந்தாலும் பாதக மில்லை" என்று கிச்னரை மன்னர் வற் புறுத்தினர். போயர்களின் வீரத்தைக் கேட்ட பிரிட்டிஷ் பொதுமக்களும் அதிசயித்தார்கள். சமாதானமும் நடந் தது. "டச்சுக் காலனிகள் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துக்கு உள்படவேண்டியது; கொஞ்ச காலத்துக் கெல்லாம் அவற்றிற் குப் பூரணப் பொறுப்பாட்சி கிடைத்து விடும்" என்று லார்டு கிச்னர் உறுதி கூறினர். போயர்களும் நம்பினர்கள்.

ஆனல், சமாதானத்துக்குப் பின்னும் அவர்களுக்குப் பொறுப்பாட்சி கிடைக்கவில்லை. தளபதி போதாவும் தளபதி ஸ்மட்ஸும் சட்ட சபைகளைப் பகிஷ்கரித்து, ஒத்துழையாமை செய்து, போராடிப் பொறுப்பாட்சியை பிரிட்ட னிடம் வாங்கினர்கள். பின்னல், இவ் விருவரது முயற்சியாலுமே, நான்கு காலனிகளும் சேர்ந்த தென்னப்பிரிக்க யூனியன் சர்க்காரும் ஏற்பட்டது.

இடையில் 1906-ஆம் ஞூ மகாத்மா காந்தியின் சத்யாக்ரகப் போர் தொடங்கி யது. இந்தியர் அனைவரும் வருஷம் ஒன்றுக்குத் தலா மூன்று பவுன் வரி செலுத்த வேண்டும் என்றும் இந்தியர் மணங்கள் செல்ல மாட்டா வென்றும் இந்தியர்கள் லைசென்ஸ் வாங்கவேண்டு மென்றும் அடக்குமுறைச் சட்டம் செய் யப்பட்டது. அதை எதிர்த்தே இந்தச் சத்யாக்கிரகம் ஆரம்பமாயிற்று. இது 1914-ஆம் ஞூ வரையில் நடந்தது. இந்தியர் கோரிக்கைகளுக்குத் துளிக் கூட விட்டுக் கொடுக்கக் கூடாதென்று, தளபதி ஸ்மட்ஸும் வேறு பல ஆங்கி லேயரும் மிக மூர்த்தன்யமாய் எதிர்த்து நின்றார்கள். தளபதி ஸ்மட்ஸ் அப் போது, தளபதி போதாவின் சர்க்காரில் காலனி மந்திரியா யிருந்தார். அவர் இரண்டொரு நம்பிக்கைத் துரோகங் களும் செய்தார்; "மூன்றுபவுன் வரியை யாவது ரத்து செய்யுங்கள். எனது சத்யாக்கிரகப் படையெடுப்பை நிறுத்து கிறேன்" என்ற செய்தியை தளபதி ஸ்மட்ஸுக்கு மகாத்மாஜி சொல்லி யனுப்பினர். "உமது சங்காத் தமே வேண்டாம். உம் இஷ்டப்படி நீர் செய்து கொள்ளும் இவ்வாறு ஸ்மட்ஸ் சொல்லுகிறார்" என்று, அவருடைய காரியதரிசியின் மிடுக்கான பதில்தான் காந்திஜிக்குக் கிடைத்தது. பின்னல், அதே ஸ்மட்ஸ் பணிய வேண்டிய தாயிற்று. காந்தி-ஸ்மட்ஸ் ஒப்பந்தம் ஏற் பட்டு, மூன்று பவுன் வரியும் ரத்தாயிற்று.

மகாத்மா காந்தி தென்னப்பிரிக்கச் சிறையி லிருந்தபோது, தம் கையால் தைத்த ஒரு ஜோடி பாதரட்சையைத் தளபதி ஸ்மட்ஸுக்குப் பரிசாக அனுப்பி னராம். அதை இன்றளவும் ஸ்மட்ஸ் மிகப் பத்திரமாய்ப் பாதுகாத்து வைத்துக் கொண்டிருக்கிறாராம்.

1914-ஆம் வருடம் ஜெர்மன் போர் தொடங்கிய போதும், இம் முறை போலவே, தென்னப்பிரிக்கா என்ன நிலைமை வகிப்பது என்ற பிரச்னை எழுந்தது. "நமக்கும் இந்த யுத்தத்துக் கும் ஒரு சம்பந்தமு மில்லை. நாம் ஏன் இதில் வீணே தலையிட வேண்டும்? நடு நிலைமையே வகிப்போமே!" என்று போயர்களிற் சிலர் வாதித்தார்கள். முன்னே பிரிட்டனுடு போரிட்ட வீரர் களான தளபதி போதாவும் தளபதி ஸ்மட் ஸும் மட்டில் 'பிரிட்டனுக்கு உதவியே தீர வேண்டும்' என்று உறுதியாய் நின் றார்கள். தென்மேற்கு ஆப்பிரிக்காவில் ஜெர்மன் காலனியுடன் நடந்த குட்டிப் போரில், அந்தக் காலனி சரணடைந்தது. அப்போது, கைப்பற்றப்பட்ட பழைய ஜெர்மன் ஏகாதிபத்தியக் கொடி, இன் னும் தளபதி ஸ்மட்ஸின் வீட்டுப் படிப் பறைச் சுவரை அலங்கரித்துக் கொண் டிருக்கிறதாம்.

அடுத்தாற்போல, கீழாப்பிரிக்காவில் பிரிட்டிஷ் படைகளுக்குச் சேனதிபதி யாகச் செல்லுமாறு தளபதி ஸ்மட்ஸை பிரிட்டிஷ் சர்க்காரே கேட்டுக் கொண் டார்கள். போயருக்கும் பிரிட்டிஷாருக் கும் பரஸ்பர நம்பிக்கையும் நிரந்தர சமா தானமும் ஏற்பட்டதற்கு அடையாளம் போல, அந்தக் கௌரவமான பதவியை ஸ்மட்ஸும் ஏற்றுக்கொண்டு, வெகு சீக் கிரமே ஜெர்மன் தளபதி வான் லெட் டோவை விரட்டி யடித்தார்.

ஆப்பிரிக்காவில் சூடிய இரண்டு வெற்றி வாகைகளோடு, 1917-ஆம் வருஷம் இங்கிலாந்தில் ஏகாதிபத் திய யுத்த மந்திரி சபைக் கூட்டத்துக்கு அவர் விஜயம் செய்தார். அப்போதைய நிலைமை மிக அபாயமாயிருந்தது. தளபதி ஸ்மட்ஸ் இங்கிலாந்தில் பல விடங் களுக்கும் சென்று, தமது திறமையா லும் பெருமையாலும் பிரிட்டிஷ் மந்திரி களுக்கும் பிரிட்டிஷ் மக்களுக்கும் புதிய நம்பிக்கையும் புதிய ஊக்கமும் புதிய தைரியமும் ஊட்டினர். முதல் ஏகாதி பத்திய மந்திரி சபை கலைய வேண்டிய சமயம் வந்தபோது, பிரிட்டிஷ் பிரதம மந்திரி லாயிட் ஜார்ஜ், ஸ்மட்ஸை விடமாட்டேன் என்று சொல்லி, பிரிட் டிஷ் யுத்த மந்திரி சபை யிலேயே அவ ருக்கு ஒரு ஸ்தானம் வழங்கிவிட்டார். இந்த நியமனம் உலகிலில்லாப் புதுமை யும் சட்ட வரம்பை யெல்லாம் மீறியது மாகும். தளபதி ஸ்மட்ஸ், பிரிட்டிஷ் பார்லிமெண்ட் அங்கத்தின ரல்ல; தமது சொந்தத் தென்னப்பிரிக்க மக்களுக்கே பொறுப்பானவர். இப்படிப் பட்டவரை பிரிட்டிஷ் மந்திரியாய் நியமித்துக் கொள் ளச் சட்டப்படி முடியாதாகையால், லாயிட் ஜார்ஜ் ஒரு யுக்தி செய்தார். அதா வது, சம்பளமில்லாத கௌரவ மந்திரி யாக, இவரை நியமித்து விட்டார். அந் தப் பதவியை வகித்த காலத்தில், தளபதி ஸ்மட்ஸ் பிரிட்டனுக்குச் செய்த சேவையை ஆங்கிலேயர் ஒருநாளும் மறக்கமுடியாது. லண்டனை விமானத் தாக்குதலினின்றும் காப்பாற்றிய தற் காப்பு ஏற்பாடுகளைச் செய்த பெருமை முழுவதும் தளபதி ஸ்மட்ஸையே சேர்ந்த தாகும். வருங்காலத்தில் யுத்த விமா னங்களின் அட்டகாசம் மகா கொடு மையா யிருக்கும் என்று அப்போதே அவர் தீர்க்க தரிசனமும் கூறிவிட்டார். சமாதானம் நடந்தபின், சர்வதேசச் சங் கம் ஸ்தாபிக்க வேண்டுமென்று ஸ்மட்ஸ் பலமாய் வாதித்ததால்தான், அமெரிக்கக் குடியரசுத் தலைவரும் பிரிட்டிஷ் மந்திரி களும் அதற்கு முடிவாய் இணங்கினர்கள் என்று சொல்லவேண்டும். ஆனல் வெர் ஸேல்ஸ் உடன்படிக்கையில் தாமும் கை யெழுத்திட்டவரா யிருந்தும், அதன் அநீதிகளைக் கண்டு ஏமாற்றமடைந்த வராய்த்தான் ஸ்மட்ஸ் தம் நாட்டுக்குத் திரும்பினர்.

அவர் இப்படித் திரும்பிய ஒன்றிரு வாரத்துக் கெல்லாம் தளபதி போதா காலமாகி விட்டார். உடனே ஸ்மட்ஸே தென்னப்பிரிக்கப் பிரதம மந் திரி யானர். 1924-ஆம் ஞூ வரையில் அந்தப் பதவியை வகித்தார். அவ் வரு ஷத்தில் நடந்த தேர்தலில் ஹெர்ட்ஸாக் கட்சியாரால் தோற்கடிக்கப்பட்டுப் பத வியை ராஜிநமாச் செய்தார்.

ஆனல், 1933-ஆம் வருஷத் தேர் தலிலே ஹெர்ட்ஸாக்கை அவர் தோற் கடித்திருக்க முடியும். எனினும், சொந்த நன்மையைவிடத் தேச நன் மையே பெரிதென்று கருதி, ஹெர்ட் ஸாக்கின் கீழ் அவரது கூட்டு மந்திரி சபையில் பதவி வகித்துச் சேவை புரிய தளபதி ஸ்மட்ஸ் இசைந்தார். இந்தக் 'கூட்டு வியாபாரம்' 1939-ம் வருஷம் வரை எவ்வித இடையூறுமின்றி அழகாய் நடந்துவந்தது. ஹிட்லரின் போர் ஆரம்பமான வுடனே, ஹெர்ட்ஸாக் கோஷ்டியார் நடுநிலைமை வகிக்கவேண்டு மென்றார்கள்; ஸ்மட்ஸ் கோஷ்டியார் பிரிட்டனுக்கு உதவவேண்டு மென்றார் கள். யூனியன் மந்திரி சபைக்குள் ளேயே இவ்வாறு பிளவு நேர்ந்தது. மந்திரி சபையிலும், சட்டசபையிலும் சொற்பப் பெரும்பான்மைப் பலத்தால், ஸ்மட்ஸ் வெற்றிபெற்று, மீண்டும் பிரதம மந்திரி பதவி ஏற்று நிர்வாகம் நடத்தி வருகிறார்.

உலகில் அழகிய பாரிஸ்

ஏ. கே. செட்டியார்

உலகத்திலுள்ள மிக அழகான நகரம் பாரிஸ்.

உலக அற்புதங்களில் ஒன்றான ஈபெல் (Effel) கோபுரத்தை யுடைய நகரம் பாரிஸ்.

சகல கலைகளிலும் சிறப்புற்று விளங்கும் நகரம் பாரிஸ்.

நிற வேற்றுமையே யில்லாத நாகரீகமான நகரம் பாரிஸ்.

அந்நிய நாட்டு யாத்திரிகர்களின் மெக்காவாக விளங்கும் நகரம் பாரிஸ்.

எத்தனை முறை சென்றாலும் தெவிட்டாத நகரம் பாரிஸ்.

மேனாட்டுப் பெண்களின் உடையிலே தினந் தோறும் புதிய புதிய பாஷன்களை உண்டாக்கும் நகரம் பாரிஸ்.

கேளிக்கைகளுக்கும் களியாட்டங்களுக்கும் உலகப் பிரசித்தி பெற்ற நகரம் பாரிஸ்.

இன்று ஜர்மன் சைன்யத்தின் காலடியிலே அகப்பட்டு, அவதியுற்றுத் தவித்துக் கொண்டிருக்கும் பரிதாபகரமான நகரம் பாரிஸ்.

1939-ஆம் வருஷம் ஜூலை மாதத்து இரவில், பத்தரை மணிக்கு, ரயில் பாரிஸ் நகரத்தை யடைந்தது. அமெரிக்காவில் என்னுடன் தங்கி யிருந்த ஒரு கிரேக்க மாணவர் என்னை வரவேற்பதற்காக ஸ்டேஷனுக்கு வந்திருந்தார். சாமான்களை எடுத்துக்கொண்டு, மாணவர்கள் வசிக்கும் லட்டீன் க்வார்ட்டர் என்ற பகுதியிலுள்ள ஒரு ஹோட்டலுக்குச் சென்றோம். வாடகை மோட்டாரின் மீட்டரைப் பார்த்ததும் திகிலடைந்தேன்.

அந்த பிரெஞ்ச் டிரைவர் அரை குறையான ஆங்கிலத்தில் "இரவு பதினொரு மணிக்கு மேல் இரட்டிப்புக் கட்டணம்" என்றான். எவ்வளவு கட்டணம் கொடுக்கிறோமோ அதில், குறைந்தது நூற்றுக்குப் பத்து வீதம் இனாமும் கொடுப்பது அந்த நாட்டு வழக்கம். எனவே, கட்டணத்தையன்றி டாக்ஸி டிரைவருக்கும் 'இரட்டிப்பு இனாம்' கொடுக்கும்படி நேர்ந்தது.

மறுநாள் காலையில் எனது வேலைகளைக் கவனிக்கத் தொடங்கினேன். பாரிஸ் நகரத்துப் படத்தை வைத்துக் கொண்டு, எந்தெந்த பஸ் எந்தெந்தப் பக்கம் செல்கிறது என்பதைக் குறித்துக் கொண்டேன். பாரிஸ் நகரத்து பஸ்களில் முதலாவது இரண்டாவது வகுப்புக்கள் இருக்கின்றன.

சாதாரணமாக, நமது சென்னை நகரத்தில் ஒரு பஸ் நிற்குமிடத்தைப் பாருங்கள். அரை மணி நேரம் நாம் பஸ்ஸுக்காகக் காத்து நிற்கும்பொழுது, பஸ் வந்ததும், எங்கேயிருந்தாவது ஓடி வரும் சில 'முரடர்கள்' நம்மை இடித்துத் தள்ளி விட்டு, தாங்கள் முதலில் ஏறிக் கொள்வார்கள். பெண்களும் குழந்தைகளும் உள்பட மற்றவர்கள் வெகுநேரமாகக் காத்துக்கொண்டு நிற்கிறார்களே என்ற எண்ணம் இவர்களின் மூளைக்கு எட்டாது. இவர்களிற் பலர் ஐரோப்பிய நாகரிகத்தில் தோற்ற மளிக்கிறார்களே என்று நினைக்க வேண்டாம். இவர்களுடைய 'தன்மை' அவ்வளவுதான்.

ஆனால், பாரிஸில் இம்மாதிரி யல்ல. பஸ் நிற்கும் இடங்களிலெல்லாம் அங்குள்ள ஓர் இரும்புத் தூணில் இரும்புப் பெட்டி ஒன்று வைத்திருப்பார்கள். வரிசைக் கிரமமாக நம்பர் அச்சிட்ட ஒரு டிக்கட் சுருள் அதில் இருக்கும். ஒரு டிக்கட்டைக் கிழித்தால், மறு டிக்கட்டின் ஒரு பகுதி தானே வந்து நிற்கும். ஒவ்வொரு பிரயாணியும் ஒவ்வொரு டிக்கட் கிழித்துக் கொள்ளவேண்டும். இதற்குப் பணம் ஒன்றும் கிடையாது. ஏனெனில், பஸ் ஸ்டாண்டுக்கு யார் முன்னே வந்தார்கள் என்பதைக் காட்டுவதற்காக இந்த டிக்கட் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. மோட்டார் பஸ்ஸில் இடமிருந்தால், இந்த டிக்கட்டைக் காட்டாமலே எல்லோரும் ஏறிக் கொள்ளலாம். ஆனால், கூட்டம் அதிகமா யிருந்தால், டிக்கட் நம்பர் பிரகாரம், யார் யார் முன்னால் வந்தார்களோ அவர்கள்தான் ஏறிக் கொள்ளலாம்.

மிகவும் குறைவான கட்டணமுள்ள போக்கு வரத்துச் சாதனம், பூமிக்குக் கீழ் ஓடும் 'மெட்ரோ' என்னும் ரயில்தான். இந்த மெட்ரோ ரயில்கள், லண்டன் ரயில்களைப்போல் சுத்தமாக இல்லாவிட்டாலும், நியூயார்க் ரயில்களைப் போல் அதிவேகமாக ஓடாவிட்டாலும், கூடிய வரையில் சௌகரியமாகவே அமைந்திருக்கின்றன. பூமிக்குக் கீழ் ஓடும் ரயில்களுக்குள்ளே இங்கேதான் இரண்டு வகுப்புக்கள் இருக்கின்றன.

பாரிஸில் முதன் முதலாக வயது முதிர்ந்த ஒரு பிரெஞ்சு அம்மையாரைச் சந்தித்தேன். இவ்வம்மையாரின் விருந்தினராகத்தான் காந்திஜி பாரிஸில் தங்கி யிருந்தார். இவ்வம்மையாரின் முயற்சியால் ஏற்படுத்தப்பெற்ற 'இந்திய நண்பர்கள் சங்க' விருந்துக்குச் சென்றேன். உணவுக்குப் பேர்பெற்ற பாரிஸ் நகரத்தின் ஒரு மூலையிலே, சிறிய வீட்டில், இரண்டாவது மாடியில் இச்சங்கத்தினர் கூடி மிக எளிய சைவ உணவை அருந்தினர். கூட்டத்தில் சுமார் 15 பேர்கள்தான் இருந்தனர். அன்றையப் பிரசங்கியான மாடம் மொரீன் அம்மையார்

(தொடர்ச்சியை 122-ஆம் பக்கத்தில் பார்க்க)

பாரிஸின் சில அரிய போட்டோப் படங்களை அடுத்த இரண்டு பக்கங்களிலும் காணலாம்.

பாரிஸ் காட்சி



நோட்டர் டேம் என்ற மிகப் பிரபலமான சர்ச்சு. இது 426 அடி 312 அடி உயரமும் உள்ளது. மிகப் பெரிய, மிக அழகான ஆலயங் களின் சிற்ப நுட்பங்களெல்லாம் இதில் காணப்படுகின்றன. இங்கே கிரிஸ்து நாதர், சில நிர்வாணச் சிலைகள், மகான் ஸெபஸ்டிய சிற்பங்கள் மிக அழக

பாரிஸின் நடுநாயகமாய் விளங்கும் ஆபேரா-ஹவுஸின் எதிர்ப்புற வீதித் தோற்றம். இந்த ஆபேரா ஹவுஸ்தான் உலகிலேயே மிகப் பெரிய தியேட்டர். ஆயினும் 2167 ஜனங்கள் தான் இதில் உட்காரமுடியும். 1862-ஆம் வருஷம், 3 கோடி ரூபாய் செலவில், இது கட்டப்பட்டது. மூன்று ஏக்கர் நிலம் இதன் மனைப்பரப்பு. சர்க்கார் இதற்கு மான்யம் அளித்து வந்தார்கள். இப்போது ஹிட்லர் தர்பாரில் இதன் கதி என்னவோ?

'எக்ளேர்' ஸ்டுடியோ. 'எக்ளேர்' என்ற பிரெஞ்சுப் பதத்திற்கு 'வாழ்வு' என்று அர்த்தம். இந்தப் பிரபல ஸ்டுடியோவில் சினிமா பிலிம்களின் பிரி... எடுக்கும் இலாக்கா இது. பெண்கள்தான் இந்த 'பிரிண்ட்' எடுக்கும் வேலைகளைச் செய்கிறார்கள்.

சாம்ஸ் எலீஸீஸ் என்னு மிடத்தில் ...ராக் கிளப்பில் நடக்கும் அரை நிர்வாண நாட்டியம்.

ட்சிகள்



து 426 அடி நீளமும் 164 அடி அகலமும்
கான ஆலயம். 13, 14-ஆம் நூற்றாண்டு
றன. இங்கேயுள்ள மத்திய சிலையான
ஸெபஸ்டியன், கன்னியர் ஆகிய பல
மிக அழகாயுள்ளன.

மன்னர்களெல்லாம் விரும்பித் தங்கும் ராஜபோகங்கள் நிறைந்த 'ஹொட்டேல் மியூரிஸ்'. இன்று இந்த ஹொட்டேலில் நாஜியின் ஸ்வத்திகா பதிந்து விட்டதால், இது பாழடைந்து கிடக்கிறது. தெருவிலே ஒரு பிரெஞ்சுப் பெண்ணும் இரு பிரெஞ்சு அதிகாரிகளும் தனியே செல்கிறார்கள்.

ஸ்டுடியோ.
ன்ற [illegible] பிரெஞ்
வாழ்வு'
இந்தப் பிர
பில் சினிமா
[illegible] எடுக்
து. பெண்
'பிரிண்ட்'
வலைகளைச்

ஸ் என்னு
க்கிளப்பில்
ர நிர்வாண

(119-ஆம் பக்கத் தொடர்ச்சி)

எனக்கு அறிமுகப் படுத்தி வைக்கப் பட்டார். அந்த அம்மையாரின் பிரசங்கம் பிரெஞ்சு பாஷையில் இருந்ததனால், எனக்கு ஒன்றுமே புரியவில்லை. பிரசங்கம் முடிந்தபிறகு, பலரும் பிரசங்கத்தில் கூறப்பட்ட விஷயங்களைப்பற்றிவிவாதித்தனர். 'ஹரிஜன்' பத்திரிகையிலிருந்து சில பகுதிகள் மொழிபெயர்க்கப்பட்டு அங்கத்தினர்களுக்கு வழங்கப்பெற்றன. இந்தியாவின் உண்மை நிலையைப் பத்திரிகைகள் மூலமாகவும் புத்தகங்கள் மூலமாகவும் பரப்புவதே இவர்கள் செய்யும் முக்கியமான தொண்டு.

பாரிஸிலுள்ள பழமையான ஸ்டுடியோக்களில் 'எக்ளேர்' ஸ்டுடியோவும் ஒன்று. இந்தியாவிலுள்ள ஒரு பிரெஞ்சு நண்பர் இந்த ஸ்டுடியோவுக்கு என்னிடம் ஒரு அறிமுகக் கடிதம் கொடுத்தார். அந்த ஸ்டுடியோவிலேயே ஆங்கிலம் பேசுவோர் இரண்டு பேர்தான். அவர்களில் ஒருவருக்கு என்னை உபசரிக்கும் பொறுப்பு அளிக்கப்பட்டது.

பாரிஸிலுள்ள சிறந்த உணவுச் சாலைகள், ஸ்டுடியோக்கள், சினிமாக்கள் இவற்றுக்குப் போவதுதான் பெரும்பாலும் எனது தினசரி வேலை. சமீபத்தில் இந்தியாவிலிருந்து திரும்பிய சில பிரெஞ்சு பாதிரிகள் இந்தியாவின் குறைகளை மட்டும் காட்டும் பல சிறிய சினிமாப் படங்களைத் தயாரித்து வந்து, அதன் மூலம் பிரான்ஸில் இந்தியாவைப் பற்றி இழிவாகப் பிரசாரம் செய்து தங்கள் வேலைகளுக்குப் பணம் சேர்க்கிறார்களென்று தெரிந்து கொண்டேன். இந்தியாவின் கலை, நாகரிகம், இயற்கை வனப்பு முதலியவைகளைப் பற்றிய படங்களைத் தயார் செய்து வெளி நாடுகளுக்கு அனுப்பினால்தான், தவறான பிரசாரங்களைத் தடுக்க முடியுமென்று உணர்ந்தேன்.

பாரிஸில் சினிமாத் தியேட்டர்கள் மிகவும் நாகரிகமானவை. ஆனால் ஒரே ஒரு தொந்தரவு மட்டும் உண்டு. நாம் டிக்கட் வாங்கிக்கொண்டு உள்ளே நுழைந்ததும், அங்கே வேலை செய்யும் பெண், நம்முடைய டிக்கட்டை வாங்கிக் கொண்டு, நாம் உட்காரவேண்டிய இடத்தைக் காண்பித்துவிட்டு, நமது டிக்கட்டை நம்மிடம் திருப்பிக் கொடுப்பாள். அப்பொழுது நாம் அவளுக்கு ஏதாவது இனாம் கொடுப்பது அந்த நாட்டு வழக்கம். நாம் கொடுக்காதிருந்தால், 'ஸெர்விஸ்' என்று கூறி இனாம் கொடுக்கும்படி நம்மைக் கட்டாயப்படுத்துவாள்.

ஆபெரா ஹவுஸுக்கு அருகே 'நாயுடு ரெஸ்டாரண்ட்' என்று ஒன்றிருக்கிறது. இதை நடத்தும் நாயுடு ஒரு தமிழர். இவர் ஒரு ஜர்மன் பெண்ணைக் கல்யாணம் செய்துகொண்டிருக்கிறார். இந்த 'ரெஸ்டாரண்'டில், சோறு, கறி, பருப்பு, சப்பாத்தி முதலியவை கிடைக்கும். ஆனால் விலை மட்டும் மிக அதிகம்.

இந்த 'ரெஸ்டாரண்'டில் பல இந்தியர்களைச் சந்தித்தேன். ஒருநாள் என் அருகில் சாப்பிட்டுக் கொண்டிருந்த ஒரு முதிய பிரெஞ்சுக்காரர் என்னுடன் அரை குறையான தமிழில் பேசினார். அவர் புதுச்சேரியில் ஒரு நியாயாதிபதியாக இருந்தவராம்.

பாரிஸ் நகரத்தில் உலகப் பிரசித்தி பெற்ற பல கலாசாலைகள் இருக்கின்றன. உலகத்தின் பல பகுதிகளிலிருந்தும் மாணவ மாணவிகள் இங்கு பயில வருகிறார்கள். ஒரு நாள் 'இந்திய மாணவர் சங்க' விருந்துக்குச் சென்றேன். அன்று லண்டனிலிருந்து ஸ்ரீ கிருஷ்ணமேனன் வந்திருந்தார். மாணவ மாணவிகளின் எண்ணில்லாத கேள்விகளுக்கு அவர் சாந்தமாகவும் ஆணித்தரமாகவும் பதிலளித்தார்.

பாரிஸ் நகரின் இரவுத்தோற்றம் மிக அழகாயிருக்கும். நீண்ட புல்வார்டு வீதிகள், வீதிகளின் இருமருங்கிலுமுள்ள (cafe) காபிக் கிளப்புகள், விளக்குகளால் அலங்கரிக்கப் பெற்ற வியாபார ஸ்தலங்கள் முதலியன பார்க்க ரமணீயமாயிருக்கும்.

பாரிஸ் நகரத்து இரவு வாழ்க்கை பேர் போனது. பாரிஸ் நகரத்தின் சிறந்த இரவுக் கிளப்புகளில் ஆயிரக்கணக்கான அந்நியர்கள், சாராயம் குடித்து விட்டு, நிர்வாண நாட்டியங்களைப் பார்த்துக் கூத்தாடுவர். இதைக் கொண்டு பிரெஞ்சுக்காரர்களை நாம் மதிப்பிடலாகாது. இது பாரிஸ் நகர வாழ்க்கையின் ஒரு புறம்தான்.

சங்கீதத்துக்கும், சித்திரத்துக்கும், நாட்டியத்துக்கும், இன்னும் பிற பல கலைகளுக்கும் சிறந்த இருப்பிடம் பாரிஸ். சமத்துவம், சகோதரத்துவம், சுதந்தரம் ஆகிய உன்னதமான கொள்கைகளுக்காக உலகப் பிரசித்தி பெற்ற 'பிரெஞ்சுப் புரட்சி'யைத் தோற்றி, அதில் வெற்றி பெற்ற சுதந்தர வீரர்களான பிரெஞ்சுக்காரர்களின் தலை நகரம் பாரிஸ். உலகத்திலுள்ள பெரிய வியாபார ஸ்தலங்களில் ஒன்று பாரிஸ். இவைகளினாலே தான் பாரிஸ் நகரம் சிறப்பற்று விளங்குகிறது.

பிரெஞ்சுக்காரர்கள் மிக நல்லவர்கள். அவர்களிடம் நிறத் துவேஷமே கிடையாது. பிறரை எப்பொழுதும் சமத்துவமாகவும் அன்பாகவும் நடத்துவார்கள். நான் சொல்வதெல்லாம் பிரான்ஸிலுள்ள பிரெஞ்சுக்காரர்களைப் பற்றித்தான்; பிரெஞ்சு சாம்ராஜ்யத்திலுள்ள பிரெஞ்சுக்காரர்களைப் பற்றியல்ல. ஒரு தேசத்தார் எவ்வளவு நல்லவர்களாயிருந்தாலும், எவ்வளவு உயர்ந்தவர்களாயிருந்தாலும், அவர்கள் தங்கள் பலத்தால் மற்ற தேசத்தினரை அடக்கியாள்வார்களானால், அவர்கள் கேவல மானவர்களே. பிரான்ஸின் இன்றைய நிலை பரிதாபமாய் இருக்கிறது. பிரெஞ்சுக்காரரின் சுதந்தரத்துக்கே ஆபத்து நேர்ந்திருக்கிறது. பிரான்ஸின் ஒரு பகுதி ஜர்மானியர்களின் ஆதிக்கத்திலிருக்கிறது. ஆசியாவிலும் ஆப்பிரிக்காவிலும் பல தேசங்களை அடக்கியாளும் பிரெஞ்சுக்காரர்களில் பெரும்பாலோர் இன்று ஜர்மானியர்களால் அடக்கியாளப்படுகின்றனர். நாஜிகளின் கொடுமை ஒழிந்து பிரான்ஸ் தேசம் விடுதலையடைய வேண்டுமென்பதே நமது விருப்பம். ஆனால் இந்த விடுதலை பிரான்ஸ் தேசத்துக்கு மட்டுமல்ல; பிரெஞ்சு சாம்ராஜ்யத்திலுள்ள அத்தனை நாடுகளுக்கும் கிடைக்க வேண்டும். அப்பொழுதுதான் பிரான்ஸுக்குப் பிரகாசமான எதிர்காலம் ஏற்படும்.

ஈசுவர ஞாபகம்

"ராதாகிருஷ்ண" என்ற பகவந் நாமத்தை நெட்டுருப் போட்டு நெடுநேரம் ஒரு கிளி சொல்லும். ஆனால் அது ஒரு பூனையின் கையிலகப்படுமானால், தன் சுய பாஷையை வெளிப்படுத்தி "கா, கா" என்று கத்தும். உலகப் பற்றுள்ளவர்கள் லௌகிக வெகுமானங்களை எதிர் பார்த்தவர்களாய், சில வேளைகளில் ஹரி ஸ்மரணை பண்ணியும் தான தர்மங்களைச் செய்தும் வருகின்றனர். ஆனால் துரதிருஷ்டம், துக்கம், தரித்திரம், மரணம் இவைகள் நெருங்கும்போது, ஈசுவர ஸ்மரணையும் தான தர்மமும் அவர்களுடைய ஞாபகத்திலிருப்பதில்லை. —ஸ்ரீ பரம ஹம்ஸர்.

ரமண ரிஷிகள் சன்னிதானம்

(கே. அருணாசலம்)

போன வருஷம் ஜனவரி மாதம் 30-ஆம் தேதி நான் புனர் ஜன்மம் எடுத்ததாகவே சொல்ல வேண்டும். அன்று மனதிலிருந்த மாசுகள் அகன்று பரிசுத்த மனிதனானேன்.

நான் குழந்தையா யிருந்த போது, காலஞ் சென்ற எனது தகப்பனார் திருக்கோவிலூரில் முன்சீப் கோர்ட்டில் குமாஸ்தா வேலை பார்த்து வந்தார். பெயர், கிருஷ்ணய்யர். அவர், ரமண மகரிஷிகளை உயிருள்ள தெய்வமாகவே பாவித்தவர். வாரா வாரம் திருவண்ணாமலை சென்று, ரிஷிகளைத் தரிசிப்பதுண்டு. நான் குழந்தையா யிருக்கையில், ஒரு சமயம், சாகுந் தருவாயிலிருந் தேனாம். ரத்தம் கக்கிக் கொண்டிருந் திருக்கிறேன். உடனே எனது தகப்பனார், ரிஷிகளிடம் சென்று, தமது மனோ வேதனையை தெரிவித்துக் கொண்டார். ரிஷிகள் விபூதி கொடுத்து, பையனுக்கு அருணாசலம் என்ற பெயர் வைக்குமாறு சொன்னார். ஏற்கனவே எனக்கு சேஷாத்திரி என்ற பெயர் வைக்கப்பட்டிருந்தது. ரிஷிகள் கொடுத்த விபூதியை வாயில் போட்டுக் கொண்டதும், தாயாரும், தகப்பனாரும் அதிசயப்படும் வண்ணம் குணமடைந்தேன். சேஷாத்திரியா யிருந்தவன், ரிஷிகள் ஆக்ஞைப்படி அருணாசலமானேன். இந்த விவரத்தைக் காலஞ் சென்ற எனது தாயார் என்னிடம் கூறியிருக்கிறாள். அதிலிருந்து, ரிஷிகளைத் தரிசிக்க மிக்க ஆவல் கொண்டிருந்தேன். அந்த பாக்யந்தான் எனக்கு ஜனவரி 30-ஆம் தேதி கிடைத்தது.

பார்ப்பதில் ஏதேனும் சிரமம் இருக்குமோ வென்று முதலில் எனக்கேற்பட்ட சந்தேகத்துக்கு இடமே யில்லாமற் போய்விட்டது. ரிஷிகள் இருந்த ஹாலுக்கு வெளியே உட்கார்ந்திருந்த ஆச்ரம வாசியை "உள்ளே போகலாமா?" என்று கேட்டேன். அவர் "ஆஹா! போகலாம்" என்றார். உள்ளே நுழைந்தேன். கையிலிருந்த பழங்களைக் கீழேவைத்து விட்டு, ரிஷிகளை நமஸ்கரித்த பின், அவருடைய பாதங்களைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக்கொள்ளப் போனேன். ரிஷிகள், "இதிலெல்லாம் என்ன இருக்கிறது; ஒன்றுமில்லை. எல்லாம் மனசையே பொறுத்திருக்கிறது" என்றார். என்னைப் போல் தரிசிக்க வந்த சுமார் 40, 50 பேர்கள் அந்த ஹாலில் ரிஷிகளின் சன்னிதானத்தில் அமர்ந்திருந்தனர். அவர்களுடன் நானும் உட்கார்ந்தேன்.



ஜோதியுடன் விளங்கிய ரிஷிகளின் முகத்தைப் பார்த்துப் பரவசமானேன். என் மனது எனது கட்டுப்பாட்டில் இல்லை. பெரும் குழப்பம் !

இதை எப்படி வர்ணிப்பதென்றே எனக்குத் தெரியவில்லை. ஆமாம், மனதில் ஒரு புரட்சியும், பகாப் பிரளயமும் ஏற்பட்டதென்று சொல்லலாம். அழுக்குகள் குழம்பிப் போகையில், அந்தக் குழம்பில் என்னென்ன வெல்லாம் இருக்கின்றன வென்று நம்மால் சொல்ல முடியாதல்லவா? அதைப் போலவே உள்ளத்தில் ஏற்பட்ட புரட்சியில் என்னென்ன வெல்லாம் ஞாபகத்துக்கு வந்து நற்குண சக்தியால் எதிர்க்கப் பட்டு, அகற்றப் பட்டன வென்பதை என்னால் வர்ணிக்க முடியவில்லை. இந்தப் புரட்சி சுமார் 15 நிமிஷ நேரம் இருந்தது. அதற்குப் பின் மனதிலிருந்த ஒரு பெரிய சுமை—சுமப்பதால் யாருக்கும் நன்மை யில்லாத ஒரு பெரிய சுமை—அகன்று விட்டது போல் தோன்றிற்று. மனதில் பரிபூர்ண சாந்தி ஏற்பட்டது. அதற்கு முன் அப்பேர்ப்பட்ட நிலையில் நான் ஒரு போதும் இருந்ததில்லை. அந்தச் சாந்தி ஏற்பட எவ்வளவு தபஸ் வேண்டுமானாலும் செய்யலாம். அந்த ஆனந்தக்கடலில் முக்கால் மணி நேரம் ஆழ்ந்திருந்தேன்.

ரிஷிகளின் மெத்தை, தலையணை, கௌபீனம் எல்லாம் கதர்தான். அந்த ஹாலில் ரிஷிகளின் உபதேசங்களை (இங்கிலீஷ் புஸ்தகத்திலிருந்து) மனதுக்குள் படித்துக் கொண்டிருந்த இரு வெள்ளைக்கார ஸ்திரீகளும் (அவர்கள் ஆங்கிலேயர்களா அல்லது அமெரிக்கர்களா என்பது எனக்குத் தெரியவில்லை) கதர் ஆடையில்தான் இருந்தார்கள். ரிஷிகளுக்குப் பக்கத்தில் கீழே, ஐந்து பேர்கள் ஜபம் செய்து கொண்டிருந்தனர். இவர்கள் ஆசிரம வாசிகளா யிருக்கவேண்டுமென ஊகித்தேன்.

வருகிறவர்கள் அனைவரும் ரிஷிகளை நமஸ்கரித்த பின், அவர் சன்னிதானத்தில் சற்று அமர்ந்து, மனச் சாந்தி ஏற்பட்டதும் வெளியே போகிறார்கள். ஒரு ஸ்திரீ ஒரு சிறிய குழந்தையுடன் அந்த ஹாலில் உட்கார்ந்திருந்தாள். குழந்தை 'கல கல' வென்று இருக்கும் சுபாவமுடையது. "அம்மா அந்தத் தாத்தாவைப் பாரேன்" என்று முதலில் இரண்டு மூன்று தடவை சொல்லிற்று. பிறகு, 'ச—ரி—க—மா' என்று பாடிற்று. சற்று நேரத்துக்குப் பின், "ஆத்துக்குப் போகலாமே" என்றது அந்த இரண்டு வயதுக் குழந்தை. ரிஷிகள் புன்னகையுடன் "என்னம்மா, நமக்கெல்லாம் ஆம், மடம் எல்லாம் ஒன்றுதான்" என்றார். ஒரு பழத்தை குழந்தையின் கையில் கொடுக்குமாறும் சொன்னார். குழந்தை அதை வாங்கிக்கொண்டு,

"தாத்தா சொன்னார், மாமா பழம் தந்தார்" என்றது.

பக்திரஸம் ததும்பும் தெலுங்குப் புஸ்தகமொன்றைப் படித்துக் கொண்டிருந்த ஒரு ஆந்திர மாது, சில சந்தேகங்களை ரிஷிகளிடம் தெரிவித்து, அவற்றைப் போக்கிக் கொண்டிருந்தார்.

சுமார் ஒரு மணி நேரம் ரிஷிகளின் சன்னிதானத்தில் அமர்ந்திருந்த பின், அவரை மீண்டுமொரு முறை நமஸ்கரித்து, 20 வருஷங்களுக்கு முன் அவருடைய கிருபையால் நான் குணமடைந்த வரலாற்றையும் அவரிடம் கூறினேன். நான் சொல்லிக்கொண்டு போகப் போக, அவர், 'ஆமாம்' 'ஆமாம்' என்று மேன்மேலும் கேட்டுவந்தார். இது முடிந்ததும் விடை பெற்றுக் கொண்டு திரும்பினேன். ஹாலிலிருந்து வெளி வருகையில், ஏதோ உள்ளே கொண்டுபோன சாமான்களை நான் திரும்பக் கொண்டு வரவில்லை போல் தோன்றிற்று. என்ன என்று சற்று யோசித்த பின்னர்தான் மனதிலிருந்த பாரத்திலிருந்து நான் விடுவிக்கப்பட்டது ஞாபகத்துக்கு வந்தது. ஸ்படிகம் போன்ற மனதுடன் திரும்பினேன். ஹாலில் நுழைந்த மனிதன் வேறு; வெளியில் வந்த மனிதன் வேறு.

மைசூர் சமஸ்தானத்திலுள்ள பேலூர், ஹாலேபீட், சோமனாதபுரி ஆகியவற்றின் ஆலயச் சிற்பங்கள் உலகிலேயே இணையற்றவை. "பேலூர் ஆலயத்தில் மனிதன் செய்திருக்கும் அதே அளவு ஊழியம், அந்தக் கோயில் அளவேயுள்ள வேறெவ்விடத்திலும் உலகில் செய்யப்பட்டதில்லை" என்று சொல்லுகிறார்கள்.

"நாம் ஜனநாயகத்தின் மகத்தான வெடிமருந்துச் சாலையா யிருக்க வேண்டும்" என்று ஒரு முறை தலைவர் ரூஸ்வெல்ட் அமெரிக்க மக்களுக்குச் செய்தி விடுத்தார்.

"பழைய இலக்கியம், புதிய இலக்கியம் என்று கிடையாது; ஆதர்ச இலக்கியம், அனுபவ இலக்கியம் என்றும் கிடையாது. ஒரே ஒரு இலக்கியம்தான் உண்டு. அது எந்த நாமகரணத்தைக் கண்டாலும் நடுநடுங்கும்"—டாக்டர் அமார்நாத் ஜா.

அரசியல் சாமர்த்தியம்

(ரா. நா.)

மாண்ட்போர்டு சீர்திருத்தத்தைப் பற்றி ஆலோசித்து முடிவு செய்வதற்காக, சென்னையில் கோகலே ஹாலில் ஒரு மாகாண மகாநாடு கூடிற்று. சேலம் கிழவர் ஸ்ரீ வி. விஜயராகவாச்சாரியார் தலைமை வகித்தார். சீர்திருத்தத்தைப் பற்றி நீண்டதோர் தீர்மானத்தைத் தலைவர்கள் தயார் செய்திருந்தனர். தீர்மானம் பிரேரணையாகி ஆதரிக்கப்பட்டுவிட்டது. உடனே ஸ்ரீ ஸத்தியமூர்த்தி தீர்மானத்துக்கு ஒரு திருத்தம் கொண்டு வந்து திருத்தத்தைப் படித்தார். திருத்தம் தீர்மானத்துக்கு நேர்மாறானது என்று சொல்லி, அதைத் தலைவர் நிராகரித்துவிட்டார். ஆனால், ஸ்ரீ ஸத்தியமூர்த்தி சலிக்கவில்லை. "நான் தீர்மானத்தை எதிர்த்துப் பேச விரும்புகிறேன்" என்று கூறினார்.

"ஆஹா! தாராளமாகப் பேசுங்கள்" என்று அனுமதி யளித்தார் தலைவர். ஸ்ரீ ஸத்தியமூர்த்தி தம் எதிர்ப்புப் பிரசங்கத்தின் மூலமே, தம் திருத்தத்தைப் பற்றிப் பேசினார். தலைவர் முகம் சிவந்தது. கோபாவேசத்துடன் எழுந்து "நீங்கள் என்ன செய்துகொண்டிருக்கிறீர்கள், ஸத்தியமூர்த்தி?" என்று ஆத்திரத்துடன் கேட்டார். "நான் பேசிக் கொண்டிருக்கிறேன், ஸார்" என்று ஸத்தியமூர்த்தி பதிலளித்தவுடன், தலைவர் உள்படச் சபையோர் எல்லோரும் சிரித்தனர். தலைவர் கோபத்தையும் மாற்றக்கூடிய ஹாஸ்யம் காட்டிய ஸத்தியமூர்த்தியை யாவரும் வியந்தனர்.

திருச்சியில் ஒரு பொதுக் கூட்டம். அதே ஸத்தியமூர்த்தி பேசிக்கொண்டிருக்கிறார். தாய்ப் பாஷையின் அவசியத்தைப் பற்றி மிக உற்சாகமாகப் பேசினார். அந்தச் சமயத்தில் ஒரு தமிழ்ப் பிரியர் எழுந்திருந்தார். ஸத்தியமூர்த்தியைப் பார்த்து "உங்களுக்குத் தொல்காப்பியம் தெரியுமா?" என்று கேட்டார். உடனே ஸத்தியமூர்த்தி அந்த நண்பரைப் பார்த்து "உங்களுக்குச் சாஸர் தெரியுமா?" என்று கேட்டார். உடனே சபையினர், கேள்வி கேட்டவரைப் பார்த்துக் கேலிச் சிரிப்புச் சிரித்தனர். அந்த நண்பர் தலையைக் குனிந்து கொண்டு மறைந்தார். ஸத்தியமூர்த்தியின் பதில், கேள்விக்குப் பொருத்தமானதுதான் என்று கூற முடியாமற் போனாலும், உடனுக்குடன் பதில் சொல்லும் திறமையினால், கலவரமான நிலைமையை எப்படி மாற்றலாம் என்பதற்கு இந்தச் சம்பவம் ஒரு உதாரணம்.

மதுரையில் தமிழ் மாகாணக் காங்கிரஸ் கமிட்டி கூடி யிருந்தது. அதன் முன் சமர்ப்பிப்பதற்காக ராஜாஜி ஒரு தீர்மானம் தயார் செய்திருந்தார். அச் சமயம் ஈ. வே. ரா.வும் காங்கிரஸி லிருந்தார். ராஜாஜி தம் தீர்மானத்தைப் பிரேரிக்கும்படி நாயக்கரைக் கேட்டுக் கொண்டார். நாயக்கர் தீர்மானத்தைப் படித்துவிட்டு, அதைத் தாம் ஒப்புக் கொள்ளவில்லை என்று கூறினார். "தீர்மானத்தை நீங்கள் பிரேரியுங்கள். முடிந்தவுடன் அதற்குத் தக்க காரணங்கள் நான் கூறுகிறேன்" என்றார் ராஜாஜி. நாயக்கர் தீர்மானத்தைப் பிரேரித்து நீண்டதோர் பிரசங்கம் செய்தார். தீர்மானம் நிறைவேறியது. கூட்டம் கலைந்தவுடன் நாயக்கர் ராஜாஜியைப் பார்த்து, "தீர்மானத்துககுக் காரணங்கள் கூறுங்கள்" என்று கேட்டார். "நீங்கள் உங்கள் பிரசங்கத்தில் அழகாகக் காரணங்கள் கூறினீர்களே; அவைகளைத் தான் நானும் சொல்ல விருந்தேன்" என்றார் ராஜாஜி. நாயக்கர் சிரித்துக்கொண்டே, "புகைக் கண்ணாடியின் சாமர்த்தியமே சாமர்த்தியம்" என்று தம் நண்பர்களிடம் கூறினார்.

திருச்சியில் பிர்சன்ன வேங்கட்சுவரர் சத்திரத்தில் தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி கூடியது. தலைவர் டாக்டர் ராஜன். ஏதோ ஒரு விஷயத்தைப் பற்றி விவாதம் நடந்தது. விவாதம் விபரீதமாகப் போகாமல், ராஜன் ஒழுங்காக நடவடிக்கைகளை நடத்தி வந்தார். யாரோ பேசிக் கொண்டிருக்கையில், தஞ்சாவூர் ஜில்லாப் பிரபல தலைவர் ஒருவர் குறுக்கிட்டுப் பேச முயன்றார். "நீங்கள் பேச உரிமை யில்லை; உட்காருங்கள்" என்றார் ராஜன். "நான் யார் தெரியுமா?... ஊர்...வர்" என்று கர்ஜித்தார் தஞ்சாவூரார். "யாராயிருந்தாலும் சரி; உட்காருங்கள் என்றால் உடனே உட்கார வேண்டும்" என்றார் மண்டபம் அதிரும் குரலில் டாக்டர் ராஜன். அந்தப் பிரபல தஞ்சாவூர்த் தலைவர் வெல வெலத்துப் போய் அமர்ந்தார். சபையினர் இந்தக் காட்சியைக் கண்டு களிப்புற்றனர். அதற்குப் பிறகு விவாதம் சாந்தமாகவே நடந்தது.

"யுத்தத்துக்குப் பிறகு, பழுத்த இலந்தைப் பழம் மாதிரி சுதந்திரம் இந்தியாவின் மடியில் வந்து விழுந்துவிடப் போவதாக நான் நினைக்கவில்லை."—மௌலானா ஜாபர் அலி.

பாரத சக்தி மஹாகாவியம்

சுவாமி சுத்தானந்த பாரதியார்

௧௪. புறப்பாட்டுப் படலம்

மூன்று காலமும் கற்ற முனிவன்பால்,
ஆன்ற ஞானம் அனைத்தும் அறிந்தபின்,
சான்றவர் சொலச் சத்திய சுத்தனும்
தோன்று லகை யறிந்திடத் துன்னினன்.

திரிகால ஞானியான பாரத முனிவனிடம் கற்க வேண்டிய விசாலமான கல்வி கேள்விகளையெல்லாம் தேர்ந்தபிறகு அனுபவ ஞானம் பெறவேண்டும். சித்தி நகரில் உள்ள பெரியார்களும்,'' அரசையும், உலகையும் இளவல் சுற்றிப் பார்ப்பது நலமாகும்'' என்றனர். ஆதலால், சத்தியன இளவரசனை சுத்தனும் தன் முன்னே தோன்றும் உலகைச் சுற்றிப்பார்த்து மக்கள் நிலையை அறிய விரும்பினன். ௨௪௧

ஏட்டிலே யிசை யெத்தனை கற்கினும்,
பாட்டி லாதவர், பண்செய் கருவியில்
மீட்டி லாதவர் வித்துவ ராவரோ?
ஆட்டி லாதவர் ஆடக ராவரோ?

குரலும் விரலும் கூடிய இசைக் கலையை நூலில் எவ்வளவு படித்தபோதிலும் பயனில்லை. குரலைப் பழக்கிப் பாட வேண்டும். விரலைப் பழக்கி வாத்தியங்களில் மீட்டவேண்டும்; அப்போதே வித்வான்களாகலாம். பரத நாட்டியத்தைப் பற்றி எவ்வளவு கற்றாலும் என்ன? ஆடிப் பழகினாலே நடன வித்துவான் ஆகலாம். அதுபோலவே புத்தகப் படிப்புடன் அனுபவ ஞானமும் பெற்றாலே புலவனாகலாம். ௨௪௨

சுற்று ணர்ந்திரு தோற்ற வுலகினை
முற்று ணர்ந்ததன் முக்குண நாடகம்
இற்றெ னத்தெளிந் தார்இயல் பாகவே
கற்று ணர்ந்த கலைக்கட லாவரே.

வெறும் புத்தகப் படிப்பு மட்டுமே படிப்பாகாது. படிக்க வேண்டும், பார்க்கவேண்டும்; சுற்றிலும் உள்ள மாந்தர் இயல்பை அறியவேண்டும். உலகம் நன்மை, தீமை, இன்பம், துன்பம், அறம், பாவம் என்னும் இருவகைத் தோற்றங் கொண்டது. அதை முற்றிலும் பார்த்து ஆராய வேண்டும். உலகம் சத்வ ராஜஸ தாமதமாகிய மூன்று குணங்களைக் கொண்டு பல காட்சிப் படலங்களை ஜோடித்து நடக்கும் எல்லையற்ற நவரஸ நாடகமாகும். அந்த நாடகத்தை படிப்பதனால் மட்டுமே அறிய முடியாது. நேரே பார்த்து அஃது இன்னதென்று தெளிந்து கொள்ள வேண்டும். அப்படி உலகைப் பார்க்கப் பார்க்க இயற்கையான அனுபவ ஞானம் ஏற்படும். "சரி, உலகம் இவ்வளவு தான். அதற்குமேல் உள்ள உண்மை இன்னது. அந்த உண்மையே நான். சுற்றி நடப்பது நாடகம்'' என்று அறிவாளி அனுபவ ஞானம் பெறுவான். படிப்புடன் இந்த இயற்கை யறிவும் பெற்றவரே கற்று உணர்ந்து கண்டு நின்ற கலைக்கடலாவார். ௨௪௫

ஆத லாலென் அரசிளஞ் செல்வனும்
ஓத லால்வரு ஞானம் உரம்பெற
நீதி யாட்சி நிலவுநன் னாடெலாம்
போத லென்று புகன்றனன் சத்தியன்.

"ஆகையால் எனது அரசை ஆளும் உரிமையுடைய இளஞ் செல்வன், கற்றுத் தேர்ந்த தனது அறிவு உறுதியாகி அனுபவம் பெறவும், தனது அரசை எப்படி யாளவேண்டும் என்றறியவும், நீதியாக விளங்கும் நாடுகளுக் கெல்லாம் சென்றுவருக!'' என்று மன்னனான சத்தியன் புகன்றான். ௨௪௪

புத்தி மான்,புவி யாளுங் கலையினில்
எத்தி சையும் இசைபெற்ற மந்திரி
சித்தி மானுடன் செல்வகை செல்கெனச்
சத்தி யனுந் தனயனை யேவினன்.

சித்தி மரபு இவ்வளவு பெருமை பெற்றதற்கு அதன் அமைச்சனாகிய சித்திமானே காரணம். அவன் மகா புத்திசாலி; உலகை யாளும் அரசியற் கலையில் இணையற்றவன்; எட்டுத் திசையும் புகழ் பெற்றவன். எல்லா நாடுகளும் அவனை

அறியும், மதிக்கும். "இளவரசனொருவன் எந்தச் சிறப்புடன் செல்ல வேண்டுமோ அந்தச் சிறப்புடன் சித்திமானைத் துணைக் கொண்டு சென்று வருக" என்று சத்திய ராஜன் தனது மகனுக்குக் கட்டளை யிட்டான். உஅரு

அன்ன செய்தி யறிந்து மகிழ்ந்துடன்
முன்னர் தூது விடுத்து முடிபரும்,
மன்னர் மன்னனின் மன்னிளஞ் செல்வனை
இன்ன நாள்வரவேற்பமென் றோதினர்.

நீதிகாக்கும் முடிமன்னர்கள், இந்தச் செய்தி யறிந்து பெருமகிழ் வெய்தினர்; உடனே தங்கள் தூதர் மூலம் ஓலை யனுப்பி "நாங்கள் இன்ன நாளில் எங்கள் சக்கரவர்த்தித் திருமகனை வரவேற்க விரும்பி எல்லா ஏற்பாடுகளும் செய்கிறோம்; தயவுசெய்து அந்நாள் எழுந்தருளச் செய்யவேண்டும்" என்று வணக்கமுடன் வேண்டினர். உஅசு

பூக்குங் காலைப் புதுமலர் தூவியே,
காக்கும் அன்புக் கடவுளை யேத்தியே
வாக்கு மிக்க வரமுனி வாழ்த்துகள்
ஊக்க வுள்ள முவந்தனன் கோமகன்.

அரசன் புதல்வனான சுத்தன், குறித்த நன்னாளில் காலை பூத்ததும், நாண்மலர் கொய்து, தன்னைக் காக்கும் அன்புக் கடவுளான சுத்த சக்திக்கு அர்ச்சனை செய்து வணங்கினான். பிறகு, வேதவாக்கு மிக்க வரம்பெற்ற முனிவன் "க்ஷேமமாகச் சென்று உலகப் புகழ் பெற்றுவா!" என்று வாழ்த்தினான். அதனால் அவன் உள்ளம் உற்சாக மெய்தி மகிழ்ந்தான். உஅஎ

யானை,தேர், குதிரை யணி சேரவே,
சேனை வீரர் 'செயசெய' வென்னவே,
வானை யெட்டக் கொடிகள் வளரவே,
மோனை முத்தமிழ் போன்முர சார்த்தவே.

இளவரசனை வழியனுப்ப யானைப்படைகளும், குதிரைப் படைகளும், தேர்ப்படைகளும், காலாட்படைகளும் அணி யணியாகக் கூடி ஒழுங்காக நின்றன. அவற்றிலிருந்த போர் வீரர்கள் "ஜெய ஜெய! இளவரசர் நீடு வாழ்க!" என்று ஆர்த்தனர். சித்தி மரபிற்குரிய சூரியக் கொடிகள் ஏந்தி மக்கள் கூடினர். அக்கொடிகள் வானுயர நீண்டு பரந்து வளர்ந்தன. அக்கொடிகளின் புகழை மோனை முத்தமிழால் போற்றுவது போல முரசுகள் ஆர்த்தன. உஅஅ

படையின் மின்னலும் பார்விழி மின்னலும்,
உடையின் மின்னலும், ஊர்தியின் மின்னலும்,
குடைசெய் வானங் குலாவிடு மின்னென
நடையின் மின்னலு நல்லணி மின்னலே.

அந்தப் பெரிய கூட்டத்தில் பல மின்னல்கள் பாய்கின்றன. படைகள் வாளும் ஈட்டியும் துப்பாக்கியும் பிடித்துப் பளிச்சிடுகின்றன. அரசிளங் கோமகனைக் கோடி விழிகள் மின்வீச்செனப் பார்த்துப் பார்த்துக் களிக்கின்றன. ஆண்களும் பெண்களும் அணிந்த ஆடையாபரணங்கள் பளிச்சிடுகின்றன. அவர்கள் ஏறிவரும் வாகனங்கள் அலங்காரம் சொக்கிப் பொலிகின்றன. பிரம்மாண்டமான குடை விரித்தது போன்ற மேகவானத்தில் பளிச்சிடும் மின்னோட்டங்கள்போல அங்கிருப்பவர் நடை குலுங்கியது. எல்லாம் கண்ணுக்கினிய அழகுபெற்ற அணிகளால் பொலியும் மின்னல்களே. உஅகூ

முக மலர்களு முல்லை விரிந்தென
நகை மலர்களு, நற்கரந் தூவுபல்
வகை மலர்களும் வானத்து நாண்மலர்,
தொகை மிகுத்திங்கு தோன்றுவ போன்றவே.

அங்கே கூடிய அன்பர்களின் முகம் அரசிளங் கோமகனைக் கண்டு மலர்ந்து, தாமரைக்காடாக விளங்குகின்றன. அவர் மகிழும் புன்னகை விண்ட முல்லைகளைப்போல விளங்குகின்றன. அவர்கள் திருக்கைகளால் ஆசிகூறித் தூவும் பலவகை மலர்கள் மழைபோலப் பெய்கின்றன. இவையெல்லாம் ஆகாயத்தில் மின்னும் நட்சத்திர மலர்கள் தொகையில் அதிகரித்து உலகில் வந்து மின்னுவதைப் போன்றிருந்தன. உகூ௦

மார் நெருங்கின; மார்பணி நன்மணி
தார் நெருங்கின; தண்மலர்க் கூந்தலாங்
கார் நெருங்கின காலு நெருங்கின;
ஊர் நெருங்கின ஒருட லாகவே.

சுத்தன் புறப்படுவதைப் பார்க்க அந்த ஊர் முழுதும் ஓர் உடல்போலக் கூடி நெருங்கியது. அந்தக் கூட்டத்தில் ஒருவர் மார்புடன் மற்றவர் மார்பு நெருங்கிப் புல்லியது. அந்த மார்பில் அணிந்த நல்ல மணிமாலைகள் நெருங்கிப் பின்னின குளிர்ந்த மலர்கள் முடித்த பெண்களின் கார்நிறக் கூந்தல்கள் நெருங்கிக் கூடின. கால்களும் விரைவாக நெருங்கின. ௨௧௧

பாண்டி னோசையும், பாவலர் பாடும்பல்
லாண்டி னோசையும், ஆசிக ளோசையும்,
தூண்டு மாமதி தோன்றக் கடல்மிசை
நீண்ட வோசையைப் போல நிகழ்ந்தவே.

பூரண சந்திரனிடம் அனைத்தையும் மகிழ்வுறத் தூண்டும் ஒரு சக்தியுள்ளது. அது வந்ததும் அகண்ட சமுத்திரம் பொங்கிப் பூரித்து அலைக்கரங்களை வீசி ஆனந்தகானம் செய்கிறது. அதுபோலவே, சுத்தன் தேர் ஏற வந்ததும், பாண்டு வாத்தியங்கள் முழங்கின. அருட்பாவலர் பல்லாண்டு பாடினர். மேளதாளங்களுடன் ஜனங்கள் ஆசிப்பாட்டு முழக்கினர். உயிர்க் கடலோசை பொங்கியது. ௨௧௨

கிரணம் வீசிக் கிளந்தெழும் சூரியன்
அருணத் தேரில் அமர்ந்தது போலவே,
திருவணிந்த பொற் றேர்மிசை ஏறியே
கருணை மாமுகங் காட்டினன் கண்ணனே.

நாட்டிற்கே கண்ணனைய சுத்தன் அழகுந் திருவும் அணிந்து பொலியும் பொற்றேரில் அமர்ந்து, தனது கருணை பொங்கும் புண்ணிய முகத்தை அனைவரும் காணச் சுற்றிலும் பார்த்தான். அத்தோற்றம் பால சூரியன் கதிர்களை வீசி மகிழ்வுடன் எழுந்து அருணோதய மென்னும் தேரில் ஏறி விளங்குவதுபோல் இருந்தது. ௨௧௩

விழிகண் டார்அருள் விண்ணொளி கண்டனர் ;
பொழிமு றுவலைக் கண்டவர் பொன்கண்டார் ;
செழிமு கத்தைக்கண் டார்திரு வேகண்டார்
அழகை முற்றும் அளந்தவர் யாவரே !

அந்தக் கூட்டத்தில் இருந்தோர் ஒவ்வொரு கண்ணும் சுத்தனையே நோக்கிற்று. ஒவ்வொருவரும் அவன் விழிகளையே பார்த்து நின்றனர்; "இவை அருளாகிய சுவர்க்க தீபங்களே !" என்று வியந்தனர். அவனது வாயினின்றும் பொழியும் புன்னகை யமுதைப் பருகினவர் பொன்விளங்கும் மங்களானந்தம் பெற்றனர். கருணை செழித்த முகத்தைக் கண்டவர் சகல ஐசுவரிய தேவினையயே நேரிற் கண்டதுபோலக் களித்தார். அவனது அழகைக் கண்ணால் யாரும் முற்றிலும் அளக்க முடியவில்லை. ௨௧௪

பொதுவி ழியினாற் புண்ணியர் எங்குமே
அதுவென் றேயுணர் ஆதிப் பிரமத்தை,
மதவி ழியர்ம திப்பது போலவே,
‘ இதுவிது வழ ’ கென்றனர் மாந்தரே.

பொதுவாக, அனைத்தையும் சமமாகப் பார்க்கும் சுத்தான்ம விழிபெற்ற புண்ணியர்கள், ஆதிப் பிரமமாகிய பரம்பொருளை எங்கும், எம்மதத்திலும், எப்புனித நூலிலும், எந்த உடலிலும், அணுவிலும் அதுவே என்று காண்பர். அவர்களுக்குப் பேதபுத்தி யிராது. ‘எனதே மதம்’ என்று ஒரு சார்பான சமய விழிகளால் காண்பவர், பரம்பொருளின் ஏகதேசமான குணத்தையே பற்றி ‘இதுவே கடவுள்’ என்பர். உதாரணமாக, பரம்பொருளின் காக்குந் தன்மையே பற்றி அதைக் கொண்ட கடவுளே முதல்வன் என்பர் சிலர்; நீக்கும் கடவுள் அல்லன் என்பர். அதுபோலவே சர்வ சௌந்தர்யனான சுத்தனின் தனித்தனி அங்கங்களையே வைத்த கண் எடுக்காமல் பார்த்துத் தாம் பார்த்த அங்கமே அழகியது என்றனர் மக்கள். ௨௧௫

கந்தன், கோகுலக் கண்ணன், சுரர்தொழும்
இந்திரன், சயந்தன், விஜயன், ராமச்
சந்திரன் இவ னேயெனச் சாற்றினர்
அந்தம் ஒன்று ; விழிகள் அநேகமே.

உபமானம் வேறு அறியாமல் அழகுத் திருவே ஆணுருப் பூண்டதுபோல், வீர வெற்றி விளங்கும் சுத்தனைக் கண்டவர், இவன் சூரபத்மனை வென்ற கந்தனே, கோகுலத்தில் வந்து கோபியருடன் ஆடிய கண்ணனே, தேவர் வணங்கும் இந்திரனே, அவன் மகன் ஜயந்தனே, தவம்புரிந்து பாசுபதாஸ்திரம் பெற்ற விஜயனே, இலங்கை யரக்கனைக் கொன்ற இராமச்சந்திரனே! இவனே உலகில் அசுர பலத்தை வீழ்த்தி ஆத்மபலத்தை நாட்டுவான் என்றனர். அழகு (அந்தம்) ஒன்றுதான் ; அதைப் பலவகை மாந்தர் தத்தம் விழிகளாற் பலவிதமாகக் காண்பர். ௨௧௬

உடை நெகிழ்தலும், உள்ளம் வெதும்பலும்,
கடையர் காமக் குறிகளும் இன்றியே,
நடை யுயர்சுத்த ஞாயிறைக் கண்டவர்
மடமை நீங்கி மதிப்பொலி வெய்தினர்.

பழங்கவிகள் இப்படிப்பட்ட அழகனைக் கண்ட மின்னர் காம விகாரத்தால் தளர்ந்து மெலிந்து சோர்ந்து ஆடை நெகிழ்ந்து, மனம் காமத்தீயால் எரிந்து வெந்து நொந்து போனதாக வர்ணிப்பர். அவைபோன்ற கடையருக்குரிய காம விகாரங்கள் இங்கில்லை. ஒழுக்கத்தில் உயர்ந்த சுத்தனுகிய சூரியனைக் கண்டதும், அந்நகர் மாதர் மடவிருள் நீங்கிப் பேரின்பமாக்கும் மதிப்பொலி வெய்தினர். இருள் நீங்கி அவர் மனம் ஒளி பெற்றது. ௨௯௭

ஆசை மாமல ராமெனக் கண்டவர்
பூசை மாமல ரேபொலி யக்கண்டார்.
வேசை நெஞ்சும் விலைமயக் கற்றதத்
தேசு லாவிடுந் தெய்விகக் காட்சியால்.

"இஃது எனது ஆசைக்கேற்ற காதல் மலர்" என்று சுத்தனைக் காமப்பார்வை பார்த்தவரும் "சீ, அது பிசகு; இது பூஜைக்கேற்ற புண்ணிய மலர்" என்று பொலியக் கண்டனர். அவனைப் பார்த்த வேசையருக்குக் கூட விலை வாழ்வு வாழும் காமமயக்கம் ஒழிந்து, கற்புடன் வாழவேண்டும் என்று தோன்றியது. தேஜஸ் பொலியும் அவனது தெய்வக் காட்சி அப்படிப்பட்டது. ௨௯௮

'சென்ற தேசங்க ளில்வர வேற்றிடும்
வென்றி வேந்தர் புதல்வியர் யாரிவர்
மன்றல் மாலை யணிந்து மகிழ்வரோ!'
என்று மட்டும் இயம்பினர் மாதரே.

ஆனல் மாதர் ஊகம் நிற்குமா? எத்தனையோ தேசங்களுக்கு இந்தப் பேரழகன் செல்வான். எத்தனையோ வெற்றி மன்னர் இவனை வரவேற்பர். அவர் செல்வியர் இவனது அழகில் மயங்கிக் காதலிப்பர். அவருள் "இவனது மணமாலையை எவள் பெற்று மகிழ்வாளோ அவளே பாக்கியவதி!" என்று மட்டும் பெண்கள் பேசிக் கொண்டனர். ௨௯௯

நோக்கும் ஒற்றர்முன் னேக்கிட, நுண்ணறி
வாக்கு வல்ல புலவர் உடன்வரக்
காக்கும் வீரக் கனற்படை சூழத்தேர்
ஊக்க மாகமுன் ஊர்ந்தது காலம்போல்.

அரசிளங்குமரன் வருவதால் கலியன்போன்ற சதியாளர் தந்திரமாகத் தீங்கு செய்வர். அவர்களைக் கண்டு தண்டிக்க ஒற்றர் கவனமாக முன்சென்று சுற்றிப் பார்த்தனர். ஒற்றர் 'வழி அபாயமில்லை' என்றலுமே பயணம் மேற் செல்லும். அந்தந்த நாடுகளில் உள்ள அதிசயங்களைக் காட்டவும், புதிய அறிவைப் புகட்டவும், தனது நாட்டுப் பெருமையை எடுத்துச் சொல்லவும், அந்நாட்டிலுள்ள புலவருடன் சரிசமனகப் பேசவும் வல்ல நுண்ணறிவாளரான வாக்குவன்மை மிக்க புலவர் சுத்தனுடன் வந்தனர். தோட்டத்திற்கு வேலியும் காவலும் போலே அரசனுக்கும் வீரப்படை வேண்டும். எதிர்க்கும் பகைவரை நொறுக்கி யெறியும் வீரக்கனல் எறிய சூரப்படையொன்று இளவரசனைச் சுற்றிக் காவல் காத்தது. அரசனுடன் செல்லும் உணவு, ஆடை, கஜானு, பரிவாரம் எல்லாம் அப்படையின் பாதுகாப்பில் சென்றன. இவ்வளவு பரிவாரங்களுடன் சுத்தன் ஏறிய தேர் ஊக்கமாக முன்சென்றது. அதன் வேகம் காலத்தின் வேகம் போன்றிருந்தது. ௩௦௦

புதனும் பூரணச் சந்திர னும்என
மதியமைச் சுடன் மன்மக னுஞ்செலும்
பதிகளைப் பலர் பேசினர்; நாமுமக்
கதியைப் பின்பற்றிக் காண்பன காண்பமால்!

அறிவுக் கோளமான புதனுடன் உலகிற்கு இன்பநிலா பொழியும் பூரணச் சந்திரன்போல் மதிமிக்க அமைச்சனுடன் தெய்வப் பொலிவுள்ள சுத்தன் சென்ருன். ஜனங்கள் கண் கொட்டாமல் அவர்களையே பார்த்தனர். இவர்கள் இங்கிருந்து இன்னின்ன திருப்பதிகளுக்கு, இன்னின்ன நாடுகளுக்குச் செல்வார்கள் என்று பலர் பேசிக்கொண்டனர். ஆனல், நாம் பேச்சுடன் நிற்கக் கூடாது. அரசிளங் குமரன் போன வழியைப் பின்பற்றி, அவன் செல்லும் பதிகளில் காணவேண்டிய அதிசயங்களை யெல்லாம் கண்டு வருவோம். ௩௦௧

௧௪. புறப்பாட்டுப் படலம் முற்றிற்று.

கடற்கரையில் பிடித்த குழந்தை

(அழ. வள்ளியப்பன்)

அப்பொழுதுதான் மணி 'டாண் டாண்' என்று நான்கு அடித்தது. நானும் கோபாலும் வீட்டுக்குள் நுழைந்தோம்.

வீட்டின் மூலையிலே கன்னத்தில் கை வைத்த வண்ணம் ஏதோ ஆழ்ந்த சிந்தனையில் இருந்தான் விஜயன்; நாங்கள் வந்ததைக்கூடக் கவனிக்கவில்லை.

"என்ன விஜயா, ரொம்ப நஷ்டமோ? எந்தக் கப்பல் மூழ்கிப் போய்விட்டது?" என்று நான் கிண்டலாகக் கேட்டேன்.

"உனக்கு எப்பொழுதும் இந்த விளையாட்டுத்தான். சமய சந்தர்ப்பம் கொஞ்சங்கூடத் தெரிவதே யில்லை" என்று விஜயன் மிகுந்த கோபத்துடன் கூறினான்.

இப்படியாக, ஆத்திரமும் கோபமும் கலந்தவாறு அவன் பேசியதைக் கேட்ட எனக்குக் காரணம் என்ன வென்று தெரியவில்லை. வெகுநேரம் இதைப் பற்றி யோசித்தேன். கடைசியாக, கோபாலும் நானும் பலமாக ஆராய்ச்சி செய்தபிறகு தான், காரணம் தெரியவந்தது.

விஜயனுடைய கவலைக்குக் காரணம் ஒரு பெண்தான். அவள் பெயர் சுந்தரி. பெயருக்கு ஏற்ற அழகுடையவள். ஆனால், தன்னைப்போன்ற அழகி இந்த உலகிலேயே இல்லை யென்ற திடமான முடிவுக்கு வந்தவள். அவள் மேல் நமது விஜயன் காதல் கொண்டான். ஆனால், பாவம்! இவனைக் காணும் போதெல்லாம் அவள் முகத்தைத் திருப்பிக் கொள்கிறாள். இவன் இரகசியமாக எழுதி அனுப்பிய கடிதங்கள் எல்லாம் போன படியே திரும்பி வந்துவிட்டன. அவன் பெயர் விஜயனா யிருந்தாலும் அந்தப் பெண் விஷயத்தில் அபஜயனாகத்தா னிருந்தான். இதுவே விஜயனது கவலைக்குக் காரணம்; சந்தேகமே யில்லை.

இது கவலைப்படத் தக்கதோர் பெரிய காரியம்தான். "நான்கூட ஒருத்தியைக் காதலித்ததுண்டு. ஆனால், அவள் என்னை ஒரு பொருளாகவே மதிக்கவில்லை. அந்தக் காதலைப்பற்றி இன்று நினைத்தாலும் கஷ்டமா யிருக்கிறது.

"காதல் காதல் காதல்
—காதல் போயிற் காதல் போயிற்
சாதல் சாதல் சாதல்"

என்ற பாட்டடிகள் என் காதில் சதா ஒலித்துக்கொண்டே யிருக்கின்றன. 'தற்கொலை செய்து கொள்வது மிக மிகப் பாவம்' என்பதை நன்றாக அறிந்த நான், காதலுக்காகச் சாகலாமா? சரி. அதெல்லாம் போகிறது. அதைப் பற்றி நான் விரிவாய்ச் சொல்ல ஆரம்பித்தால், எனக்கு மேலும் மேலும் வருத்தம் ஏற்படுவதோடு, உங்களுக்கும் கண்ணீர் வந்தாலும் வந்துவிடும். ஆகையால் அதை நிறுத்தி விடுகிறேன். விஜயனைப் பற்றிக் கவனிப்போம்.

விஜயனுடைய கவலையைத் தீர்ப்பதற்கு வழியென்ன என்று நான் பலவாறு யோசித்தேன். "விஜயா, நமக்குத் தான் பரீக்ஷை லீவு இன்னும் இரண்டு

மாதம் இருக்கிறதே; ஊருக்குப் போய் வரலாமே. ஊருக்குப் போனால் சந்தோஷமாகக் காலத்தைக் கழிக்கலாம்; மன அமைதியும் ஏற்படும்" என்று விஜயனிடம் கூறினேன்.

அதற்குள் கோபாலும் "ஆமாம். அது ரொம்ப நல்லதுதான். ஊருக்குப் போனால் அமைதி ஏற்படுவது மாத்திரம் இல்லை; அதிர்ஷ்டமும் அடித்தாலும் அடிக்கும். எனக்குத் தெரிந்த ஒருவர் இப்படித்தான் ஒருத்தியைக் காதலித்தார். ஆனால், அவள் அவரை நிராகரித்து விட்டாள். அந்த மனிதர், மனம் உடைந்து கடைசியாக வேறொரு ஊருக்குப் போய்விட்டார். கொஞ்ச நாளில், 'உடனே புறப்பட்டு வா' என்று ஒரு தந்தி அந்த மனிதருக்கு வந்தது. யாரிடமிருந்து? அவர் முதலில் காதலித்த பெண்ணிடமிருந்துதான். அதுபோலவே நாமும் ஊருக்குப் போய்விட்டால், ஒரு வேளை சுந்தரியிடமிருந்து தந்தி வந்தாலும் வரும். அப்பொழுது விஜயனுக்கு அதிர்ஷ்டம்தானே?" என்று அனுபவங் கலந்த உதாரணத்தோடு கூறினான்.

ஆனாலும் விஜயனுடைய மனம் தேறவில்லை. ஊருக்கு வர மறுத்தான். அப்படியே இருந்த இடத்திலேயே படுக்கையை விரித்துக்கொண்டு படுத்துவிட்டான். சாப்பாடு செல்லவில்லை. நாங்கள் எவ்வளவோ ஆனமட்டும் சொல்லிப் பார்த்தும், பிரயோசன மில்லை.

இம்மாதிரி ஒன்றிரண்டு நாட்கள் சென்றன. ஒருநாள் விஜயன் என்னிடம், "இன்றுகூட நான் அவளைக் கண்டேன். ஆனால்..........." என்று இழுத்தாற்போல் கூறினான்.

நான்: என்ன! பார்த்தாயா! சுந்தரியையா!

விஜ: ஆமாம். எப்பொழுதும்போலத் தான் முகத்தைச் சுளித்துக்கொண்டு போய்விட்டாள்.

நான்: சரி, போனால் போகிறது. அதைப் பற்றிக் கவலைப்படாதே. எப்படியாவது அவள் உன்னைக் காதலிக்கும்படி செய்துவிடுகிறேன்.

விஜ: (ஆவலுடன்) என்ன! உண்மையாகவா? சரி. அதற்கு நீ என்ன பண்ணப் போகிறாய்?

நான்: (சிறிதுநேரம் யோசித்துவிட்டு) அவளுக்கு ஏதாவது ஆபத்துச் சமயத்திலே நீ உதவி செய்ய வேண்டும். தண்ணியிலே அவள் மூழ்கி விடட்டுமே. அப்போது அவளை நீ போய்த் தூக்கிவிட்டால் போகிறது.

விஜ: (பரிதாபத்துடன்) ஐயோ! எனக்கு நீஞ்சத் தெரியாதே. என்ன செய்வது?

நான்: நீரிலிருந்து தூக்குவது என்றால், அது ஒரு வழிதானா? இது மாதிரி எவ்வளவோ வழிகளில் உதவி செய்யலா மல்லவா; சும்மா 'காதல், காதல்' என்று ஜபித்தால், காதல் ஏற்பட்டு விடுமா? ஏதாவது உதவி செய்தால் தானே அவள் உன்னைக் காதலிப்பாள்?

ஆனால், என் யோசனையைக் கேட்டவுடன், இது அசாத்தியமான காரியம் என்று அவனுக்குப் பட்டதுபோ லிருக்கிறது. மறுபடியும், சோபாவில் போய்ச் சாய்ந்துகொண்டு கண்ணை மூடியவாறே இருந்தான். அவன் முகத்தைப் பார்க்கும்பொழு தெல்லாம் எனக்கு மிகுந்த வருத்தம் ஏற்பட்டது.

'சரி; சிறிது நேரம் பீச்சுக்காவது போய்வரலாம்' என்று எண்ணிப் புறப்பட்டேன். வழியிலெல்லாம் விஜய

னுக்கு எந்த வழியில் உதவிசெய்யலாம் என்ற யோசனைதான். சமுத்திரக் கரை ஓரமாக நடந்துசென்றுகொண்டே இருந்தேன். அப்பொழுது, ஆ! ஒரு அழகான உருவம் என் கண்ணில் பட்டது. அது யார் தெரியுமா? அதுதான் சாக்ஷாத் சுந்தரி. நான் இதற்குமுன் ஒருதடவைதான் அவளை நேரே பார்த்திருக்கிறேன். என்றாலும், விஜயனுடைய புத்தகத்தில் அவளுடைய உருவப்படத்தை அடிக்கடி கண்டிருக்கிறேன் அல்லவா? ஆகையால், சந்தேக மில்லாமல் இவள் அவள்தான் என்ற முடிவுக்கு வந்தேன். சிறிது தூரத்தில் சென்று நின்றுகொண்டு, அவள் என்ன செய்கிறாள் என்பதை உற்றுக் கவனித்துக் கொண்டேயிருந்தேன்.

அவளுக்குப் பக்கத்திலே ஒரு சிறு குழந்தை மணல் வீடு கட்டி விளையாடிக் கொண்டிருந்தது. சுந்தரி அந்தப் பிள்ளைக்கு வீடுகட்ட உதவி செய்து கொண்டிருந்தாள். மிட்டாய் வியாபாரியைக் கண்டவுடன் அந்தக் குழந்தை "அக்கா, அக்கா" என்று சுந்தரியைப் பார்த்துக் கூப்பிட்டு, மிட்டாய்க்காரனைக் காட்டியது. சுந்தரியும் மிட்டாய் வாங்கி அந்தக் குழந்தைக்குக் கொடுத்தாள். குழந்தை தின்று கொண்டேயிருந்தது.

இந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டே நீண்ட நேரம் அங்கே நின்றேன். இருட்டும் சமயமும் வந்துவிட்டது. அப்பொழுது சுந்தரி என்னவோ எழுந்து, சற்றுத் தூரத்தில் நடந்து கொண்டிருந்தாள். ஆனால், குழந்தை மட்டும் தனியாக அங்கே நின்றுகொண்டு மண்ணைக் கிளறிக்கொண்டேயிருந்தது. இதைப் பார்த்தவுடன் என் மனதில் 'சடா'ரென ஒரு யுக்தி தோன்றியது. உடனே விரைவாகக் குழந்தையிடம் சென்றேன். சுற்று முற்றும் பார்த்தேன். ஒருவரும் கவனிக்கவில்லை. குழந்தையைத் தூக்கிக் கொண்டேன். வீட்டுக்குக் கம்பி நீட்டினேன். விரைவாக மணலில் ஓடிவந்ததால் பூட்ஸுக்கும் காலுக்கும் இடையில் அகப்பட்ட மண்ணால் தோல் 'வழு'வுண்டு போய்விட்டது. ரோடு வந்ததும் பூட்ஸைக் கையில் எடுத்துக் கொண்டேன். சிறிது தூரம் தள்ளி, வழியிலே அகப்பட்ட ஒரு நியூஸ் பேப்பரில் பூட்ஸைச் சுற்றிக் கொண்டு அதை ஒரு கையில் தூக்கிக் கொண்டேன். அப்பொழுதுதான் சமாசாரப் பத்திரிகைகளின் பிரயோசனம் தெரிய வந்தது.

வழியிலெல்லாம் எனக்குச் சந்தோஷம் தாங்க முடியவில்லை. 'நாம் இப்பொழுது அவளது தங்கையைக் கொண்டுவந்து விட்டோம். சுந்தரி ஊர் எங்கும் இதைத் தேடுவாள்; அகப்படாமல் கஷ்டப்படுவாள்; தவிப்பாள்; பரிதவிப்பாள். அப்பொழுது நமது விஜயன் குழந்தையைக் கொண்டு போய்க் கொடுத்து, தான் கண்டு பிடித்து விட்டதாகக் கதை கூறினால், அதை அவள் நம்பி விடுவாள். அதோடு காதலும் கொண்டு விடுவாள்" என்று திடமாக எண்ணி மனப்பால் குடித்துக்கொண்டே வீடு வந்து சேர்ந்தேன்.

வீட்டில் இன்னும் விஜயன் சோபாவில் படுத்த வண்ணமாகவே இருந்தான். குழந்தை வீட்டுக்குள் வந்தவுடன் மிரள மிரள விழித்து அழ ஆரம்பித்து விட்டது. அது போட்ட சத்தத்தில் விஜயன் எழுந்து விட்டான். குழந்தையோடு நானிருக்கும் காட்சியைக் கண்டதும், அவனுக்குக் கோபம் வந்துவிட்டது.

"உனக்கு ஏதாவது மூளையிருக்கிறதா என்ன? இது யாருடைய குழந்தை? 'வாள், வாள்' என்று கத்துகிறதே! கொண்டுபோய் அதனுடைய அப்பா, அம்மாகிட்டே விட்டுவிட்டு வா. பிறருடைய கஷ்டம் கொஞ்சங்கூட உனக்குத் தெரியவில்லையே" என்று என் மேல் சீறி விழுந்தான்.

நான் உடனே "என்னமோ அப்பா, எல்லாம் உனக்காகத்தான். (குழந்தையைக் காட்டி) இதோ பார்; உனக்குச் சுந்தரி வந்துவிட்டாள்" என்றேன்.

விஜ : (தலையில் அடித்துக்கொண்டு) கடவுள் உனக்கென்ன தலையில் களிமண்ணை வைத்துப் படைத்து விட்டானோ? சிறு குழந்தையைப் பார்த்து என்னுடைய காதலி என்கிறாயே. பைத்தியம் பிடித்து விட்டதா என்ன?

நான் : இந்தக் குழந்தையைச் சொல்லலேடா. இந்தக் குழந்தையாலே உனக்குச் சுந்தரி வரப் போகிறாள் என்பதைத்தான் சொன்னேன்.

விஜ : என்ன! என்ன!! சுந்தரி வரப்போகிறாளா! அப்படின்னா அது என்ன விஷயம், சொல்லு. ஏதோ நீ விளையாடுகிறாயாக்கு மென்றல்லவா நினைத்தேன்! என்ன? புரியும்படியாகச் சொல்லு.

நான் : (முகத்தைத் திருப்பிக் கொண்டு) வேண்டாம், அப்பா; வேண்டாம். எனக்கு மூளை சரியில்லை. பைத்தியம் பிடிச்சிருக்கு ...

விஜ : (என் முகவாய்க்கட்டையை பிடித்துத் திருப்பி நேரே வைத்துக் கொண்டு) இதானே வந்துட்டே! இனிமேல் நான் அப்படியொண்ணும் சொல்லலே. விஷயத்தைச் சொல்ல மாட்டாயா?

இவ்வாறு அவன் கெஞ்சிக் கேட்டு, என்னைத் திட்டின திட்டையெல்லாம் வாபஸ் வாங்கிக் கொண்ட பிறகு, நடந்த சங்கதியை ஆதியோடந்தமாகச் சொன்னேன். இதைக் கேட்டதும் விஜயனுக்கு ஒரே ஆனந்தம். ஆடினான்; ஓடினான் பக்கத்துக் கிளப்புக்கு. இரண்டு மூன்று 'ஸ்வீட்' வாங்கி வந்து குழந்தைக்குக் கொடுத்து, அழுகையை நிறுத்தினான்.

"சரி; நான் போய்க் குழந்தையைக் கொடுத்துவிட்டு வருகிறேன்" என்று உடனேயே புறப்பட்டான்.

"அட அசடே! இப்பொழுதா புறப்படுவது? நன்றாக இருட்டி விட்டது. நாளைத்தான் போக வேண்டும்" என்று கூறினேன்.

"ஆமாம். நீ சொல்வது சரிதான். இப்பொழுது போனால், என் முகங்கூட அவளுக்குச் சரியாகத் தெரியாது. பகலில் பார்த்தால்தானே பிறகும் என்னை அவள் மறக்காமல் காதலிக்க ஏதுவாயிருக்கும்" என்று ஆமோதித்தான்.

இரவு பூராவும் ஆனந்தக் கடலுள் மூழ்கி இருந்தோம். எனக்கே இரவு சரியாய்த் தூக்கம் வரவில்லை. அப்படியென்றால் விஜயனுக்கு எப்படியிருந்திருக்கும்! எப்பொழுதுமே வழக்கமாக எட்டு மணிக்கு (கடிகாரம் ஸ்லோவாகப் போனால்) எழுந்திருக்கும் விஜயன் அன்று காலை நாலு மணிக்கே எழுந்துவிட்டான்.

முக க்ஷவரம் செய்து கொண்டு, குளித்து, ஸ்னோ முதலிய வாசனைச் சாமான்களெல்லாம் பூசிக்கொண்டு, ஆடம்பரமாகப் புறப்படத் தயாரானான்.

எட்டு மணி சுமாருக்குப் போகலாமென்று நான் கட்டாயப்படுத்தி, தாமதிக்க வைத்தேன். குழந்தையையும் நன்றாக அலங்கரித்து எல்லா ஏற்பாடுகளும் செய்துவிட்டோம். புறப்படும் சமயம் வந்தது. "விஜயா! போகும்பொழுது கடையில் ஒரு பாக்கெட் மிட்டாய் வாங்கிக் குழந்தை கையில் கொடுத்து அழைத்து போ. அப்பொழுதுதான் உண்மையான காதல் உன்மேல் ஏற்படும் சுந்தரிக்கு" என்று புத்திமதியும் கூறி அனுப்பி வைத்தேன்.

வீடு தாண்டி அவன் சென்றதும் நான் சோபாவில் சாய்ந்துகொண்டு, "நம்ம மூளையே மூளை. எத்தனை பேர் விஜயனுக்குச் சிநேகிதர்கள் இருக்கிறார்கள்; ஒருவனுக்காவது இந்த மூளை எட்டிற்றா? எல்லாம் வெறும் களிமண்கள் தான்" என்றெல்லாம் எண்ணி, எனது

சாமர்த்தியத்தை எனக்குள் நானே புகழ்ந்து கொண்டிருந்தேன்.

சிறிது நேரத்தில் கதவு மீண்டும் திறந்தது. "சரி. வெற்றியுடன் விஜயன் திரும்பி விட்டான்" என எண்ணிக் கொண்டேன். ஆனல் குழந்தை இன்னும் அவன் கையிலேயே இருந்ததையும், செல்லும்போது செந்தாமரை போல் இருந்த விஜயனின் முகம் இப்பொழுது வெண்டாமரையாக வெளுத்திருந்ததையும் கண்டு நான் திடுக்கிட்டு விட்டேன்.

நான் : (திகைப்புடன்) என்ன? சுந்தரியை நீ பார்க்க வில்லையா?

விஜ : (கோபத்துடன்) ஆமாம்; எல்லாம் பார்த்தாச்சு.

நான் : அப்புறம்?

விஜ : அப்புறம் என்ன, அப்புறம்? மடப்புறம்தான். இந்தப் பாழாப்போன குழந்தை அவளுக்குச் சொந்தமே யில்லையாம். உன் பேச்சைக் கேட்டு என் மானம் போச்சு. என்ன பெரிய ஹம்பக்கா யிருக்கிறதென்று அவள் என்னிடம் சண்டைக்கு வந்துவிட்டாள்.

இவ்வாறு சொல்லிக்கொண்டே குழந்தையை ஒற்றைக் கையால் பிடித்துக் கீழே இறக்கி விட்டான்.

எனக்கு ஒன்றுமே புரியவில்லை. சிறிது நேரம் சென்று, "விஜயா! பின்னே இந்தக் குழந்தை யாருடையது? விளக்கமாகச் சொல்ல மாட்டாயா?" என்றேன்.

"சொல்ல என்ன இருக்கிறது! ஏதோ பீச்சிலே கண்ட யாரோ குழந்தையோடு அவள் விளையாடிக் கொண்டிருந்திருக்கிறாள். அதை நீ அவள் தங்கையென்று பிடித்துக்கொண்டு வந்துவிட்டாய். என்னையும் சுந்தரியின் அபாரக் கோபத்துக்கு ஆளாக்கி விட்டாய். ஐயோ! என் சுந்தரியை நான் இனி என்றேனும் அடைவேனே?" என்று அவன் பிலாக்கணத்துக்குத் தொடங்கி விட்டான்.

"இதென்னடா இழவு! கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டாற் போலாச்சு. இந்த வியாபாரத்தில் நாம் ஏன் மாட்டிக் கொண்டோம்!" என்று எனக்குக் கலக்க மேற்பட்டது.

"அப்படியானல், இந்தக் குழந்தை... ..." என்று நான் ஆரம்பித்தேன்.

குழந்தை 'ஊம்ம்—ஊம்ம் ஊஹூம்!' என்று முகாரி ராகம் பாடத் தொடங்கிற்று.

"அது யார் குழந்தையோ? உடனே குழந்தைக்காரரைக் கண்டுபிடித்து அவர்களிடம் ஒப்புவிக்க வேண்டியது உன் கடமை. இல்லாவிட்டால், போலீஸ்காரன் வந்திடுவான். அவனுக்கு ஜவாப் சொல்லவேண்டியவன் நீதான்" என்றான் விஜயன்.

முதலில் குழந்தையின் அழுகையை நிறுத்த வேண்டுமே. என்னென்னவோ சமாதானம் சொல்லிப் பார்த்தேன்; பலிக்கவில்லை. குழந்தையின் அழுகை ஓயவில்லை. பிறகு, மிட்டாய் வாங்கி வந்து கொடுத்த பிறகு தான் குழந்தையின் அழுகை ஓய்ந்தது. ஆனல் சிறிது நேரத்தில் மிட்டாய் தீர்ந்ததும், அழுகை மீண்டும் கிளம்பிவிட்டது. திரும்பத் திரும்ப இரவும் பகலும் மிட்டாய் தின்றுகொண்டே யிருக்கிறது. ஒரு விநாடி மிட்டா யில்லாவிட்டாலும் அந்தத் துஷ்டக் குழந்தை அழுகையி லிறங்கி விடுகிறது. எழெட்டு நாளாகி விட்டது. என் பர்ஸ் காலி; கோபால் பர்ஸ் காலி; விஜயன் பர்ஸும் காலியாகி வருகிறது. ஐயோ! இந்தக் குழந்தைக் குடையவர் யாராவது வந்து இதை வாங்கிக்கொண்டு எங்கள் உபத்திரவத்தைத் தீர்க்க மாட்டீர்களா?

—

வடிவேலன்

'பூ'

அங்ஙனே பார்த்தாலும்—அதைவிட் (டு)
அப்புறம் பார்த்தாலும்
எங்ஙனே பார்த்தாலும்—முருகன்
எழிலு ருவம டி (1)

குங்கும வர்ணன டி—செந்தில்
கு—மாரப்பெ ருமான டி
தங்குமி டத்துக்கெல்லாம்—மனமும்
தாவிக்கு திக்குத டி (2)

கண்டஇ டத்திலெல்லாம்—முருகன்
காட்சியி ருக்குத டி
நின்றஇ டத்திலெல்லாம்—அவனடி
நிழலி ருக்குத டி (3)

நேரிலாப் பாக்யமெல்லாம்—அவனல்
நேர்ந்தத டியெனக் கே
வேறென்ன வே ணும டி—சகியே
வேலனி ருக்கையி லே—வடி
வேலனி ருக்கையி லே. (4)

முன்னேற்றம்

(கு. ப. ராஜகோபாலன்)

முன்னேற்றம் அல்லது அபிவிருத்தி என்ற கருத்து நவ நாகரிகம் என்பதைப்போலப் புதியது. அதாவது மனித சமூகம் ஒரு காலத்தில் காட்டுமிராண்டித்தனமாக இருந்தது. பிறகு கொஞ்சங் கொஞ்சமாக வளர்ச்சி பெற்று அறிவு கொண்டு முன்னேறி வருகிறது என்பது மேல் நாட்டு ஆராய்ச்சியாளர்களின் முடிவு. 'முன்பு நாகரிகமே கிடையாது; இப்பொழுதுதான் ஏற்பட்டு வருகிறது — விஞ்ஞான அபிவிருத்திகளாலும் இயற்கைமேல் மனிதன் கொண்ட ஆதிக்கத்தாலும்' என்று அவர்கள் தீர்மானித்து முன்னேற்றத் தத்துவம் (Idea of Progress) என்பதைப் பற்றிக்கூட விரிவாக ஆராய்ச்சி செய்கிறார்கள். பிரமாத சர்ச்சைகளும் வாதங்களும் நடக்கின்றன.

மேல் நாடுகளில் கூட உலகம் முன்னேறிக் கொண்டு வருகிறது என்ற அபிப்பிராயம் டார்வின் ஸ்தாபித்த பரிணாம வழக்கத்தின் பிறகு மூர்த்தன்யமாக ஏற்பட்டது. அதற்குமுன் கிரேக்க நாகரிக காலமும் நடுக்காலமும் பொற்காலங்கள் என்றுதான் கருதப்பட்டு வந்தன. ஜீவராசிகளிடையே உருவத்திலும் குணத்திலும் சூழ்நிலைகளாலும் இடைவிடாமல் மாறுதல் ஏற்பட்டு அவற்றால் அவை மேன்மேலும் அதற்குமுன் கண்டறியாத சக்திகளைப் பெறுகின்றன என்ற தத்துவத்தை டார்வின் விளக்கினார். உடல், உயிர், மனம் என்று படிப்படியாக, வெறும் பௌதிகப் பொருள் (ஜடம்) உணர்ச்சி கொள்ளுவதை, அவர் பரிணாமப்படி முன்னேற்றமாகக் காட்டினார். அந்த உயிர் நூல் ஆராய்ச்சியிலிருந்து சரித்திர ஆராய்ச்சி ஆரம்பமாயிற்று; அதிலும் 'அபிவிருத்தி' ஒரு நீண்ட சரமாகத் தெரிந்தது. மற்ற விஞ்ஞான ஆராய்ச்சியாளர்களும் மனித சமூகம் அறிவிலும் சக்தியிலும் மேன்மேலும் முன்னேறித்தான் போகிறது என்றார்கள்.

முன்னேற்றம் அல்லது அபிவிருத்தி என்பது என்ன? வெறும் பரிணாமம் முன்னேற்றமாகுமா? மாறுதல் அபிவிருத்தி யாகுமா? வளர்ச்சி மேன்மை யாகுமா?

சர்ச்சை செய்துபாராமலே, நாம் மேல் நாட்டு முன்னேற்றத்தை நவநாகரிகம் என்று பெயர்வைத்துக் கூப்பிடுகிறோம். ஆகையால் நாம் அதை நாகரிகத்தின் ஆரம்பம் என்று ஒப்புக் கொள்ளவில்லை. முன்பு நாகரிகம் இருந்தது; இது புது நாகரிகம் என்கிறோம். எனவே, மற்றொரு கேள்வியும் பிறக்கிறது. புது நாகரிகம் பழைய நாகரிகத்துக்கு மேற்போனதா? அதிலிருந்து பிறந்ததா? அதை நிராகரிப்பதா?

முன்னேற்றம் என்பது இடைவிடாமல் நம்மிடையே ஏற்பட்டுக் கொண்டிருக்கும் மாறுதல்களிடையே மாறுதலற்ற ஏற்பாடொன்றை நிர்ணயிப்பதும், அந்த ஏற்பாட்டில் அப்பொழுதப்பொழுது கால தேச வர்த்தமானங்களுக் கேற்றவாறு சிறு மாறுதல்கள் செய்வதும் தான். இது சமூகம் அறிந்து செய்யும் காரியமுமில்லை. அதன் கட்டுக்கும் மீறி, இயற்கையாக, தானாக நடப்பது.

தவிர்க்க முடியாமல் மாறுதல்கள் ஏற்பட்டுக் கொண்டே இருக்கின்றன. அது வளர்ச்சியின் அடையாளம். வளர்ச்சி நாமறிந்து நடக்கும் முறையல்ல. அது கண்காணாது நடைபெறும் விஷயம். அதில் நாம் முனைந்து ஓர் நிரந்தரமான அம்சத்தை நிலை நிறுத்துவதே முன்னேற்றம். எனவே, முன்னேற்றம் என்ற வேலையில் ஆக்கலும் இருக்கிறது; அழிவும் இருக்கிறது. இந்த இரண்டு சக்திகளும் இடைவிடாமல் ஒன்றில் ஒன்று பொருந்தி, சமரஸம் பெறுவது தான் உண்மையான அபிவிருத்தி.

தென்னை மரம் உயரும்போது அடி மட்டைகள் பழுத்து உலர்ந்து விழுந்து விடுகின்றன. மரம் உயர்வதற்கு அது அத்தியாவசியமான நிகழ்ச்சி. மரம் என்ற நீடிப்புக்கு மட்டை விடுவது என்ற நஷ்டம் இன்றியமையாத அங்கம். அந்த நஷ்டம் ஏற்பட்டால் தான் உயர்வு. மட்டை போய் விட்டாலும் அது வளர்ந்த இடம் மரத்தின் வளர்ச்சியில் ஒரு கணு, ஒரு மைல் கல். மட்டையின் உயிர் அந்தக் கணுவில் நிரந்தரமாகிறது.

எனவே, நீடிப்பு என்பதே சாவின் ஒரு பகுதிதான். எதுவும் முற்றிலும் அழிவதில்லை, முற்றிலும் நீடிப்பதில்லை.

முன்னேற்றம் என்பது ஒருகாலும் ஒரு குறித்த நிலை யாகாது. அது சதா சலித்துக்கொண்டேயிருக்கும் ஊக்கம். அதற்கு முடிவு கிடையாது. முடிவு வந்ததும் முன்னேற்றமும் நின்று விடும். விதை வெடித்துச் சிறு செடியாகி மரமாகிப் பூத்துக் காய்த்துப் பழமானதும் மறுபடியும் விதையாகி முடிவடைகிறது. அது போலவே சமூகம் பிறந்த இடத்துக்குத் திரும்பி வந்துவிட்டால் முன்னேற்றமின்றிச் சுற்றுப் பிரயாணம் முடிவடையும். மனித இயற்கையை எடுத்துக் கொள்வோம். அது அறிவைத் துணையாகக்கொண்டு எங்கெங்கோ சுற்றுகிறது; தன்னை மறந்து அறிவு வசமாகிறது; கடைசியில் அறிவே அதை இருந்த இடத்துக்குக் கொண்டுவந்து விட்டு விடுகிறது. ஆதி மனிதன் வளர்ச்சி பெற்று மறுபடியும் தன் மூலத்தை அடைவதுதான் முன்னேற்றம். முன்னேற்றம் என்பது ஒரு சுற்று வட்டம்.

நமது கொள்கைப் படி உலகம் பிரளயத்தில் பிறக்கிறது; பிரளயத்தில் முடிவடைகிறது. நடுவில் நடைபெறுவது பூராவும் முன்னேற்றம். அது வளர்ச்சியின் அடையாளமே தவிர, வேறொன்றுமில்லை.

ஆலமரம் வளர்ந்து பரந்து விழுதுகள் விட்டு மறுபடியும் பூமிக்குள் போய் முடிவது போன்றது மனிதனுடைய அனுபவத்தின் வளர்ச்சியும். பரமாத்மாவை விட்டுப் பிரிந்து வந்த அந்தராத்மா மறுபடியும் பரமாத்மாவையே தேடிப் போய்ச் சரணடைகிறது என்கிறார்களே அதைப் போன்றது இந்த மகா ஊக்கம். அயோத்தியிலிருந்து கிளம்பி வெளியேறிப் பதினான்கு வருஷம் வனவாஸம் செய்து திரும்பின ராம லக்ஷ்மண சீதைகளின் கதை போன்றது இந்த இயக்கம். மனிதனுடைய மகா வனவாசம் இது; அஞ்ஞாத வாசம் கூட- சில சமயங்களில்.

எந்த நோக்கில் பார்த்தாலும் இது தெளிவாகும். சரித்திரமே, முன்னேற்றமே ஒரு நீண்ட வர்க்கப் போர் என்று நிர்ணயம் செய்த மார்க்ஸ் தத்துவத்தை எடுத்துக் கொள்ளுவோம். ஆதியில் மனித சமூகம் வர்க்கமற்ற ஒரு ஜன சமுதாயமாக இருந்தது. முடிவில் பொதுவுடைமையில் வர்க்கமற்ற ஒரு சமூகம் (Classless Society) ஏற்படவேண்டும் என்பதுதான் அந்தக் கொள்கையின் கனவு. விஞ்ஞானத்தின் படியும் அந்த விளைவுதான் நிதரிசனமாகிறது; ஆதிமனிதன் உணர்ச்சியின் மூலம் புண்ய புருஷனாக இருந்தான்; முன்னேற்றத்தின் முடிவில் தோன்றும் மனிதன் தர்க்கமூலம் புண்ய புருஷனாவான்.

இடையில் நடக்கும் போர்தான் முன்னேற்றம். முன்னேற்றம் என்பது இரண்டு சக்திகளிடையே நடக்கும் இடைவிடாத போர். துக்கத்துக்கும், சுகத்துக்கும், நல்லதற்கும் கெட்டதற்கும், வேற்றுமைக்கும் ஒற்றுமைக்கும், மாறுதலுக்கும் நிரந்தரத்திற்

கும், சிறுமைக்கும் பெருமைக்கும், விடுதலைக்கும் கட்டுக்கும், உலகுக்கும் கடவுளுக்குமே—நடக்கும் ஓய்வற்ற போர். இந்தப் போரின் முடிவு என்னவோ ஆரம்பத்தில் இருந்த நிலைதான்—அதாவது இரண்டு சக்திகளுக்கும் இடையே தென்படும் மாசற்ற சமரஸம்.

எனவே நிலைமை வேடிக்கையானது ஒரு முறையில். முன்னேற்றத்தின் காரணம் சமரஸம்; முடிவும் சமரஸம். முன்பும் பிரளயம், பின்பும் பிரளயம். பிரளயம் என்ற வார்த்தைக்கே ஒன்றுபடுதல் என்றுதான் பொருள்.

முன்னேற்றம் என்பது மேகத்தின் யாத்திரை போன்றது. அது நீரில் உருப்பெறுகிறது; மறுபடியும் நீராக மாறுகிறது.

இந்த இயக்கம் எதற்காக? பால் குடித்த கன்று எதற்காக அங்குமிங்கும் ஓடித் துள்ளிக் குதித்து விளையாடுகிறது? உயிரின் சின்னம் இந்த இயக்கம். இதற்குக் காரணமு மில்லை; காரியமும் இல்லை. முன்னேற்றம் பெரும் விளையாட்டு, லீலை.

காப்டன் குக் என்பவர் ஆஸ்திரேலியாவில் போய் இறங்கியவுடனே அங்கே ஒரு விசித்திர மிருகத்தைக் கண்டார். அதன் பின் கால்கள் மிக நீளம்; முன் கால்கள் குட்டை. அது தாவித் தாவிச் சென்றது. "இதென்ன?" என்று, ஒரு சுதேசியை, காப்டன் குக் கேட்டார். அவனுக்கு இவர் பாஷை புரியவில்லை. "எனக்குத் தெரியாது" என்று பொருள்பட, "கங்—கா—ரு" என்று தன் பாஷையில் சொன்னான். 'எனக்குத் தெரியாது' என்ற அர்த்தம் கொண்ட அந்தக் 'கங்காரு' என்பதே இப்போது உலகெங்கும் அந்த விசித்திர மிருகத்தின் பெயராக வழங்கிவருகிறது.

"புத்திசாலித்தனமாய் நடந்து கொள்ள இரண்டு விதிகள் அவசியம்: ஒன்று, செயலில் இறங்குமுன் சிந்தனை; மற்றது, செயலில் இறங்கியபின் தன்னடக்கம்" — ஸெயிண்ட் இக்னேஷஸ் லொயாலா.

இனிமேல் திபேத்தின் தலாய்லாமாக்கள் பின்வரும் பட்டங்களோடு அழைக்கப் படுவார்களாம்: 'ஜாம்பெல் ங்கவாங் லோப்ஸங் யிஷி டென்ஸிங் கியாட்ஸோ' என்பதுதான் பட்டம். இதன் அர்த்தமாவது: 'மகிமைப் பிரதாப, வாக்கு வல்ல, அதிபுத்தி வாய்ந்த, அசகாய ஞான, ஒழுக்க சீல, கடல் பரந்த புகழோன்.'

கவிதைத் தீபம் — லீஹண்ட் கருத்து

மொழிபெயர்த்தவர்: **வி. ஆர். எம். செட்டியார், பி. ஏ.**

கவிதை உணர்ச்சிப் படம்; உண்மை, அழகு, சக்தி இம்மூன்று அம்சங்களும் கலந்த கற்பனைத் தீபம். உலகத்திலுள்ள எவ்வஸ்துவையும் கிரகித்து, கற்பனைச் சுடரில் உருவமைத்து உலகத்துக்கு இன்பம் பெருக்கும் தன்மையுடன் பிறந்தது கவிதை.

அது இயற்கைக்கும் பழக்கத்துக்கும் மத்தியில் உருவெடுக்கின்றது; வெளி உலக இன்பத்தையும் ஆத்மச் சுடரையும் வளர்க்கிறது; தேசத்தின் கீர்த்தியை மங்காமல் காக்கிறது. அழகும் காதலும் கவிதையின் தாய்-தந்தைகள். முடிவற்ற இன்பத்துக்கு முடிசூட்டும் மூல தீபம் கவிதையே.

அது உண்மையைக் காதலிக்கும் உணர்ச்சி; அழகையும் அதுவே அணைகிறது; கவிதை, உண்மையின் உயரம்; அழகின் ஆழம். அதன் சக்திப் பிரவாகம், கவிஞனின் உள்ளச் சிலிசிலிர்ப்பை வாசகனின் இதயத்தில் அமைதியாய்ப் பெய்கிறது.

ஒரு கவியின் உணர்ச்சிக் கடலான அகக்கண்ணில், உலகம் கலையரங்கமாகவும், வர்ணப் படத் திரளாகவும், சிற்பக் கூடமாகவும், சிந்தனைக் கோபுரமாகவும் உருவெடுக்கிறது. மனோராஜ்யம், கற்பனை என்ற இரு படிகளும் அவனது மனோதர்மச் சோலையில் பளிங்குபோல் மிளிர்கின்றன.

கவிதையில் சப்த சித்திரம் வளர்ந்து அலை மயமாகக் கவியின் உள்ளக் கடலில் ஓசை இன்பம் ஊட்டுகின்றது.

எவன் உள்ளத்தில் எண்ணமும், உணர்ச்சியும், சொல்வன்மையும், கற்பனையும், செயலும், குணமும், இடையறா வளர்ச்சியும் நிறைந்திருக்கின்றனவோ, அவனே உயர்ந்த கவியாகிறான். சில அம்சங்களில், ஓவியன், பாடகன் இருவரைப் போன்றும், ஒரு கவி மனப் படமும், சப்த ரூபமும் சிருஷ்டிக்கிறான். ஆனால், அர்த்த புஷ்டியிலும் நூதன ஆச்சரிய அமைப்பிலும், அவ்விருவரினும் கவிஞன் உயர்ந்தவனாவான். ஓவியம், சங்கீதம் இரண்டிலும், கண்ணும் காதும் உறுதியான உருவத்தை மட்டிலுமே நுகர்கின்றன.

கவிதை, ரஸாயனம்போல் வெறும் வஸ்துவை ஆராய்ச்சி செய்வதல்ல; உணர்ச்சியின் விந்தையை விமர்சனம் செய்வதே கவிதைத் தீபம். தோட்டக்காரன் ஒரு பூவை 'லிலி' என்கிறான்; ஆனால், ஸ்பென்ஸர் போன்ற கவிஞன் அந்த 'லிலி'யைத் 'தோட்டத்து ராணி' என்று அழைக்கிறான். பென் ஜான்சன் போன்ற கவி அதை 'ஜோதிப் பூ'வாகக் கருதுகிறான். கவிதை, ஒரு பூவின் ஜோதியையும் மர்மத்தையும் வெளியிடுகிறது. இதையறிய, உணர்ச்சியே முதல் குரு. இயற்கையின் உணர்ச்சிக் கால்கள் எங்கும் அமைதியாய் வியாபித்திருப்பதை, பேகன் நன்கு உணர்ந்திருக்கிறான். இயற்கையின் இதயத்தில் கவிதை மறைந்து மௌனம் சாதிக்கிறது; தூண்டினால், ஒளியும், மணமும், வர்ணமும் கவியின் அகக் கண்ணுக்குப் புலனாகின்றன.

உண்மையின் எந்த அம்சமும், கவிதையின் இரு கூர்மையான இதழ்களில் வந்து குவிகிறது; உண்மையின் உள்ளம், காவியப்படமாக மாறி அமைந்து, ஜோதி பரப்புகிறது; வாழ்க்கையின் ஒவ்வொரு சிறு அம்சமும், ஹோமர், சாஸர் இவ்விரு கவிஞரின் கையிலும் தனி அழகுப்படமாக இலகுவதைக் கண்டு நாம் அதிசயிக்காமலிருக்க முடியாது. ஷேக்ஸ்பியர் எழுதிய 'லீயர்' நாடகத்தில் பாஷையின் மின்னலில் உண்மையும் அழகும் ஒன்றையொன்று கௌவி யணைகின்றன; உண்மையே அழகு, அழகே உண்மை என்று கதறும் நிலை யேற்படுகிறது; சொல்லின் உள்ளோவியம் அவ்வளவு அழகு பெற்று அமைகிறது.

கற்பனையில் பல படிகள் உண்டு. சில சிறு படிகளே சாதாரணச்

சிறு கவிகளுக்குப் புலனாகும்; ஓர் உயர்ந்த கவிக்கு எல்லாப் படிகளும் புலப்படும்; சன்னதக்கவி கண்ணீரின் காவிய மண்டலத்தைக் கண்டு களிக்கிறான். அரியாஸ்டோ, ஹோமர், ஷேக்ஸ்பியர் ஆகியவர் கவிதையில், உலகம் ஒரு அணித்திரளாக, கற்பனைக் கருவில் அமைகிறது: உவமை யணிகள் கவிதை விருட்சத்தில் கனிகளாய் ஒளிர்கின்றன. லிசிடஸ் என்பதில் மில்டன் இயற்கையின் பல அம்சங்களை ஒன்றோடொன்று கலந்த சோகச் சிகரமாகப் பாடியிருக்கிறான். மாக்பெத், பாஸ்ட் இரண்டிலும் சோக ரசம் பொங்கி வழிகிறது; இதுவே கவிதைச் சித்திரம்.

கோலெரிட்ஜ் எழுதிய கிரிஸ்டபெல் என்பதில் உணர்ச்சியும் இசையும் கலந்து மனச்சோதியை எழுப்புகின்றன. கற்பனை உலகில் வெளித்தோற்றம், உள்ளொளி, இரண்டும் கலந்து உறவாடுகின்றன. ஷேக்ஸ்பியர், மில்டன் இவர்களுடைய காவியப் பூங்காவனத்தில், கவிதைச் சுடர் நிறைந்த அருட்படங்கள் பொலிகின்றன. ஷேக்ஸ்பியர் சிருஷ்டித்த ஏரியல், காலிபன் இரண்டு அபூர்வ ஜந்துக்களும், கற்பனைச் சிகரங்கள். ஏரியல், பூவில் உறங்கி, அந்திவேளையில் வெளவாலின்மேல் சவாரி செய்யும் கீத பூஷணமான ஜந்து. அது நம்முடைய விந்தை யுலகைத் தட்டி எழுப்புகிறது. தாந்தேயின் கற்பனை உலகமும் ஓர் ஆச்சரிய சிருஷ்டியே யாகும். விசித்திர நரக ஜந்துக்கள் பயங்கரமாய்ப் பழகுகின்றன. மண்ணுலகம், விண்ணுலகம் இரண்டும் தொடர்ந்து பின்னப்பட்டுக் கற்பனைச் சங்கிலித் தொடராக அமைகின்றன.

கவிதையை ஆத்மீகமாய் வளர்ப்பது துக்க சம்பவம். கண்ணீர், கவிதைச் சுடராக மாறி விடுகிறது. உலகத்தில் துக்கக் கடல் கர்ஜிக்கும்போது, கவிதைக் கடல் கொந்தளிக்கிறது. ஷேக்ஸ்பியரின் சோக நாடகங்களே கீத கோபுரமாக ஓங்கி வளர்கின்றன. பாஷையின் சப்த சித்திரம், கரை புரண்ட உணர்ச்சியைப் பின்பற்றி வருகிறது. எண்ண அலைகளைத் தொடர்ந்து சப்த அலைகளும் எழுகின்றன; உணர்ச்சி மாறும்போது, பாட்டின் மெட்டும் சீரும் ஓசையும் வளைந்து வளைந்து கீத அலைகளை எழுப்புகின்றன. நிறைந்த ஞான திருஷ்டியுடன் உலகத்தைத் துருவி நோக்கி, மறைந்து கிடக்கும் அழகின் இதயத்தைத் தொடுபவனே உண்மைக் கவி. எதுகையும் மோனையும் அவ்வளவு அவசியமல்ல.

'அலகாண்ட்ரா' என்ற ஆயுதந் தாங்கிய பிரிட்டிஷ் க்ரூய்ஸர். வியாபாரக் கப்பல்களுக்குத் துணை செல்வது. இது சமீபத்தில், மாறு வேஷம் பூண்டவோர் ஜேர்மன் கொள்ளைக்கப்பலைத் துரத்தி, அதற்குச் சேதமும் விளைவித்தது.

நகைக் காதல்

(எஸ். சாவித்திரி)

சாயங்காலம்; மாடியிலுள்ள பூஞ் செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றிக் கொண்டிருந்தேன். ஒவ்வொரு கிளையிலும், சிறு சிறு மொக்குகள், இளந் தளிர்கள், கவிஞனின் கனவு போல உருவெடுத்துக் கொண்டிருந்தன. நீர் பட்டவுடன் அவைகள், குளித்தெழுந்த மகிழ்ச்சியில் தலை அசைப்பதே, ஒரு ஆனந்தக் காட்சிதான்.

என்றுமில்லாத மகிழ்ச்சி அன்று எனக்கு. மனம் துள்ளி விளையாடிக் கொண்டிருந்தது. இதற்குக் காரணம் என்னவோ? வானத்தைப் பார்த்தேன். நிலா இன்னும் கிளம்பவில்லை. கூடியிருந்த நட்சத்திர மலர்கள், தங்கள் தலைவிக்கு வழிவிட்டு ஒதுங்கி நின்றன. தென்றலும், என்னவோ 'கீதம்' இசைத்துச் சென்றது.

வாசலில், வண்டி வந்து நின்ற சத்தம் கேட்டது. திடுக்கிட்டுத் திரும்பினேன். என் எதிரில் கமலா நின்று கொண்டிருந்தாள்!

கமலா என் ஆருயிர்த் தோழி; என் இன்ப துன்பத்தில் பங்கெடுத்துக்கொள்ளுகிற உற்ற துணைவி. அவளைப் பார்த்து மூன்று மாசத்துக்கு மேலாகி இருந்தது.

"அடடா! இன்று நீ வருகிறாய் என்றுதான் இவ்வளவு குதூகலமாயிருந்ததோ! இத்தனை நாளாக எங்கே போயிருந்தாய்? என்னை மறந்து விட்டாயா, என்ன?" என்று கேட்டேன்.

"ஐயோ! நினைவு முகம் மறந்தாலும், நெஞ்சு மறக்குமா?" என்று சொல்லிக்கொண்டு, கமலா ரொம்பக் கோலாகலமாகப் பேச ஆரம்பித்தாள்.

எப்போதுமே கமலாவின் பேச்சில் கிண்டலும் கேலியும் சரளமாக அடிபடும். அதிலும் கொஞ்சம், உற்சாகப் படுத்தி விட்டால், சொல்ல வேண்டியதில்லை; பொழுது போகிறதே தெரியாது.

"ஒரு ரஸமான சங்கதி சொல்லப் போகிறேன். இடையில் குறுக்கிடாமல் கேட்பாயா?" என்றாள் கமலா.

"சரி" என்று நான் தலையை அசைத்தேன்.

கமலா சொல்லத் தொடங்கினாள்:-

"எங்க பாட்டியின் ஊருக்குப் போயிருந்தேன். ஆனால் சரியாகச் சொல்லப் போனால் 'என் ஊருக்கு' என்றுதான் சொல்ல வேண்டும். நான் பிறந்ததெல்லாம் அங்கே தானே? இது கிடக்கிறது. இப்போது நான் அந்த ஆராய்ச்சித் துறையில் இறங்கி உன் மூளையைக் குழப்பவில்லை! அந்த ஊர் வசிப்பதற்கு ஒரு அற்புதமான இடம் என்பதை மட்டும் சொல்லியாக வேண்டும். 'ஜிலு ஜிலு' வென்ற காற்றின் இசையும் மணமும், பச்சைப்பசேலென்ற காட்சிகளின் கவர்ச்சியும் நிறைவும், எனக்கு நிரம்ப மகிழ்ச்சி அளித்தன. எனக்குத்தான் அழகுகளைக் கண்டால் மிகவும் பிடிக்கும் என்பது உனக்குத் தெரியுமே; ஒரு சாயங்காலம், ஊர்க் கோடியிலிருந்த வாழைத் தோப்புப் பக்கம் போயிருந்தேன். அது ஒரு சுந்தரமான இடம். 'தள தள' வென்று இளங் குருத்துக்களுடனும், குலைகளுடனும், இலைக் கரங்களை அசைத்து, ஒய்யாரமாக ஆடிக் கொண்டிருந்த வாழை மரங்களின் அடியிலே, நாலைந்து பூக்கள் விழுந்து கிடந்தன. அவைகளில் ஒன்றை எடுக்கலாமென நான் கீழே குனிந்தேன். 'அம்மா! நான் கறி சமைக்க எடுத்துவைத்திருக்கிறேன்' என்று ஒரு குரல் வந்தது. திகைப்புடன் திரும்பினேன். அங்கொரு பெண் நின்று கொண்டிருந்தாள். இல்லை, நடந்து வந்து கொண்டிருந்தாள். ஆனால் அவள் சாமான்யப் பெண் அல்ல."

"அப்படியா? அவள் என்ன பேயா, பிசாசா?" என்றேன்.

"சே, சே! ஆனால், ஆம், ஒரு விதத்தில் நீ சொல்வது பொருந்தும் தான். பாவம், அந்தப் பூங்கொடியைக் கசக்கி எறிந்தானே பழிகாரன்!" என்றாள் கமலா. மேலே பேசவில்லை. அவள் கண்கள் கலங்கி யிருந்தன. ஒவ்வொரு வார்த்தையையும் அனுபவிக்கிறவள் போல் சொன்னாள்.

அவள் நெஞ்சில் ஏதோ சோக நெருப்பு மூண்டுவிட்ட தென்பதை நான் கண்டு கொண்டேன்.

"கமலா, சங்கதி என்ன?" என்று பரிவுடன் கேட்டேன்.

கமலா கண் இதழ்களைத் துடைத்து விட்டுக்கொண்டு சொல்கிறாள்:

"நான் திகைப்புடன் நின்றேனென்று சொன்னேனல்லவா? ஆனால், உண்மையில் நான் கலவரப்படக் காரணமேயில்லை. அதுவும் நம்ம மீனாவைக் கண்டு!"

"எந்த மீனா?" என்றேன்.

"மூணு வருஷத்துக்கு முந்தி நம்மோடு படித்தாளே அந்த மீனா தான். அவளை, என்ன அவ்வளவு சீக்கிரத்தில் மறந்துவிட முடியுமா? சரி, என்ன சொன்னேன்?-ஆமாம். ஆச்சரியப்பட்டு நின்று விட்டேன். பிறகு, 'என்னைத் தெரியவில்லையா?' என்று அவள் கேட்கவும், சுய உணர்வு பெற்றேன். 'நல்ல வேளை நீயா?' என்று தட்டுக்கெட்டுச் சொன்னேன். 'ஆமாம்; பேய், பிசாசு அல்ல' என்று உன்னைப் போலத்தான் அவளும் சொல்லிச் சிரித்தாள். எனக்கு எல்லாம் திகைப்பா யிருந்தது. என்ன பேசுவதென்று தெரியவில்லை. ஆனால், வஸந்த மல்லிகை போன்று ஸுந்தரமாக இருந்த அவள் தேகம், வாடிக் கருகி யிருப்பதை மட்டும் கண்டு கொண்டேன். கொத்தோடு மல்லிகை குவிந்திருக்கும் அவள் கூந்தலில், வாடிய மருக்கொழுந்துகூட இல்லை. சர்வாலங்கார பூஷிதையாக விளங்குவாளே! ஏனோ தெரியவில்லை, பெயருக்கும் நகையைக் காணோம்! இதுமட்டும் அல்ல! அவள் பேச்சிலும், மூச்சிலும் யௌவனத்தின் பெருக்கு கொப்பளித்துக் கொண்டிருக்குமே, அதெல்லாம் மறைந்து பௌத்த பிக்ஷுணி போலக் காட்சி யளித்

தாள். என் அங்கமெல்லாம் கரைந் தழுதது. 'என்னடீ கோலம்?' என்று கட்டிக்கொண்டு அழுது விட்டேன்."

'கமலா, என்ன சொல்லிக் கொண்டிருக்கிறாள்? எங்கே நிறுத்தினாள்? மீனாவின் அந்த நிலைமைக்குக் காரணம் என்ன?' என்பதை எல்லாம் நான் முற்றும் மறந்துவிட்டேன். என் கண்களிலும், கண்ணீர்ப் பிரவாகம் ஊற்றெடுத்தது.

"மீனா முதலில் நேராகச் சொல்ல மறுத்தாள். ஆனால், என்னுடைய தொந்தரவு அதிகரிக்கவே சொல்லி முடித்தாள். அடடா! என்ன பரிதாபம்!"

"நீ, முழுதும் சொல்லவில்லையே, சீக்கிரமாகச் சொல்லு. அவளுக்கு என்ன நேர்ந்தது?" என்று, என் ஆவலை அடக்க முடியாமல் கேட்டேன்.

கமலா சொன்னாள்: "அது இளமைப் பெருக்கிலே, கனவுகளின் ஓட்டத்திலே, தன்னை அறியாது மயங்கிப் போன ஒரு சோகக் கதை! ஆனாலும், இதற்கான பழியைச் சுமத்தி மீனாவுக்கு அசட்டுப் பட்டத்தைக் கட்ட நான் விரும்பவில்லை. மீனா நம்பினாள். தன் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட அந்த ராஜகுமாரன் என்றென்றைக்கும், சிரிப்பும் சிங்காரமுமாக, மயிலாசனத்திலிருந்து கீழே இறக்கி விடமாட்டாரென்று அவள் கருதினாள். ஆனால்........

"முதலில் அவன் மெதுவாகத்தான் ஆரம்பித்தான். அதாவது மீனாவின் காதலன்; கலியாணம் செய்துகொண்ட 'கணவன்' என்றுவேண்டுமானாலும் சொல்லு. ஏனெனில் அவனை அவள் பின்னால் மணமும் புரிந்து கொண்டாள். அந்தக் கணவன், ஆரம்பத்தில், மீனாவின் கைக் காப்புகளைக் கேட்கும்போது ரொம்பச் சாதுர்யமாகத்தான் கேட்டான். அவளும் கொடுத்துவிட்டாள். அதன்பின், 'அடி! மீனு, நீ என்ன சொல்வாயோ என்று நானாக வாய் திறந்து கேட்கவில்லை! ஆனாலும், நண்பனும், நண்பன் மனைவியும் ஒரு கலியாணத்துக்குப் போக வேண்டுமென்று ரொம்பத் தொந்தரவு பண்ணினார்கள். என்னிடமும் இந்தச் சமயம் பணம் இல்லை. இருந்தால் காப்பாவது வாங்கிக் கொடுத்திருப்பேன். அவன் அப்படிப்பட்ட சினேகிதனுக்கும். என்ன செய்வது? இருந்தாலும் நீ சுலபமாக ஊகித்துக் கொண்டு, காப்புகளைக் கொடுக்க முன் வந்தாய். சரி, எங்கே போகிறது? விசேஷம் முடிந்ததும் காப்பு நம் கைக்கு வந்து சேர்ந்து விடுகிறது!' என்று இப்படியாக, மீனாவுக்கு இங்கிதமாகச் சொல்லி, முதல் காரியத்தை முடித்தான். இதற்குப் பிறகு பல நகைகள், ஒன்றன்பின் ஒன்றாக மறைந்தன. ஒவ்வொரு நகையைக் கேட்டு வாங்கும் போதும், அவன், 'அதிகார' தோரணையாகக் கேட்கவில்லை. இந்தக் 'கலையில்' அவன் பரிபூர்ண மாகக் கற்றுத் தேர்ந்தவன் போல் இருக்கிறது. வெகு தளுக்காகவும், சாதுர்யமாகவுமே, ஆபரணங்களை அபகரித்து வந்தான். ஆனால், மீனாவுக்கு இது நிஜமென்றே பட்டது. 'தொட்டுத் தாலி கட்டிய' புருஷன் நய வஞ்சகமாகச் சூழ்ச்சி செய்வான் என்று அவள் கனவிலும் கருதவில்லை. கடைசியாகத்தான் அவளுக்குச் சங்கதி தெரிந்தது. இந்தக் கிராதகன், உண்மையில், அழகில் மயங்கியோ, அல்லது, குணத்தை மெச்சியோ, தன்னை மணந்து கொள்ளவில்லை; தன்னிடமுள்ள நகைகளை அபகரிக்கவே காதல் கொண்டான் என்பது தெரிந்தது. ஆனால், அப்போது தெரிந்து என்ன பயன்? கள்ளன் போன பிறகு கதவை மூடிய சங்கதிதான்!"

கமலா சற்று நிறுத்தினாள். "அப்புறம்?" என்று நான் வினவினேன்.

"அப்புறம் என்ன? நகைகளெல்லாம் ஒழிந்தன; அவனும் ஒழிந்தான்."

"ஒழிந்தானா? அதென்ன?"

"வேலை முடிந்த பின்னும் அவன் நிற்பானா? எங்கோ போய்விட்டான், ஒரே போக்காக. போனவன் போனவன்தான். கவிழ்ந்த பால் கலயம் ஏறவா போகிறது?" என்றாள் கமலா.

"மீனாவுக்கு ஒரு ஆறுதலுமில்லையே!" என்றேன்.

"இல்லை, நீ நினைக்கிறது தப்பு. எந்தத் துக்கத்துக்குத்தான் சாந்தி இல்லை? தவிர, தன் மனசைச் சாந்திப்படுத்திக் கொள்ளத்தான், உபாத்தியாயினி வேலையை ஏற்றுக் கொண்டிருக்கிறாள். அவள் குடும்ப வாழ்க்கையில் இறங்கியிருந்தாலும், தன் குழந்தைகளைக் கவனிப்பதோடு நின்றிருக்கலாம். இப்போது ஊர்க் குழந்தைகளையெல்லாம் உள்ளன்போடு பார்த்துக் கொள்கிறாள். அதுவே அவளுக்கு இன்பந் தருவதாயிருக்கிறது" என்றாள்.

அதே சமயம், சந்திரனும், தன் குளிர்ந்த கிரணங்களை அள்ளி வீசிக்கொண்டே உதயமானான்.

"'இந்நேரத்திலே, சீர்பெற்று வாழ்வதற்கே, உன்னைப்போல் செல்வம் பிறிதுமுண்டோ?' என்று அவள் குழந்தைகளோடு விளையாடிக் கொண்டிருப்பாள்" என்று கமலா சொன்னது, சந்திரிகையில் லயித்துப் போயிருந்த எனக்குக் கனவு போலக் கேட்டது.

மதங்கள் கெடுவதேன்?

மதங்கள் என் மலின மடைகின்றன? மழைத் தண்ணீர் சுத்தமானதே. ஆனால் அது பூமியில் வந்து சேர்வதற்குள், வழியிலுள்ள அசுத்தத்தால் கெட்டுப்போகின்றது; வீட்டின் கூரை, குழாய்கள், சாக்கடைக் கால் ஆகிய எல்லாம் அழுக்கடைந்திருந்தால், அவைகளின் வழியாக வரும் தண்ணீரும் அழுக்காகத்தா னிருக்கும். அது போலவே, மதம் மலின மடைவதன் காரணமும், அதைப் பிரசாரம் பண்ணுபவர்களுடைய காரியமே.—ஸ்ரீ பரமஹம்ஸர்.

குழந்தைகள் அறிவு :

பச்சா தாபம்

(லியோ டால்ஸ்டாய்)

வோல்யா : 8 வயதுச் சிறுமி.
பெட்யா : 10 வயதுச் சிறுவன்.

பெட்யா : நீ எங்கேயிருக்கிருயென்று அம்மா பார்த்து வரச் சொன்னுள். நீ ஏன் அழுதுகொண்டிருக்கிருய்? அதை நீ நர்ஸிடம் கொண்டு போய்க் கொடுத்தாயா? (தட்டுக் காலியா யிருக்கக் கண்டு 'உஸ்' என்று ஊதிக்கொண்டே) புட்டு எங்கே?

வோல்யா : எனக்கு....எனக்கு ... எனக்கு வேணும் போலே யிருந்தது....சட்டென்று.... ஓ....ஓ....ஓ.... முன்பின் யோசிக்காமலே......சாப்பிட்டு விட்டேன்.....

பெட்யா : நர்ஸிடம் கொண்டு போய்க் கொடுக்க வில்லையா? நீயேயா தின்றுவிட்டாய்? பேஷான வேலே! நர்ஸிடம் கொண்டுபோய்க் கொடுக்க நீ தான் ஆசைப்பட்டாய் என்று அம்மாவும் நினைத்தாளே!

வோல்யா : ஆமாம்; அப்படிக் கொடுக்கத்தான் ஆசைப்பட்டேன். ....ஆனல் திடீரென்று... ....முன் பின் யோசனையே செய்யாமல்.... ஓ........ஓ........ஓ....

பெட்யா : முதலில் ருசி பார்த்தாயாக்கும். பிறகு அத்தனையையும் விழுங்கி விட்டாய். பேஷ்! (நகைக்கிருன்).

வோல்யா : ஆமாம். உனக்கென்ன; நீ சிரிக்கிருய்? ஆனல், நான் அவர்களிடம் எப்படிச் சொல்லுவேன்.................என்னல் நர்ஸிடமும் சொல்ல முடியாது; அம்மாவிடமும் சொல்ல முடியாது............

பெட்யா : சரிதான்; நீதானே செய்தாய்—ஹா—ஹா —ஹா — முழுக்கத் தின்று விட்டாய்! இப்போது அழுது என்ன பிரயோசனம்? மேற்கொண்டு என்ன செய்வதென்று யோசித்துப் பார்.

வோல்யா : என்ன யோசிக்கிறது? என்ன செய்வது?

பெட்யா : என்ன சங்கடம்! (சிரிக்காம லிருக்க முயல்கிருன்; மௌனம் சாதிக்கிருன்).

வோல்யா : என்ன செய்வேன்? ரொம்ப வேதனையா யிருக்கிறதே! (அழுகிருள்).

பெட்யா : ஏன் இவ்வளவு கலங்குகிருய்? அழாதே, நிறுத்து. அம்மாவிடம் போய், நீயே தின்றுவிட்டதாகச் சொல்லு.

வோல்யா : அது இன்னும் மோசமாய்ப் போய்விடுமே.

பெட்யா : அப்படி யானல், நர்ஸிடம் போய் உன் குற்றத்தை ஒப்புக்கொள்.

வோல்யா : அது என்னல் எப்படி முடியும்?

பெட்யா : இதைக் கேள்! நீ இங்கேயே இரு. நான் நர்ஸிடம் ஓடி, இதைச் சொல்லுகிறேன். அவள் இதைப்பற்றி வருத்தப்பட மாட்டாள்.

வோல்யா : இல்லே; அவளிடம் ஒன்றும் சொல்லாதே. எப்படி நான் இதை அவளிடம் சொல்வேன்?

பெட்யா : சும்மாப் பிதற்ருதே! நீ தப்புப் பண்ணி விட்டாய். என்ன செய்வது? நான் அவளிடம் போய்ச் சொல்லுகிறேன். (ஓடுகிருன்).

வோல்யா : பெட்யா, பெட்யா, நில்!........ஓ!........அவன் போய் விட்டானே........நான் ருசி பார்க்கத்தான் எண்ணினேன்....பிறகு.... எப்படித்தான் தின்றேனே.......... எனக்கே ஞாபகமில்லே........என்ன செய்வேன்? (விம்மி விம்மி அழுகிருள்).

[பெட்யா திரும்பி ஓடி வருகிருன்.]

பெட்யா : அழுதது போதும், நிறுத்து! நர்ஸ் உன்னை மன்னித்து விடுவாள் என்று சொன்னேனல்லவா! அவள் சொன்னது இது தான்: 'ஐயோ அசட்டுத் தங்கம்!'

வோல்யா : அவள் கோபப்படவில்லையா?

பெட்யா : கோபப்பட அவள் நினைக்கக்கூட இல்லே; 'சுவாமி அவளை ஸௌபாக்கியவதியாய் வைக்க வேண்டும். அந்தப் புட்டை நானே அவளுக்குக் கொடுத்திருப்பேனே!' என்றும் அவள் சொன்னுள்.

வோல்யா : ஆனல் நீ பார், முன் யோசனை பண்ணி அதை நான் சாப்பிட வில்லே! (மீண்டும் அழத் தொடங்குகிருள்).

பெட்யா : அதைப்பற்றி இப்போதென்ன? நர்ஸ் உன்னை மன்னித்துவிட்டாள். நாங்கள் அம்மாவிடம் சொல்லப்போவதில்லே.

வோல்யா : ஆமாம்; நர்ஸ் என்னை மன்னித்து விட்டாள். அவள் அன்பு நிறைந்தவள்; நல்லவள். ஆனல், நான் பொல்லாதவள், பொல்லாதவள், பொல்லாதவள்! அதுதான் எனக்கு அழுகை வருகிறது.

"சினிமாத் திரையில் காணப்படும் பெண்கள் தங்களுக்கேற்ற மனைவிகளா யிருக்க முடியும் என்று புருஷர்கள் நினைக்க மாட்டார்கள்."

—இந்தியன் ஸோஷல் ரிபார்மர்.

பிரிட்டனில் நடக்கும் 'புரட்சி'

(ஒரு அமெரிக்கர் கண்டது)

இந்த யுத்தத்தின் பலனாக, பிரிட்டனின், சமூக வாழ்க்கையிலும் அரசியலிலும் பிரமாதமான மாறுதல்கள் நிகழ்ந்து வருகின்றன. **நெக்லி பார்ஸன்** என்ற அமெரிக்கர் அதைப்பற்றி எழுதியுள்ள ஒரு ரஸமான கட்டுரையின் சுருக்கம் இங்கே தரப்படுகிறது:

இந்த யுத்தத்தை மகத்தானதோர் சுத்தி இயக்கமாக நான் கருதுகிறேன். சென்ற இருபத்தாறு வருஷங்களாக, உலகின் பல பாகங்களிலும் ஆங்கிலேயரை—அவர்கள் வேலை செய்கையிலும் செயல் புரிகையிலும் விளையாடும் போதும்—நான் கவனித்து வந்திருக்கிறேன். ஆனால், இன்று லண்டனில் அவர்களது சொந்த வாழ்வுப் போக்கு அடியோடு மாறி வருவதைப் போல என்றும் எங்கும் நான் கண்டதேயில்லை. **பிரிட்டனிலுள்ள ஏழைகளும் சரி, பணக்காரரும் சரி, 'பழைய காலம் இனியும் திரும்பும்' என்ற எண்ணத்தை அடியோடு கைவிட்டு விட்டதுதான் எனக்கு மிகுந்த ஆச்சர்யம் தருகிறது.**

இதற்குக் காரண மென்ன? இங்கிலாந்திலுள்ள ஒவ்வொருவர் வாழ்க்கையும் இன்று நிலைமாறி விட்டதுதான் அந்தக் காரணம். கிராமங்களிலிருந்து கடைக்காரர்கள் காலி செய்யப் பட்டனர். விவசாயப் பண்ணைகள் புத்துயிர் பெற்றுள்ளன. விவசாயிகள் அவற்றைக் கொண்டே முழு ஜீவனமும் நடத்துகின்றனர். யுத்த தந்திர முள்படச் சகல விஷயங்களிலுமே தொழிலாளர் சபையைச் சர்க்கார் கலந்தாலோசிக்கிறது. ஸ்தானீகர் கோஷ்டிகளில்கூடத் தொழிலாளர் குழந்தைகளுக்கு உத்தியோகங்கள் வழங்கப்படுகின்றன. லண்டனிலிருந்த சேரிக் குடிசைகளெல்லாம் இடித்துத் தள்ளப்பட்டன.

தொழிற் கட்சித் தலைவர்கள் இல்லாமல் இனி மந்திரி சபை அமைக்கவே முடியாது. 'ஆளும் வகுப்பார்' என்று சொல்லப்படும் பணக்காரரின் குழந்தைகள் படிக்கும் 'பப்ளிக் ஸ்கூல்'கள், இங்கிலாந்தை இந்த நெருக்கடியான சமயத்தில் வழிகாட்டி நடத்திச் செல்லத் தக்க அனுபவசாலிகளைத் தயாரிக்கக் காணோம். சுக போகங்களிலே வாழ்ந்து வரும் பணக்காரக் குழந்தைகள் கேட்கவேண்டியதுதான் பாக்கி; உடனே எந்த முக்கிய உத்தியோகமும் அவர்களுக்கு இதுவரை கிடைத்து வந்தது. இது அபாய மென்று சர்க்கார் இலாக்காக்கள் இன்று உணர்ந்து விட்டன.

யுத்தம் முடிந்த பின்னரும் இதே நிலைமைகள் நீடிக்குமென்றே நான் நினைக்கிறேன்; நம்பவும் நம்புகிறேன். 'பழைய காலம்' திரும்பப் போவதில்லையென்று ஆங்கிலேயன் உணர்ந்துவிட்டான். சமுதாயமான புதியதொரு ஐக்கிய வாழ்வை ஏற்க, அவனது மனது தயாராய்—ஏன், ஆவலாய்க் கூடத்தான்—இருக்கிறது.



வர்த்தகக் கப்பல்களைப் பத்திரமாய்க் காத்துத் துறைமுகத்துக்குக் கொண்டுவந்து சேர்த்த ஒரு பிரிட்டிஷ் டேஸ்டிராயரின் பீரங்கிகள். மேலே வர்த்தகக் கப்பல்களைக் காண்க.

காற்றினுல் ஓடுகிற பழைய மாவரைக்கும் 'மில்'கள் பிரிட்டனின் கிராமாந்தரங்களில் முன்காலத்தில் அமைக்கப்பட்டவை. பல பெரிய துறைமுகங்களில், பிரம்மாண்டமான புதிய மாவரைக்கும் இயந்திரங்கள் ஸ்தாபிக்கப்பட்டவுடனே, இந்தக் கிராமத்துக் காற்று 'மில்'கள், உபயோகமற்று ஓய்ந்து கிடந்தன. இப்போது இந்தக் காற்று மில்லுகளுக்கெல்லாம் புத்துயிர் உண்டாகியிருக்கிறது.



யுத்த கால மல்லவா? தானியம் விளையும் அவ்வவ்விடத்திலேயே மாவரைக்கும் வேலையும், ரோட்டி சப்ளையும் நடப்பதுதானே நல்லது! அதற்காகத்தான் இந்தப் பழைய முறை மீண்டும் இப்போது கையாளப்படுகிறது. இதிலிருந்து இந்தியராகிய நாமும் ஒரு படிப்பினை பெறலாம். இந்தியாவில் யுத்த நெருக்கடி அதிகரித்து, துணிப்பஞ்சம் ஏற்படுமானுல், மகாத்மா காந்தியின் கைராட்டினமும் கைத்தறியுமே அசைக்கமுடியாப் பாதுகாப்பா யிருக்குமல்லவா? கதரை நாம் இப்போதாவது மேலும் மேலும் ஊக்கமாய் ஆதரித்து வளர்க்கலாகாதா?

தலையிலே கல்வித் தொப்பி; இடுப்பிலே தகரத் தொப்பி—இந்த முரண்பாடும், யுத்தத்தால் விளைந்ததோர் விசித்திரமே. இந்த மாணவர்கள் கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலையிலே கல்வி பயிலுகிறவர்கள். கலாசாலை உடையைத் தரித்திருக்கும் இவர்கள், தீயணைப்புப் பயிற்சி பெறுவதற்காகச் செல்லுகிறுர்கள். ஆதலால்தான், விஷவாயு முக மூடி, தகரத் தொப்பி, ரப்பர் பூட்ஸ் ஆகியவற்றையும் கூட எடுத்துச் செல்கிறுர்கள். எதிரி விமானப் படை யெடுப்பால் தீ விபத்து ஏற்பட்டால், அதை யணைக்க, கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலையின் சொந்தத் தீயணைக்கும் படையொன்று சிருஷ்டியாகியிருக்கிறது. பிரிட்டனின் தலைசிறந்த, மிகப் புராதன சர்வகலாசாலைகளான கேம்பிரிட்ஜ் யூனிவர்ஸிடியிலும் ஆக்ஸ்போர்டு யூனிவர்ஸிடியிலும் யுத்தத்தால் அநேக மாறுதல்கள் ஏற்பட்டு விட்டன. பல சிறந்த பழம் புரொபஸர்கள் சண்டைக்குப் போய்விட்டார்கள். புதிய புரொபஸர்கள் வந்திருக்கிறுர்கள். இரண்டிலும் இப்போது ஸினிமா, நாடகம் சங்கீதம் முதலிய பல கலைகளும் வளர்க்கப் படுகின்றன.

புத்தகமும் வித்தகமும்

(வை. கோவிந்தன்)

மக்களுக்குப் பயன்படும் பொருள்கள் பலவர்றுள் புத்தகங்கள் தலைசிறந்தன என்பது அறிஞர் கருத்து. புத்தகங்களை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். நேரத்திற்கு ஏற்றவை, எக்காலத்திற்கும் ஏற்றவை என அவை இருவகைப்படும். ஆனால், கெட்ட புத்தகங்களே நேரத்திற் கேற்றவை என்றும், நல்ல புத்தகங்கள் எக்காலத்திற்கும் ஏற்றவை என்றும் சொல்ல முடியாது. நல்ல புத்தகங்களே நேரத்திற் கேற்றவையாயும் இருக்கலாம்; எக்காலத்திற்கும் ஏற்றவையாகவும் இருக்கலாம். கெட்ட புத்தகங்களுக்குள்ளும் நேரத்திற் கேற்றவையும், எக்காலத்திற்கும் ஏற்றவையும் இருக்கலாம்.

இனி, நேரத்திற் கேற்ற நல்ல புத்தகங்கள் இன்னவை என்பதை உங்களுக்குத் தெரிவிக்கிறேன். மனத்திற்கு மகிழ்ச்சியைத் தரும் சில அறிவாளிகளின் பேச்சுக்களைக் கேட்பதற்கு, உங்களுக்குச் சமயம் வாய்க்காமல் இருக்கலாம். அப்பேச்சுகளில் தற்கால சரித்திர சம்பந்தமான செய்திகளும், பல நாடுகளுக்குப் பிரயாணம் செய்வதால் விளையும் பயன்களும் இன்ன பிறவும் கலந்திருக்கலாம். அவை அச்சு வாகனத்தில் ஏற்றப்பெற்று அழகிய புத்தக வடிவத்தில் வெளிவருகின்றன. அப்பேச்சாளர்க்கும் அப் பேச்சுக்களை எல்லோரும் படித்து உணரும்படி செய்யும் பதிப்பாளர்க்கும் நமது மனமார்ந்த நன்றியைச் செலுத்தாதிருக்க முடியாது. ஆனால், இப்புத்தகங்கள் உயிருக்கு நன்மை பயக்கும் உயர்ந்த புத்தகங்களின் இடத்தை அபகரித்துக்கொள்ளுமானல், நாம் புத்தகங்களைப் பயன்படுத்திக்கொள்ளும் வகையறியாக் கீழ்மக்கள் ஆகிவிடுவோம். உண்மையை உரைக்குங்கால், மேலே கூறிய நேரத்திற்கேற்ற புத்தகங்கள் 'புத்தகங்கள்' என்ற பெயரைத் தாங்குதற் குரியன அல்ல என்றே துணிந்து சொல்லலாம். அவைகளை 'நன்ருய் அச்சடிக்கப்பட்ட கடிதங்கள்' என்றும் 'செய்தித் தாள்கள்' என்றுந்தான் அழைக்க முடியும். நம்முடைய நண்பர்கள் நமக்கு எழுதும் கடிதங்கள், படிக்கும் அன்று நமக்குப் பரமானந்தத்தை விளைவிக்கலாம். ஆனால், படித்த பின்னர் அவைகளைப் பாதுகாப்பதா, கிழித் தெறிவதா என்பது சிந்தித்தற்கு உரியது. செய்தித் தாள்களும் அப்படியே. இவைகளெல்லாம் புத்தகங்களாகா. புத்தகங்கள் என்பன முற்றும் உணர்ந்த அறிவுடைப் பெரியோர்களால் ஆழ்ந்த சிந்தனைக்குப் பின்னர் என்றும் நிலைபெற்றிருக்கும்படி எழுதப்படுவன.

"காட்டினில் ஒரு மா நிழலில் அமர்ந்து, காவியம் ஒன்றும், கள் ஜாடி ஒன்றும், இவற்ருேடு, பேரின்பத்தை அளிக்கும் நங்காய், நீயும் என்னருகில் அமர்ந்து கல்லையும் கனியச் செய்யும் இன்னிசை பாடிக்கொண் டிருந்தால், நான் என் சுவர்க்கம் செல்லவேண்டும்?" என்ருர் பண்டைக் காலத்துப் பேறிஞர் ஓமர்க் கயாம். இவர் கூறும் இன்பமளிக்கும் பல பொருள்களுள் புத்தகமும் ஒன்று என்பதைக் காணலாம்.

புத்தகங்களை ஓதாது ஓதுவிக்கும் 'மௌன குருக்கள்' என்று அழகாய் வர்ணித்திருக்கிருர் ஓர் ஆங்கிலப் பேறிஞர். புத்தகங்கள் மௌன குருக்கள் மாத்திரம் அல்ல; நாம் துயருற்ற சமயங்களில் அவைகள் நம்மைக் களிப்பித்துத் தேற்றும் தோழர்களாகவும், சங்கடங்களிலே குழம்பிய மனத்தைத் தெளிவித்து வழி காட்டும் வேதாந்திகளாகவும், உலக வியல்புகளை விளக்கிக் காட்டும் ஞான விளக்குகளாகவும், சென்ற கால ஞாபகச் சின்னங்களாகவும், நிகழ்கால நிலைக் கண்ணுடிகளாகவும், வருங்காலத் தீர்க்க தரிசிகளாகவும் பொலிகின்றன.

மனித நாகரிகத்திலே புத்தகங்கள் ஒரு முக்கிய அங்கமாகிவிட்டன. மனித நாகரிக வளர்ச்சிக்குப் புத்தகங்கள் முக்கிய சாதனமும் ஆகிவிட்டன. அச்சு யந்திரம் கண்டு பிடிக்கப்பட்ட பின்னர் இத்தகைய அரிய சாதனமான நூல்கள் எண்ணிறந்து பிறந்து வளர்ந்து வருகின்றன. அரிய பழைய நூல்கள் புதிய புதிய பதிப்புகள் பெற்று நிலைத்து வருகின்றன. காலத்திற்கேற்ற புதுப்புது நூல்களும் தோன்றி வருகின்றன. ஆனால்,

குட்டுதற்கோ பிள்ளைப்
பாண்டிய னிங்கில்லை;
குறும்பியளவாக் காதைக்
குடைந்து தோண்டி
எட்டினமட் டறுப்பதற்கோ
வில்லி யில்லை;
இரண்டொன்ருய் முடிந்து
தலைபிறங்கப் போட்டு
வெட்டுதற்கோ கவியொட்டக்
கூத்தனில்லை;
விளையாட்டாய்க் கவிதைதனை
விரைந்து பாடிக்
கொட்டுதற்கோ அறிவில்லாத்
துரைகளுண்டு;
தேசமெங்கும் புலவரெனத்
திரிய லாமே.

என்றபடி பண்டிதக் கட்டுப்பாடு எதுவும் இக்காலத்தில் இல்லாததாலும் கருத்துச் சுதந்திரத்தைப் போற்றும் காலம் இது வாதலாலும், நினைத்தவரெல்லாம் இன்று புத்தகம் எழுதி விடுகிருர்கள்.

ஆதலால் நல்ல புத்தகங்கள் மட்டிலுமே வெளிவருகின்றன என்று சொல்வதற்கில்லை. உபயோக மில்லாக் கண்ட கண்ட புத்தகங்களும் வெளி வந்து விடுகின்றன. இது ஓரளவு கருத்துச் சுதந்திரத்தினல் விளையும் தீமையேயாகும். ஆகையால் 'கருத்துச் சுதந்திரம் கூடாதா, கண்டிப்பும் கட்டுப்பாடும் நூல் எழுதுவதில் ஏற்பட வேண்டுமா?' என்ருல், நாம் அப்படிக் கூற முடியாது. 'நல்லவை வெல்லும், அல்லவை மாயும்' என்று நாம் முழுதும் நம்பவேண்டும்.

இக் காலத்தில் உபயோகமற்ற திரைப் படங்கள் தயாராகிவிடுகின்றன. 'ஐயோ! என், ஐயா, இப்படித் தயாரிக்கிறீர்கள்?' என்று கேட்டால், 'ஜனங்களின் சுவை அப்படிக் கேவலமாக இருக்கிறது. நாங்கள் என்ன செய்வது!' என்று படக்காரர்கள் சமாதானம் சொல்லிவிடுகிருர்கள். பயனற்ற புத்தகங்கள், பத்திரிகைகள், நடையுடை பாவனைகளின் இழிவு அத்தனைக்கும் இதே மாதிரி பொது மக்களின் சுவை கீழ்த்தரமாகிவிட்டதே காரணமாய்ச் சொல்லி அவர்கள் மீதே பழிபோடுவோர் அநேகர். ஆனல் இதுவே முழு உண்மையும் ஆகுமா? இதில் சிறிதளவு உண்மை உண்டு; ஆனல் முழு உண்மையாகாது.

பொது ஜனங்களின் ருசி என்பது எப்படிப்பட்டது? கலைகள், இலக்கியங்கள் யாவும் முற்றிலும் பொது ஜனங்களுடைய ருசியின் பிரதிபிம்பங்கள்தானு? பொது ஜனங்களின் தகுதி என்னவோ, அவர்கள் விரும்புவது எதுவோ அதைத்தான் இலக்கியத் துறையிலும் இதர கலைத் துறைகளிலும் அவர்கள் பெறுகிருர்களா? இந்தக் கேள்விக்கு ஒரேயடியாக ஆமென்ருே, இல்லையென்ருே திட்டமாகப் பதில் கூறிவிட முடியாது.

மாளவிகாக்னிமித்திரம் என்ற நாடகத்தில் காளிதாஸன் கூறுகிருன்: 'பழையது என்றதாலேயே ஒரு காவியம் சிறந்ததாகி விடாது; புதிய தென்பதாலேயே ஒரு நூல் கெட்டதும் ஆகி விடாது. நல்லதையும் கெட்டதையும் அறிஞன் தன் சொந்த அறிவை உபயோகித்துத் தேர்ந்தெடுத்துக் கொள்கிருன். மற்றவனே பிறரைப் பார்த்து அப்படியொன்றைத் தேர்ந்து கொள்ளுகிருன்.' காளிதாஸன் சொல்லிலே ஒரு சிறந்த உண்மை இருக்கிறது. அதாவது 'பிர

சாரத்தாலேயே பல புத்தகங்கள் பிரசித்தமடைகின்றன' என்பதுதான் அந்த உண்மை. நூறு பேர் ஒரு குறிப்பிட்ட 'மேக்' ரேடியோவை வாங்கினால், நூற்றியோராவது மனிதனும் யோசிக்காமலே அதே ரேடியோவை வாங்கிவிடுகிறான். நூறு பேர் படித்துப் புகழும் புத்தகத்தை நூற்றியோராவது மனிதனும் தயங்காமல் ஆசையோடு வாங்கிவிடுகிறான். இதனால் அவனுக்கு விவேகமில்லை என்று கொள்ளுதல் கூடாது. புதிதாய் வந்த ஒரு புத்தகத்தையோ, பொருளையோ வாங்குவதற்குமுன் என்ன சோதனை? அதன் வியாபகம்தான். பெரும்பான்மையரான மக்களால் ஆதரிக்கப்படும் நூல்களும் பிறவும் மேலும் மேலும் பரவிப் பெருகுவதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை. ஒரு குறிப்பிட்ட ஆசிரியனது ஒரு நூல் பெரும் புகழ் பெற்று விடுமானால், மேலும் அவனது ஒன்பது நூல்களுக்கு இடமேற்பட்டு விடுகிறது. ஆனால், இது பொது ஜனங்களின் சுவையைப் பொறுத்த விஷயமல்ல. பொது ஜனங்களின் ருசி என்பது ஒரு ஆழந் தெரியாத சமுத்திரம்; அது எக்காலத்தும் எல்லாவிடத்தும் ஒரே நிலையாக இருப்பதில்லை. சொல்லப்போனால் எங்குமே, எக்காலத்துமே பொதுஜன ருசி திட்டமான ஒரு ரூபம் கொண்டிருப்பதில்லை. சந்தர்ப்ப பேதங்களாலும், விளம்பர வலைகளாலும், வீரவணக்க குணத்தாலும் பொது ஜனங்கள் அடையும் ஒரு கவர்ச்சியையே அவர்களின் ருசியென நாம் மயங்கிக்கொண்டிருக்கிறோம். அந்த மூன்று அம்சங்களையும் கலக்கித் தன் வழி இழுத்துப் பயன்படுத்திக்கொள்ளும் மனிதன் பொது ஜன ருசியை மாற்றி விடுகிறான்.

சென்ற இருபதாண்டுகளில் தமிழ் நாட்டின் புத்தகப், பத்திரிகைகளின் நிலைமைகளை எடுத்துக்கொள்ளுவோம். இந்த இருபது வருடங்களில் புத்தகம், பத்திரிகை இரண்டு துறைகளிலும் எண்ணற்ற மாறுதல்கள் ஏற்பட்டிருப்பதை நீங்கள் அறிவீர்கள். ஒரு காலத்தில் எங்கே பார்த்தாலும் துப்பறியும் நாவல் புத்தகங்களிடம் மோகமாகவிருந்தனர். இப்போதோ அதைத் தொடக்கூட மனம் சகியாதவர்களாயிருக்கின்றனர். பண்டிதத் தமிழில் மோகித்த காலமும் உண்டு. அது இப்போது போய்க்கொண்டிருக்கிறது. சில பண்டிதர்கள்கூடக் காலத்திற் கேற்றவாறு எளிய இனிய தமிழில் அரிய நூல்கள் எழுதி வருகின்றனர்.

'பொது ஜனங்களின் ருசி, பொது ஜனங்களின் ருசி' என்றே சதா ஜபம் செய்துகொண்டிராமல், நமது இலக்கிய ஆசிரியர்கள்—என் சகல கலைஞர்களுமே—தத்தம் அறிவுக்கும், தனியியல்புக்கும் இசைந்த புதிய புதிய சிறப்பு வாய்ந்த சிருஷ்டிகளைப் புரிய முன் வந்தால், அவற்றிற்குப் பேரும் புகழும் கிடைப்பது நிச்சயமாகும்.

காகிதத்தைக் கரியாக்கிக் கற்றையாய்க் கட்டிவிட்டால், அதற்குப் புத்தகம் என்ற பெருமை அந்த மாத்திரையிலேயே வந்துவிட்டதென்று எண்ணவேண்டாம். அச்சு யந்திரம் வந்தாலும் வந்தது, குப்பைக் காகிதத்திற்குக் குறைவில்லை. முன்னால் புலவர்களின் நூல்களைப் பதிப்பித்து வெளியிடுகின்றனவும், அவைகளை ஆராய்ந்து விளக்குகின்றனவும் தவிர, தமிழ் வரையிலே மற்றெல்லாப் புத்தகங்களும் நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது விற்பதற்கு எழுதியவைகளேயன்றி வாசிப்பதற் கல்ல. ஆயின் இவைகளைக் குப்பை மேட்டிற் கல்லவா அனுப்புதல் வேண்டுமென்று கேட்பீர்களானால்,......ஆம், பள்ளிக்கூடங்களில் தான் பாடமாக வைத்து விடுகின்றார்களே, போதாதா? இப்போதைய முறையில் மேலெழுந்தவாறு படிப்பதற்கென்றே பட்டங்கட்டிச் சில புத்தகங்கள் வேண்டியிருக்கின்றனவே; அதற்கு ஒன்றுமே படித்திராதவர் எழுதுகின்ற புத்தகங்கள்தானே ஏற்றவை! அல்லாது, பண்டிதர்கள் சிலர் புத்தகங்கள் எழுதும் காலையிலும் இந்நாள், பாவம், இப்பள்ளிக்கூடப் பிள்ளைகளை நினைத்து நினைத்தே நாவூற எழுதுகின்றார்களாதலால், அவர்களும் மேலெழுந்தவாறே எழுதவேண்டியிருக்கிறது. அக்காலத்தில் பண்டிதர்கள் வள்ளல்களை அண்டிப் பிழைத்தார்கள்; இக் காலத்திலோ பிள்ளைகளையடுத்துப் பிழைக்கிறார்கள்!

இனி, இந்த நாவல்களென்ற காணக் கரிக்கும் காகிதக் கற்றைகளுக்கும், ஒரு நலமும் ஒரு சுவையும் அல்லாத் தன்மையில் தற்காலம் வெளிவரும் ஆங்கில நாவல்களுக்கும் பெரிதொரு பேதமுமில்லை. ஆனால், ஒரு சிறு வித்தியாசம்; தமிழ் நாவல்களில் இலக்கணம் படுகின்றபாடு, ஆங்கில நாவல்களில் படாமல் தப்பி விடுகிறது. ஆங்கிலத்தில் ஸ்காட், எலியட், மெரிடித் போன்ற மேதாவிகள் இலக்கிய மரபில் எழுதிய நாவல்களின் காலம் கழிந்துபோய் விட்டது. அவைகளைத் திருப்பிப் பார்ப்போரைத் தேடவுங் கிடைக்கார். இலக்கிய மரபில் எழுதின நாவல்கள் தமிழிலும் ஒன்றிரண்டு தேடினால் கிடைக்கலாம். வல்லினம் நினைத்த இடத்தில் மிகுந்தும் வேண்டிய இடத்தில் மிகாமலும், கட்டுப் பாடற்றுப் பிழையெழுதுபவரின் நூல்களில், சிந்தனைக் கட்டுப்பாடு மட்டில் எப்படி இருக்கும்? அவற்றில் எத்தனை அளவு கருத்திருக்கும்? இலக்கணப் பிழைகள் இல்லாவிடத்தும், கதையின் சுவையை நினைத்த மனம் கைக்கும். கைக்காதவிடத்தும், கதையைப் படித்த சுவை அக் காகிதத்தை மென்றாலே கிடைத்திருக்கும். ஏனெனில், அவை வெறும் வைக்கோற் புரியாகவே இருக்கும்.

தொழில் சம்பந்தமான முறைகளைக் கூறுவனவும் வைத்திய நூல்களும் புத்தகங்களாகா. தச்சனுக்கு உளியைப் போலும், இடையனுக்குக் கைக் கயிறு போலும், தையற்காரனுக்கு ஊசியைப் போலும் அவை தொழிலுக்குரிய சாதனங்களே யாகும். இவைகளும் புத்தகங்க ளல்ல...... உளியும், ஊசியும் போன்றனவே யாகும்.

புத்தகங்களென்று யாவரும் வைத்தற்குரியன புலமை சான்ற பெரியோர் ஆக்கிய நூல்களே. கம்பரும், ஷேக்ஸ்பியரும், காளிதாஸனும், இன்னவர் மரபைச் சேர்ந்த பிற எண்ணிறந்தோரும் நம்முறவை வறிதே தேடியலைகின்றனர். மெய் கண்ட மேன்மையரான அவர்களைக் கைகடக்க விட்டுச் சும்மாத் திரிவது என்ன சூழ்ச்சியோ! ஒன்றிரண்டு ரூபாய்க்கு இப்பெருந்தகைச் செவ்வியோர் இன்றைக்கும் நம்மோடு உறவாடக் காத்திருக்கின்றனரே? நமக்கு ஒழிந்த நேரம் பார்த்திருந்து, உரையாடவும் காத்திருப்பர். எப் பாஷைப் புலவர்களேனும் அவர்களின் நூல்கள் வீட்டிலிருந்தாலே மங்களமாயிற்றே! உண்மையை நோக்கின், இன்ன நூல்களைப் படிக்கப்படாதென்ற காரணத்தால் பலர் விலக்கி வைத்தவ ரல்லர். வீட்டினில் அவை வந்து சேருமானால், ஒரு நாள் இல்லாது போனாலும் ஒருநாள் படிக்க முயலாது போகார். பழக்கக் குறைவினால் முதல்தடவை எடுத்தபோது படிக்க முடியாமற் போனாலும், பத்துத் தடவை எடுத்தெடுத்து வைத்துவிட்டுப் பின்னொரு தடவையேனும் புரிந்துகொள்வதற்கு வேண்டிய முயற்சியைச் செய்து கொள்வார். ஆதலால், யாவரும் தற்காலம் தம்மால் படிக்க இயலாதேனும், நல்ல புஸ்தகங்களைச் சேகரித்தாவது வைத்துக் கொள்வது நலம். வீட்டிலே வளர்கின்ற பிள்ளைகள் உயர்ந்த புத்தகங்களைப் பார்த்துக்கொண்டே வளரட்டும். அவைகளின் பேரைச் சொல்லவேனும் பழகிய வண்ணமாய், அவர்களின் மொழி வளரட்டும். இதனால் விளையும் பயன் இவ்வளவெனச் சொல்லுவதற்கு இயன்றதொன்றன்று.

இன்றுமுதல் உங்கள் உங்கள் வீடுகளில் புத்தகசாலையொன்று அமைத்து வைக்கத் தொடங்குங்கள். பண்டை நாள் இலக்கியங்களும், அவ்விலக்கியங்களைத் தழுவியும் ஆராய்ந்தும் விளக்கியும் இக் கால அறிஞர்கள் எழுதுகின்ற நூல்கள் பலவும் உங்கள் வீட்டை நிறைக்கட்

டும். ஆங்கிலம் அறிந்த தமிழர்கள் இரண்டு பாஷை நூல்களையும் சேகரிக்க வேண்டியவர்கள். ஆங்கிலம் பயிலாத தமிழர்கள், முன்னுரைத்த வகையைச் சார்ந்த தமிழ் நூல்களை இன்று தொட்டுச் சேருங்கள். கடன் வாங்கியோ விலைக்குத்தான் வாங்கியோ எப்படியேனும் புத்தகங்களைச் சேகரிப்பது தகும்.

[குறிப்பு : திருச்சி ரேடியோவில் 7-3-41ல் அன்று செய்யப்பட்ட இந்தப் பிரசங்கம், ரேடியோ நிலயத்தார் அனுமதியுடன் பிரசுரிக்கப் படுகிறது.]

தேனீக்கள் ஓடும் காரணங்கள் :— தேனீக்கள் வளர்ப்போர், தங்கள் 'பண்ணை'க்குப் புதிதாய் வரும் தேனீக்கள் வெளியே ஓட்டம் பிடித்து விடாதபடி ஜாக்கிரதையாய் நடந்துகொள்ள வேண்டும். பல காரணங்களால் அவை தங்கள் கூட்டை விட்டு ஓடிவிடும். அவற்றில் முக்கியமானவை வருமாறு:

(1) அவற்றைப் பிடிப்பதிலோ, அயலூருக்கு அனுப்புவதிலோ அவற்றுக்குத் தொந்திரவு ஏற்படுதல்;

(2) தேன் கூடு சீர் குலைந்து, முட்டைகளுக்கும் குஞ்சுகளுக்கும் சேதம் ஏற்படுதல்;

(3) தங்களுக்காகச் செய்து வைக்கப்பட்டிருக்கும் மரக் கூட்டின் வர்ணமோ வாசனையோ பிடிக்காமலிருத்தல்;

(4) அந்தப் பிரதேசத்தில் மலர்களின் மகரந்தமும் தேனும் குறைவாயிருத்தல்;

(5) ராணி ஈ காயமுண்டு சாதல்;

(6) போதிய காற்றோட்டமும் இடவசதியும் கூட்டில் இல்லாதிருத்தல்;

(7) குளவிகள் தங்கள் கூட்டில் கூண்டுகட்டிப் புழு வைப்பதால் தங்களுக்குத் தொல்லையேற்படுதல்;

(8) கூட்டிலே நல்ல குஞ்சு மிச்சமில்லாமற் போதல்;

(9) வெப்பம், குளிர் இவற்றிலிருந்து தங்களுக்குப் பாதுகாப்பில்லாமலிருத்தல்.

"விண்ணப்பங்களும் காகிதத் தீர்மானங்களும் நீங்கள் விரும்பும் விடுதலையை உங்களுக்குத் தரப் போவதில்லை. விடுதலைச் சாதனம் சக்தியே."
—ஸாது வாஸ்வானி.

பாலர் பாட்டு:

ஈயும் கொசுவும்

வித்வான் சு. உமைதாணு பிள்ளை

ஈயும் கொசுவும் நம்மோடு
என்றுங் கூடி வாழுமே
நோயும் நொடியும் பெருக்குமே
நோக உடலைக் கடிக்குமே. (1)

உறக்க மெல்லாங் கலைக்குமே
உடலைச் சுற்றி மொய்க்குமே
இரக்க மின்றிக் கடிக்குமே
இரத்தம் குடித்து மகிழுமே. (2)

உண்ணு முணவில் அமருமே
உவந்தே முட்டை களிடுமே
எண்ணு மிடத்திற் கேகுமே
எங்கும் நோயைப் பரப்புமே. (3)

அசுத்தங் கண்ட இடமெல்லாம்
அவைக ளண்டி வாழுமே.
அசுத்தம் அணுகா நம்வீட்டை
அழகாய் என்றும் வைப்போமேல் (4)

நாட்டில் நோயும் ஒழியுமே
நலங்கள் யாவும் சிறக்குமே
பாட்டில் இன்பஞ் சுரக்குமே
பரத நாடுஞ் செழிக்குமே. (5)

அஹங்காரமே மாயை

"ஸ்வாமி! நமக்கு ஏன் பந்தம் ஏற்பட்டுள்ளது? நம்மால் ஏன் ஈசுவரனைக் காண முடியவில்லை?" என்று ஒருவர் பரமஹம்ஸரைக் கேட்டார். அதற்குப் பகவான் பதில் சொன்னதாவது:—"அகங்கார மென்பது ஜீவனுக் கேற்பட்ட மாயை. ஞானோதயம் உண்டாகாமல் தடுப்பது அவ்வகங்காரமே. 'நான்' என்பது இறந்தால் துன்பமெல்லாம் தொலையும். ஈசுவர கிருபையால் 'என் செயலாலாவது யாதொன்று மில்லை' என்னும் கொள்கை மனத்தில் ஸ்திரமாக நிலைக்குமானால், மனிதனுக்கு இந்த ஜன்மத்திலேயே முக்தியுண்டாகும். அப்பால் அவனுக்கு வேறொரு பயமுமிராது."
—ஸ்ரீ. பரமஹம்ஸர்.

பாலர் கதை :

கந்தர்வ லோகம்

'மாமி'

தோட்டத்திலே ஒரு பட்டுப் பூச்சி பறந்து கொண்டிருந்தது. பூவுக்குப் பூ தாவியது. அதன் வர்ணச் சிறகுகள் குழந்தை கமலாவின் கண்ணைப் பறித்தன.

"அம்மா! அம்மா! எனக்கு அதோ அந்தப் பட்டுப் பூச்சியைப் பிடித்துத் தா" என்றாள்.

"ஐயோ, பாவம்! அது என்ன சந்தோஷமாய்ப் பறந்து விளையாடிக் கொண்டிருக்கிறது! அதைப் பிடித்தால், அதற்குக் கஷ்டமாயிராதா? அதேமாதிரி உனக்கொரு பொம்மைப் பட்டுப் பூச்சி வாங்கித் தருகிறேன்" என்றாள் தாயார்.

கமலா ரொம்பச் சமர்த்தான குழந்தை. ஆகையால், 'சரி' என்று ஒப்புக் கொண்டாள். தாயும் ஒரு பொம்மைப் பட்டுப் பூச்சி வாங்கித் தந்தாள். அதைத் தன் பக்கத்திலேயே வைத்துக் கொண்டு அவள் தூங்கினாள்.

பாதித் தூக்கத்தில் யாரோ தன் கையைப் பிடித்து இழுப்பது போல் கமலாவுக்குத் தோன்றியது. எழுந்து உட்கார்ந்தாள். என்ன விந்தை! அந்தப் பொம்மைப் பட்டுப் பூச்சி ஒரு கந்தர்வ புருஷனாய் மாறி யிருந்தது. கமலாவுக்கும் பலவர்ணச் சிறகுகள் இரண்டு முளைத்திருந்தன.

ஆச்சரிய மடைந்த கமலா "நீ யார்?" என்றாள்.

"நான் யாராயிருந்தால் என்ன? நீ என்னோடு பூஞ்சோலைக்கு வருகிறாயா?" என்று கேட்டான் கந்தர்வன்.

"ஆஹா" என்றாள் கமலா.

இருவரும் பச்சைப் பசேல் என்றிருந்த ஒரு நந்தவனத்துக்குப் பறந்து போனார்கள்.

அங்கே இன்னும் பலபேர் சிறகுகளோடு பறந்து பாடியாடிக் களித்துக் கொண்டிருந்தார்கள்.

"இது எவ்விடம்?" என்று தன் தோழனைக் கமலா கேட்டாள்.

"உனக்கு எப்படித் தோன்றுகிறது?"

"கந்தர்வ லோகமோ?" என்று வினவினாள் கமலா.

"ஆமாம். இந்தக் கந்தர்வலோகம் பூமி எங்கும் இருக்கிறது. ஆனால், இதைப் பார்க்கத் தெரிந்தவர்களுக்கு மட்டுமே இது புலப்படும்" என்றான் அவன்.

கமலா : "அப்படி ஒரு விசேஷ வழி யிருக்கிறதா?"

தோழன் : "ஆட்சேப மில்லாமல். மனசிலே களங்க மிருக்கக் கூடாது; அகங்காரம் இருக்கலாகாது. பணிவு வேண்டும்; அன்பு வேண்டும். மொத்தத்தில் உன் மாதிரி குழந்தை உள்ளம் வேண்டும். அப்படிப் பட்ட ஜனங்கள் எப்போது, எங்கே வேண்டுமானாலும் கந்தர்வ லோகத்தைப் பார்க்கலாம்."

இப்படி இருவரும் பேசிக்கொண்டே யிருக்கையில், ஒரு சிலந்தி வலையின்மேல் விளையாடிக்

கொண்டிருந்தநாலைந்து கந்தர்வர்கள், "ஓடி வாருங்கள்; எங்களுடன் விளையாடலாம்" என்று இவர்களைக் கூப்பிட்டார்கள்.



"கூப்பிடுகிறார்களே; போவோம், வா" என்று தன் தோழனைக் கூப்பிட்டாள் கமலா.

"வேண்டாம். நேரமாகி விட்டது. நீ வீட்டுக்குப் போ" என்று எச்சரித்தான் தோழன்.

"இல்லை; நான் இங்கேயே எப்போதும் இருந்து விடுகிறேனே" என்றாள் கமலா.

"கூடாது; கூடாது. ஒவ்வொரு நாள் ராத்திரியும் ஒவ்வொரு குழந்தை தான் இந்த உலகத்துக்கு வரலாம்" என்றான் கந்தர்வத் தோழன்.

"நான்தான் கந்தர்வப் பெண்ணாகிவிட்டேனே. ஏன் திரும்பிப் போகவேண்டும்?" என்று கேட்டாள் கமலா.

"அப்படியா? இதோ பார். உன்னால் முடிந்தால் என் மாதிரி செய், பார்ப்போம்" என்று சொல்லிய அந்தத் தோழன், 'விர்' றென்று ஒரு பூவின் மேல் பறந்து, ஆனந்த நாட்டியமாடி, மற்றோர் பூவுக்குத் தாவினான். ஆனால், ஒரு பூக்கூடத் துளியும் கசங்கவில்லை.

"இதோ நானும் செய்கிறேனே" என்று சொல்லிய கமலா, தானும் அப்படியே ஒரு பூவின்மேல் தாவினாள்.

பூவின் காம்பு ஒடிந்து விழுந்தது. கமலாவின் மண்டையில் அடி.

கந்தர்வ லோகம் மாயமாய் மறைந்தது. கட்டிலின் கீழே கமலா விழுந்து கிடந்தாள். கண்ணைக் கசக்கி விழித்தாள்.

தாய் வந்து பார்த்து, "என்னடீ கமலா! படுக்கையிலிருந்து விழுந்து விட்டாயா?" என்று கேட்டாள்.

"இல்லை; பூவிலிருந்தல்லவா விழுந்தேன்" என்றாள் கமலா.

தாய் நகைத்து, "என்ன, கனாக் கண்டு உளறுகிறாயா?" என்று வினவினாள்.

"இல்லை, அம்மா! கந்தர்வ லோகத்தைக் கண்டேன். அங்கே அகங்காரம் கூடாது என்றார்கள். நான் அகங்காரம் கொண்டேன். கந்தர்வ லோகம் அதனால்தான் மறைந்துவிட்டது. மறுபடியும் ஒரு நாள் அதை நான் பார்க்காமல் விடப் போவதில்லை" என்றாள் கமலா.

தாய் புன்னகையுடன், "போடீ அசடு! சீக்கிரம் பல்லைத் தேய்த்துவிட்டு வா; பலகாரம் தின்னலாம்" என்று சொல்லி நகர்ந்தாள்.

காந்தி பேட்டிக் கதை

மகாத்மா காந்தியிடம் தாம் அடைந்த ஒரு ரஸமான அனுபவத்தை 'அடோலிகஸ்' என்ற நிருபர் பம்பாய் 'இல்லஸ்டிரேடட் வீக்லி'யில் எழுதி யிருக்கிறார்.

அமெரிக்கப் பத்திரிகைகளுக்குச் செய்தி அனுப்புவதற்காக இந்த நிருபர் ஒரு முறை மகாத்மா காந்தியைப் பேட்டி கண்டார். அந்தச் சம்பாஷணையை, வர்ணனையான பீடிகையெல்லாம் போட்டு, ஒரு கட்டுரையாக, இவர் தயாரித்தார். பிறகு, அதை மகாத்மாவின் அங்கீகாரத்துக்கு அனுப்பினார்.

"முன்னால் கொஞ்சம் வர்ணிப்பு இருப்பதைப்பற்றி அதிகக் கண்டிப்பாய்ப் பார்க்காதீர்கள். அமெரிக்கப் பொதுஜனங்களின் ருசிக்கு அதெல்லாம் தேவையாயிருக்கிறது. பத்திரிகைக்காரன் பொது ஜனங்களின் ருசியை அனுசரிக்கத்தானே வேண்டி யிருக்கிறது. என்னைவிடச் சிறந்த பத்திரிகைக்காரரான உங்களுக்குத் தெரியாததா?" என்று, கூடவே ஒரு நறுக்கையும் இந்த நிருபர் மகாத்மாஜீக்கு அனுப்பி யிருந்தார்.

காந்திஜி அந்தக் கட்டுரையின் ஒரு ஓரத்திலே நிருபரை மிக நயமாகக் கண்டித்து, இவ்வாறு பதில் எழுதியனுப்பினார்: "என் வாக்குமூல மெல்லாம் உண்மை என்று அத்தாட்சி செய்கிறேன்; ஆனால் உங்கள் நகாசுகளுக்கு அத்தாட்சி செய்ய மாட்டேன்."

அவ்வளவு சத்திய சந்தன் காந்தி.

'ஜேஸன்'

கைக் கடியாரங்கள்

யுத்தகாலத்திலும் சரசமான விலைகளே

யுத்தத்தினால் பணமுடை ஏற்பட்டிருந்தாலும் இறக்குமதி குறைவிருந்தபோதிலும் எங்கள் கடியாரங்களை சரசமாகவே கொடுக்கிறோம். எங்கள் **'ஜேஸன்'** கைக் கடியாரங்கள் அழகிலும், உழைப்பிலும் சரியான காலம் காட்டுவதிலும் சிறந்தவைகள்.

உங்களுக்கு பெயர்பெற்ற கடியாரங்கள்
வேண்டுமானால்
'ஜேஸன்'
கடியாரங்களையே தேர்ந்தெடுக்கவும்

JASON

Highly polished lever
15 Jewels movement

Chrome	Rolled Gold
Rs. 40	Rs. 45

GUARANTEED 2 YEARS
POSTAGE EXTRA

JALAL & SONS

Head Office: No. 46, Rattan Bazar, P. T. MADRAS
Branches: 189, Mount Road, MADRAS; Abid Rd., HYDERABAD (Dn.)

இந்த இதழில்—

கே. அருணாசலம் (பக்கம் 123)

'தினமணி' உதவியாசிரியர். பழைய சத்தியாக்கிரக இயக்கத்திலும், சென்னை சதி வழக்கிலும் சிறை சென்றவர். சமஸ்தானங்களைப் பற்றி இவர் எழுதிய நூல்தான் கொஞ்ச காலத்துக்கு முன் பறிமுதலாயிற்று. தீவிர அரசியல் கருத்துக்கள் உடைய இவர், ரமண ரிஷிகளைப் பற்றியும் எழுதி யிருப்பது ஆச்சர்யமா யில்லையா? இது தான் மனோதத்துவத்தின் மர்மம் என்பது!

எஸ். பி. (பக்கம் 111)

'கலைகள் பிறப்பது, கலைஞனின் அமரத்துவ ஆசையாலேயே— இதுதான் இவரது இக் கதையின் கருத்து' என்று அபிப்பிராயம் கூறுகிறார் ஒரு ஆங்கில புரொபஸர். உங்களுக்கு எப்படித் தோன்றுகிறது? படித்துப் பாருங்கள்?

எஸ். விசாலாக்ஷி (பக்கம் 109)

இந்த அம்மாளை அடிக்கடி எழுதச் சொல்லுங்கள் என்று ஒரு நண்பர் காகிதம் எழுதியிருக்கிறார். நாம் சொல்லிக்கொண்டு தான் இருக்கிறோம்; அவர்களும் அன்புடன் அப்படியே செய்துதான் வருகிறார்கள். சில இதழில் தட்டி விடுகிறது. என்ன செய்வது!

நாஞ்சில் (பக்கம் 110)

ஆங்கிலத்திலும் தமிழிலும் நல்ல ஞானமுடையவர். சிற்பியைப் போல், பாஷையைச் செதுக்கி நகாசு செய்யும் கலைஞர்.

ஆர். திருஞானசம்பந்தம் (பக்கம் 105)

கலைச்சுவை நிரம்பிய வாலிப எழுத்தாளர். ஓர் ஆங்கில ஓரங்க நாடகத்தை மொழிபெயர்த்துத் தந்திருக்கிறார்.

ரா. நா. (பக்கம் 124)

'ஹிந்துஸ்தான்' ஆசிரியர். நல்ல ராஜீய அனுபவமும் பிரக்ஞையுமுடையவர்.

வெளிவரத் தயார்!

ஏ எல். ஆர் எம். கம்பெனியாரின்

புராணச் சித்திரம்

பிருந்தா

&

மைனரின் காதல்

●

நடிகர்கள்:

கொத்தமங்கலம் சீனு
புலியூர் துரைசாமி ஐயா
என். நாகராஜன்
எம். ஆர். சாமிநாதன்
டி. எஸ். துரைராஜ்
டி. வி. சேதுராமன்
எஸ். வி. வெங்கட்டராமன்
சங்கீதம் சங்கரிபாய்
ஜே. சுசீலாதேவி
டி. ஆர். சாரதா
பி. ஆர். மங்களம்
கே. எஸ். ஆதிலட்சுமி
கே. டி. சக்குபாய்

●

இன்னும் பலரும்

Tel: 'Filmsing' போன்: 4039

விவரங்களுக்கு:

ஏ எல். ஆர் எம். கம்பெனி

வேப்பேரி :: சென்னை

அரிய நூல்கள்

	ரூ. அ.
மாதங்கினி	1- 4
ரஜனி	0-14
அமூல்யன்	0-15
லலிதா	0-12
கதைக் கோவை	3- 0
டி பெதர் வெயிட் பதிப்பு	3- 8
விஷ விருக்ஷம்	1- 8
ஸேவா ஸதனம்	1- 4

எங்கள் புத்தக ஜாப்தா எழுதுவோர்க்கு அனுப்பப்படும்

அல்லயன்ஸ் கம்பெனி

மயிலாப்பூர் :: சென்னை

DHANALAKSHMI BRAND

TRADE MARK

BEST STEEL TRUNKS

AND SUIT CASES

MANUFACTURER

A. CHELLAPPA NAYAGAR

No. 319. CHINA BAZZAR ROAD, MADRAS.

ஸ்டீல் டிரங்குகள், காபின்கள் வாங்குகையில், பற்பல சைஸ்களிலும் உயர்தரமான எஃகைக்கொண்டு செய்யப்பட்ட

தனலட்சுமி

பிராண்டையே பார்த்து வாங்குங்கள்.

அ. செல்லப்ப நாயகர்

319, சைனா பஜார் ரோட், மதராஸ்

தந்தி: "GOODWILL" த. பெ. நெ. 113 டெலிபோன்: 2724

ஸௌத் இந்தியா கார்பொரேஷன் (மதராஸ்) லிமிடெட்

80, செம்புதாஸ் தெரு, ஜியார்ஜ் டவுன், சென்னை

பிராஞ்சுகள்

கல்கத்தா, காரைக்குடி, கோயமுத்தூர், திருச்சினாப்பள்ளி

எம்மிடம் திரணை, சதுரம், பட்டா, இரும்புத் தகடு, கலாய்த்தகடு, கர்டர், கலாய்ப் பைப்பு, கலாய்க் கம்பி, ஆணி வகைகள், பெயிண்டு, சிமெண்டு முதலிய எல்லா விதமான, இரும்பு சாமான்களும் கட்டிட சாமான்களும் கிடைக்கும்.

சினிமா பிடிப்பதற்கு வேண்டிய 2000 பவர் முதல் 5000 பவர் வரையில் பிரகாசமான பல்புகளும் அதைச் சேர்ந்த லைட் பிட்டிங்குகளும்

எலெக்டிரிக் வொயரிங் சாமான்கள், வொயர், பல்பு, விசிறி, எலெக்டிரிக் மோட்டார், பம்பு முதலிய எல்லா எலெக்டிரிக் சாமான்களும் கைவசமிருக்கின்றன.

Sole Distributors for Madras Presidency and States

BLOOD VITA

பிளட் விட்டா என்பது கல்கத்தா மெடிகல் ரிசர்ச் லபாரட்டரியில் டாக்டர் அத்யக்ஷ மாதூர் பாபு என்பவரால் தயாரிக்கப்பட்ட உயர்ந்த இரத்த விருத்தி டானிக். **8 அவுன்ஸ் பாட்டில் விலை ரூ. 1/4**

*

ASCU PRODUCTS [ஆஸ்கூ]

இது மரப்பலகை, உத்தரம், விட்டம், டெலிபோன், எலெக்டிரிக் கம்பங்கள் முதலிய எல்லா சாமான்களும் உளு, கரையான், மண் இவைகளால் பாதிக்கப்படாமல் இருப்பதற்கென்று, இந்திய சர்க்கார் காட்டு இலாகா ஆபீஸராக இருந்த டாக்டர் காமேசம் அவர்களால் கண்டு பிடிக்கப்பெற்ற, ஒரு ரசாயனப் பொருள். உபயோகப்படுத்தும் முறை இவைகளுக்கு, நேரிலோ, கடிதமெழுதியோ தெரிந்து கொள்ளலாம். ஜில்லா ஏஜண்டுகள் தேவை.

விவரங்களுக்கு எழுதவும்

யுத்தம்

நடக்கும் சமயத்தில்கூட மார்க்கட் நிலவர ஏற்றத் தாழ்வினுல் பாதிக்கப்படாதது

லைப் இன்ஷியூரன்ஸ்

அதற்குத் தேய்மானம் கிடையாது; நஷ்டம் கிடையாது; ஆனல், லாபம் கூடுவதால், அதன் மதிப்பு அதிகரிக்கிறது. உடனே சொத்து ஏற்படுத்துகிறது. எதிர்காலப் பாதுகாப்பாக வும் இருக்கிறது. அதன் பெறுமானம் தன் இயற்கை மதிப்புக்கு அதிகமாகவே யுள்ளது.

எவ்விதமான பண நிலையி லிருப்பவர்களுக்கும் யாவருக்கும் ஏற்ற லாபகரமான, பத்திரமான, நாணயமான பாலிஸிகளை **ஹிந்துஸ்தான்** அளிக்கிறது.

இதில்

இன்றே, இப்பொழுதே

இன்ஷியூர் செய்யுங்கள்

HINDUSTHAN CO-OPERATIVE INSURANCE SOCIETY LD.
DELHI CALCUTTA BOMBAY MADRAS

ஹிந்துஸ்தான்

கோவாபரேடிவ் இன்ஷியூரன்ஸ் ஸொஸைடி லிமிடெட்

தலைமை ஆபீஸ்:
'ஹிந்துஸ்தான் பில்டிங்ஸ்'
ஸுரேந்திரநாத் பானர்ஜி ரோடு,
கல்கத்தா

மதராஸ் பிராஞ்சு:
'ஹிந்துஸ்தான் பில்டிங்ஸ்'
107, அரண்மனைக்காரத் தெரு,
சென்னை

ஃலன்

ஆப்டோன்

பிளாக்குகள்

உங்களுக்குத் தேவையான எவ்விதமான பிளாக்குகளும் நவீன முறைகளில் துரித மாகவும் சகாயமாகவும் செய்து தரப்பெறும்.

★

விவரங்களுக்கு எழுதவும்

மானேஜர்,

"ஸண்டே டைம்ஸ்" பிராஸஸ் ஸ்டுடியோ

எர்ரபாலு செட்டித் தெரு :: சென்னை

Phone : 2678

'ஸிப்கோ' தயாரிப்புகள்

"ரிட்"

உங்கள் வீட்டின் சகல விதமான சாமான்களின் சுத்தத்தையும் பிரகாசத்தையும் காப்பாற்றுவதற்கு இன்றியமையாத ஊழியன். 1 பவுன்டு ½ பவுன்டு பாக்கட்டுகளில் கிடைக்கும்.

"காந்தி"

சகல உலோகங்களையும் கண்ணாடி போல் பிரகாசிக்கச் செய்யும். இது ஒரு திரவ ரூபமான பாலீஷ்.

"ஷைன் ஆல்"

எல்லா உலோகங்களுக்கும் கண்கள் கவர பாலீஷை தரக்கூடிய ஒரு பாலிஷிங் துணி.

"ப்ரேமா"

இனிய பரிமளம் மிகுந்த டாய்லட் முக பவுடர்.

பினைல் (ஸிப்கோ)

தொத்து வியாதிகள் பரவ காரணமான கிருமி, ஈ, கொசுக்களை அறவே ஒழித்து துர்நாற்றங்களை போக்கி சுகாதாரத்தை பாதுகாக்க, இன்றியமையாதது.

"ஸ்டிக்ஸ்"

உடும்பைப்போல் காகிதங்களை ஒட்டும் பசை. அழகான பாட்டில்களில் கிடைக்கும்.

Stockists Agents Wanted.

எல்லாம் சுதேசியே.

'ஸிப்கோ' தயாரிப்புகள் குணத்தில் மிகுந்தவை.

தயாரிப்பவர்கள் :

ஸவுத் இந்தியன் ப்ராடக்ஸ் லிமிடெட்

மயிலாப்பூர், மதராஸ்.

P. Kothandaram Pillai

உயர்தர மரசாமான்கள் வியாபாரம்

HIGH CLASS
CABINET MAKER & UPHOLSTERER

Established in 1854

PONNUSAWMY PILLAI'S BUILDINGS

39 & 44, ESPLANADE WEST
(Rattan Bazaar)

P. T. MADRAS

Sure Safe Healer for Family use
Kills Septic Germs, Promotes Growth of
New Skin.

VANISH
Ringworm Cure

"வானிஷ்"
சர்மரோக நிவாரணி

முகப்பரு, வேனல் கட்டி, கக்கூஸ்பத்து,
கரப்பான், பித்தவெடிப்பு, தீப்பட்ட
புண் மற்றும் எல்லாவித சர்ம
ரோகங்களுக்கு சிறந்த
ஔஷதம்.

Prepd. by Dr. V. S. S. MONI & Brother,
National Pharmacy,
KARAIKUDI.

Fashion Insists on-

Smartness !

FOR MODERN SAREES

SHOP AT

RANGOON HALL

RANGOON MERCHANT

அழகு செய்வது தற்கால நாகரீக ஆடைகளே !

உயர்தர ஜவுளிக்கு
உத்திரவாதமுள்ள இடம்

ரெங்கோன் - - - ஹால்

கு. அ. அங்கமுத்து முதலியார்

பட்டு ஜவுளி வியாபாரம்

அம்மன் சன்னதி :: காரைக்குடி

சக்தி மலர்கள்

[சக்தி மலர்ப் பதிப்பு நூல்கள் தமிழ்மொழிக்கும், தமிழ் நாட்டிற்கும் ஏற்ற உயரிய நற்கருத்துக் களை எளிய நடையில் வெளியிட எழுந்தனவாகும்.]

சக்தி மலர் 1

லியோ டால்ஸ்டாய்

எழுதிய

இனி நாம் செய்யவேண்டுவது யாது?

மகாத்மா காந்தி

“நான் டால்ஸ்டாயின் புத்தகங்களைக் கவனஞ் செலுத்திப் படிக்கத் தொடங்கினேன். ‘இனி நாம் செய்ய வேண்டுவது யாது?’, ‘சுவிசேஷங்களின் சாரம்’ முதலிய டால்ஸ்டாயின் புத்தகங்கள் என் மனதைப் பெரிதும் கவர்ந்தன.”

விலை : அணா 12

★

சக்தி மலர் 2

உலகம் சுற்றும் தமிழன்

[ஸ்ரீ ஏ. கே. செட்டியார்]

மகாத்மா காந்தியின் வாழ்க்கையைச் சினிமாப் படமாக சென்னை, டாக்குமெண்டரி பிலிம்ஸார் தயாரித்துள்ளார்கள். இவர்களின் பிரதிநிதியாக ஸ்ரீ ஏ. கே. செட்டியார் தென்னாப்பிரிக்கா, இங்லாந்து, யூரோப், அமெரிக்கா, ஜப்பான் முதலிய நாடுகளுக்குச் சென்று சுற்றுப் பிரயாணம் செய்தார். இவருடைய அநுபவங்களைத் தெளிவான, எளிய நடையில் எழுதியளித்திருக்கிறார்.

விலை : அணா 12

★

சக்தி மலர் 3

நிர்மலகுமாரி

ஸ்ரீ காழி. சிவ. கண்ணுசாமி

எழுதியது

வாழ்வைக் கொண்டே வாழ்விற்கு இன்ப மளிக்கும் கதை! பொருளை விட்டகலாத சொற்றொடர்கள், செம்பாகமான நடை, ஆவலை எழுப்பும் வேகம், வியப்பைத் தூண்டும் காட்சிகள் ஆகிய இவை யெல்லாம் சேர்ந்துள்ள இந்நூல் இப்போது வெளிவந்துள்ள மிகச் சிறந்த தமிழ் நாவல்கள் சிலவற்றுள் ஒன்றாகும்.

விலை : அணா 12

சக்தி மலர் 4

ஸ்ரீ சரத் சந்திர சட்டர்ஜி எழுதிய

அசலா [கிருஹதாஹ்]

[ஸ்ரீ ஷண்முகசுந்தரம் மொழிபெயர்ப்பு]

இந்நூலில், இதயத்திலெழும் பலவித உணர்ச்சிகளைப் படம் பிடித்துக் காட்டுகிறார். மூலத்தின் சுவை குன்றாது அழகான நடையில் மொழிபெயர்க்கப் பெற்றிருக்கிறது.

விலை : ரூ. 1/8.

★

சக்தி மலர் 5

காந்தித் தாத்தா கதை

ஸ்ரீமதி காவேரி வெங்கட்ராமன்
ஸ்ரீ எஸ். ஆர். வெங்கட்ராமன்

இவர்களால் இயற்றப் பெற்றது

முதியோர் கல்வி அபிவிருத்திக்காகவும் சிறுவர் அறிவைப் பெருக்கவேண்டியும் பொதுவாக அனைவருக்கும் பயன்பட வேண்டியும் எழுதப்பட்டது இந்தப் புத்தகம். அருமையான பல படங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. படிக்கப் படிக்கத் தெவிட்டாத, இனிய எளிய நடையில் எழுதப் பெற்றிருக்கிறது.

விலை : அணா 8

★

அச்சில்

ருஷிய மகான் டால்ஸ்டாய் எழுதிய

போரும் காதலும் I

எனும் அற்புத நாவலின் தமிழ் மொழிபெயர்ப்பை, பெ. திருகூடசுந்தரம் பிள்ளை தமிழ் மக்கட்கு அளித்துள்ளார்.

விரைவில் எதிர்பாருங்கள்!

சக்தி காரியாலயம்

46, முத்துமாரி செட்டித் தெரு, சென்னை.

மதிப்பிலும் உழைப்பிலும் கியாதிபெற்றதும் என்றைக்கும்

உத்திரவாதமுள்ள

சைகிள்



BEESTON—HUMBER

பீஸ்டன் ஹம்பர் இதைவிட சிறந்த சைகிள் உங்களால் வாங்கமுடியாது. ஒவ்வொரு பாகமும் நன்கு பரீக்ஷைப் பார்த்து தேர்ச்சி பெற்றவைகள்.

சென்னை மாகாணம், திருவாங்கூர், கொச்சி, மைசூர் சமஸ்தானங்களுக்கும் ஏஜண்டுகள் :—

தி பாபுலர் சைகிள் இம்போர்ட்டிங் கம்பெனி

9, பிராட்வே — மதருஸ் — P. B. No. 274

தந்தி : "கல்ச்சர்" திருச்சி — பாக்டரி & பிராஞ்சு : ரங்கூன்

TRADE MARK

தோடு சைஸ்
கல்ச்சர் வைரம்
1-க்கு அணா 8

Regd No. 1983

TRADE MARK

பேசரி சைஸ்
கல்ச்சர் வைரம்
1-க்கு அணா 6

தங்கமெடலும், சர்டிபிகேட்டும் பரிசுபெற்ற பர்மா போட்டோ மார்க்

ஒரிஜினல் கல்ச்சர் வைரங்கள்

போலி கல்ச்சர் வைரங்கள் வாங்கி ஏமாறமல் எமது "பர்மா போட்டோ ஒரிஜினல் கல்ச்சர் வைரங்களை" வாங்கித் திருப்தி ஆகும்படி கோருகிறேன். எலக்டிரிக் மின்சார சக்தியால் நூதன வைர முறையில் அசல் சீமைக் கமலத்திற்கு சமானமுள்ள பூரிப்பும், பல வர்ணங்களுடன் ஜோலிக்கக் கூடியவை.

ஒரிஜினல் டைனமோ வைரங்கள் தோடு சைஸ் வைரம் 1-க்கு ரூ. 1–0–0

"பர்மா ஸ்டார் வைரங்கள்" ரங்கூன் கமலங்களில் எல்லா க்வாலிடிகள், அசல் பவுன் தங்கத்தில் தயார் செய்த கியாரண்டியான கல்ச்சர் வைர நகைகள், லோலக், தோடு முதலியவைகள் விலை சரசமாக கிடைக்கும். அன்பர்கள் ஒருமுறை வாங்கித் திருப்தி அடையவேணுமாய்க் கோருகிறேன். பர்மா போட்டோ மார்க் "ஒரிஜினல் கல்ச்சர் வைரங்கள்" தான் மேலானவை. ஆகையால் அன்பர்கள் பர்மா போட்டோ மார்க்கை கவனித்து வாங்கவும்.

(கேட்லாக் இனும்) **சொ. அருணாசலம் செட்டி** (கேட்லாக் இனும்)

ஒரிஜினல் கல்ச்சர் வைர வியாபாரம், பெரிய கடைவீதி, திருச்சினாப்பள்ளி.



Edited, Printed and Published by V. Govindan at Shakti Press Limited
(Shanti Press), 46, Muthumari Chetti Street, G.T., Madras. Joint Editor: T. J. Ranganathan.